வாரப் பதிப்பு விலை சதம் 20

தலைமைத் தபால் நிலையத்தில் செய்திப் பத்திரிகையாகப் பதிவு செய்யப்பட்டது

# சுதந்திரன்

SUTANTIRAN

194 A, BANDARANAIKE STREET, COLOMBO-12.

194 ஏ, பண்டாரநாயக்க வீதி, கொழும்பு-12.




புத்தகம் 17 | திருவள்ளுவர் ஆண்டு 1994 புரட்டாதி திங்கள் 13-ம் நாள் (29—9—1963) ஞாயிற்றுக்கிழமை ஜமா. அவ் 10 | இதழ் 18

# தலைவர்களின் பாத யாத்திரை

## கிராமம் கிராமமாகச் சென்று மக்களைத் தட்டியெழுப்புவர்

### தீண்டாமை ஒழிக்கத் தீவிர பிரச்சாரம்

தமிழரசுத் தலைவர்களின் பாத யாத்திரை ஒக்டோபர் 2ந் திகதி காந்தியின் அஸ்திகள் கரைக்கப்பட்ட புனித இடமான கீரிமலையிலிருந்து ஆரம்பமாகிறது. அவர்கள் யாழ்ப்பாண மாவட்டத்திலுள்ள ஒவ்வொரு கிராமத்துக்கும் கால் நடையாகச் சென்று கிராம மக்களை நேரிடையாகச் சந்தித்துப் பேசுவார்கள் என்று அறியப்படுகிறது. நேரடி நடவடிக்கைக்கான ஆயத்தங்களுடன், தீண்டாமையை அகற்றும் முகமாகச் சமபந்தி போசனமும் ஆங்காங்கே நடைபெறும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. காந்திமகான் பிறந்த தினமாகிய ஒக்டோபர் 2-ந் திகதி பாத யாத்திரை ஆரம்பமாவது குறிப்பிடத்தக்கது.

தமிழரசுக் கட்சியின் அறிந்த அறப்போராட்டத்தின் முன்னோடியாக நடைபெற விருக்கும் பகிஷ்கார இயக்கம் பற்றிய பூர்வாங்க ஏற்பாடுகள் யாவும் முடிந்து விட்டன, என்று நமது யாழ்ப்பாண நிருபர் அறிவித்துள்ளார்.

சிங்களத்தில் கடமை பார்ப்பதற்காக வடக்குக் கிழக்கு மாகாணங்களில் செயலாற்றும் அரசாங்க ஊழியர்களைச் சமூக ரீதியில் புறக்கணிக்கும் இயக்கம் முதன் முதலில் யாழ்ப்பாண மாவட்டத்தில் தான் ஆரம்பமாகும்.

(8ம் பக்கம் பார்க்க)

## தியாகத்திற்குத் தயாராக இருங்கள்

### அரசாங்க ஊழியர்களுக்கு அ. எ. வி. சங்கம் வேண்டுகோள்

அமைச்சரவை முடிவை யடுத்து அவசரமாகக் கூடிய அரசாங்க எழுது வினைஞர் சங்கத்தின் செயற்குழுக் கூட்டத்தில், சங்கத்தின் பழைய முடிவையே மீண்டும் வலியுறுத்துவதாகவும், அம்முடிவைக் கடைப்பிடிப்பதன்மூலம் பதவி இழப்பு உள்ளிட்ட எல்லாவிதத் தியாகத்திற்கும் தயாராக இருப்பதாக முடிவு செய்யப்பட்டுள்ளது. இத்தகைய தியாகத்திற்குத் தயாராக இல்லாதவர்கள் சேவையிலிருந்து வெளியேறி, வெளியிலிருந்து போராட்டத்தில் பங்குகொள்ளுமாறு வேண்டப்பட்டுள்ளனர்.

அத்தீர்மானம் மேலும் கூறுவதாவது!

26-9-63-ல் கூடிய அவசர செயற்குழுக் கூட்டத்தில், 1-1-64 தொடக்கம் "சிங்களம் மட்டும்" சட்டத்தை அமுல் செய்வது பற்றி 23-9-63 இல் வெளியிடப்பட்ட அமைச்சரவை முடிவுகளை ஆராய்ந்த அரசாங்க எழுதுவினைஞர் சங்கம், அந்த முடிவுகளின் உண்மையான நோக்கம் தமிழ் பேசும் அரசாங்க ஊழியரை அரசாங்க சேவையிலிருந்து முற்றாக ஒழித்துக் கட்டுவதேயன்றி

(9ம் பக்கம் பார்க்க)

## தமிழர் மீது நடவடிக்கையா?

திருகோணமலை "பெட்றிக்" கோட்டையில் புத்தர் சிலையொன்றை இராணுவத்தைச் சேர்ந்த தமிழர் ஒருவர் உடைத்து விட்டதாகக் குற்றஞ்சாட்டி அவர் மீது நடவடிக்கை எடுப்பதாக அறியப்படுகிறது.

ஆனால், அதே கோட்டையில் நீண்டகாலமாக இருந்து வந்த பிள்ளையார் சிலையொன்றும் உடைக்கப் பட்டுள்ளது. இச் சிலையை உடைத்தவர் இராணுவத்தைச் சேர்ந்த பௌத்த சிங்களவர் ஒருவர் என்று கூறப்படுகிறது. அவர் மீது இற்றை வரை எதுவித வழக்கோ அல்லது நடவடிக்கையோ எடுக்கப்பட வில்லை என்றும் தெரிகிறது.

## தமிழ்ப் பாடசாலையை மூட உத்தரவு

### பெற்றோர்களின் கிளர்ச்சி

வத்தளையில் உள்ள ஒரேயொரு அரசினர் தமிழ் பாடசாலையை 1964 ஜனவரி முதற் திகதி முதல் மூடிவிடும்படி அரசாங்கம் உத்தரவிட்டுள்ளதாக அறியப்படுகிறது. இந்த உத்தரவை எதிர்த்துப் பெற்றோர் கிளர்ச்சி செய்கின்றனர்.

வத்தளையில் ஆறு சிங்களப் பாடசாலைகளும் ஒரு தமிழ்ப் பாடசாலையும் உண்டு. தமிழ்ப் பாடசாலையில் 400க்கும் மேற்பட்ட தமிழ் பிள்ளைகள் படிக்கின்றனர்.

அந்தத் தமிழ்ப் பாடசாலையை அடுத்த ஆண்டு ஜனவரி முதற் திகதி முதல் மூடிவிடும்படி அரசாங்கம் உத்தரவிட்டிருப்பதாகக் கூறப்படுகிறது. இதனால் 400க்கு மேற்பட்ட பிள்ளைகள் படிப்பின்றி தெருவிலே விடப்படுவர். மாபோலையிலுள்ள தமிழ்ப்பாடசாலைக்குப் போகும்படி இப் பிள்ளைகளுக்குக் கூறப்படுகிறதாம்.

மாபோலை பாடசாலையோ ஆறு மைலுக்கு அப்பாலுள்ளது. அங்கே பிள்ளைகளை அனுப்புவது பெற்றோர்களுக்கு பெரும் சங்கடத்தை ஏற்படுத்தும். ஏககாலத்தில் 400 பிள்ளைகளுக்கு இடம் கொடுக்கக்கூடியதாக மாபோலை பாடசாலையும் இல்லையாம்.

தங்கள் பிள்ளைகளின் படிப்பைக் கெடுக்கும் இந்தப் பாரபட்சமான அரசாங்க நடவடிக்கையால் பெற்றோர்கள் கொதிப்படைந்துள்ளனர். அவர்கள் இது சம்பந்தமாக மகஜர்கள் அனுப்பியுள்ளனர் என்றும் தெரிகிறது. இப்பாடசாலை மூடப்படுவதை நிறுத்த தக்க நடவடிக்கை எடுக்குமாறு தமிழரசுத் தந்தையைக் கேட்டுக் கொள்வதென்றும் பெற்றோர்கள் முடிவு செய்துள்ளனர் என்று அறியப்படுகிறது.

## சுதந்திரன் பேச்சுப் போட்டி

கொழும்புப் பகுதிக்கான இடையிறுதிப் போட்டி 28ம் திகதி காலை 9 மணிக்கு 34, விவேகானந்த மேடு, கொழும்பு-13 என்ற முகவரியிலுள்ள விவேகானந்த சபை மண்டபத்தில் நடைபெறுகிறது. அட்டன் பகுதிக்கான இடையிறுதிப் போட்டி 5-10-63 சனிக்கிழமை காலை 10 மணிக்கு அட்டன் கைலண்ட்ஸ் கல்லூரியில் நடைபெறும். முன்னர் குறிப்பிட்டது போல் இந்து மகா சபை மண்டபத்தில் போட்டி நடைபெற மாட்டாது. போட்டிப் பொறுப்பாளராகத் திரு. இ. நாகேந்திரம் கடமையாற்றுவார். அவரின் முகவரி 117 1/8, டிம்புள்ள வீதி, அட்டன். கண்டிப் பகுதியிலுள்ளவர்களும் அட்டனில் நடைபெறும் போட்டியிலேயே கலந்து கொள்ள வேண்டும்'

பதுளைப் பகுதிக்கான இடையிறுதிப் போட்டி 5-10-63 சனிக்கிழமை காலை 10 மணிக்குப் பதுளை தேவாலய வீதியிலுள்ள சரஸ்வதி வித்தியாசாலை மண்டபத்தில் நடைபெறும். போட்டிப் பொறுப்பாளராகத் திரு. தமிழோவியன் கடமையாற்றுவார்.

அவரின் முகவரி: தமிழோவியன் 180, லோவர் வீதி, பதுளை என்பதாகும்.

மட்டக்களப்பு, திருகோணமலை, மன்னார், வவுனியா ஆகிய இடங்களுக்கான இடையிறுதிப் போட்டி விபரங்கள் அடுத்த இதழில் வெளியாகும்.

பேச்சுப் போட்டி
ஆசிரியர்

## பகிஷ்கார இயக்கத்திற்கு பூரண ஆதரவு

### இ. த. அ. க. கொழும்புக் கிளை முடிவு

"தமிழ் பேசும் மக்கள் மத்தியில் உள்ள சலவைத் தொழிலாளர்கள், சிகை அலங்காரத் தொழிலாளர்கள் மற்றும் அன்றாட வாழ்க்கை வசதிகளைச் செப்பனிட உதவும் தொழிலாளர்கள் அனைவரும் நடக்கவிருக்கும் பகிஷ்கரிப்பு இயக்கத்திற்குப் பூரண ஆதரவு கொடுக்க வேண்டும்" என்ற கருத்துப்பட ஓர் துண்டுப் பிரசுரம் வெளியிடுவதாகக் கடந்த வாரம் கூடிய இலங்கைத் தமிழரசுக் கட்சியின் கொழும்புக் கிளை முடிவு செய்துள்ளது.

இலங்கைத் தமிழரசுக் காரியாலயத்தில் நடைபெற்ற கொழும்புக் கிளையின் கூட்டத்தில் மேலும் பல முக்கிய தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

ஒவ்வொரு உறுப்பினரும் தமிழ்ப் பிரதேசத்திலுள்ள தங்கள் நண்பர்கள் உறவினர்களுக்குப் பகிஷ்கார இயக்கத்தில் தீவிரமாக ஈடுபடும்படி, வேண்டியனவு கடிதங்களும் அஞ்சலட்டைகளும் அனுப்ப வேண்டும். பகிஷ்கார இயக்கத்தினால் கொழும்பு வாழ் மக்கள் பாதிக்கப்பட மாட்டார்கள் என்றும் கொழும்பு வாழ் தமிழ் பேசும் மக்கள் பகிஷ்கார இயக்கத்திற்குப் பூரண ஆதரவு கொடுக்கிறார்கள் என்பதை எடுத்துக் காட்டுவதாகவும் இந்நடவடிக்கை மேற்கொள்ளப்படுகிறது.

(9-ம் பக்கம் பார்க்க)

இலங்கை வாழ் தமிழ் பேசும் மக்களின் உரிமைக் குரல்

# திருமலைத் தீரர் மறைவுக்கு
## தமிழகத் தலைவர்களின் இரங்கல் செய்தி

திருமலைத் தீரர் திரு. இராசவரோதயத்தின் மறைவு ஈழம் வாழ் தமிழ் பேசும் மக்களுக்கு உண்மையிலேயே ஒரு பேரிழப்பாகும் என்றும், அவர் இழப்பால் ஏற்பட்ட பெருவெளியை அடைக்க ஈழம் வாழ் தமிழ் பேசும் காளையரும் கன்னியரும் கண்ணிலே வழியும் நீரைத் துடைத்துக் கொண்டு செயலாற்ற முன் வரவேண்டும் என்றும், தமிழ் நாட்டுத் தலைவர்கள் திரு. இராசவரோதயத்தின் மறைவு குறித்து அனுப்பிய இரங்கற் செய்தியில் வேண்டியுள்ளார்கள்.

இலங்கைவாழ் தமிழ்ப் பெருங்குடி மக்களின் விடுதலை வாழ்வு மலரவும், தமிழ் நிலையான ஆட்சி மொழியாகத் திகழவும் அரும்பாடு பட்டு வந்த மாபெரும் தலைவர்களில் ஒருவரான உயர்திரு ந. இ. இராசவரோதயம் அவர்கள் இயற்கை எய்தினார்கள் என்ற செய்தி அறிந்து மிகவும் துக்கமும், துயரமும் கொண்டேன்.



திரு. இரா. நெடுஞ்செழியன்

வெண்மணைத் திரண்டு வரும் போது தாழி உடைவது போல, தமிழ்ப் பெருங்குடி மக்களிடத்தே விடுதலை வேட்கையும், உரிமை வேட்கையும் திரண்டுவரும் காலத்தில், தாழி போன்ற தலைவர்கள் மறைவது ஆற்றொணாத் துயரை அளிப்பதாக இருக்கிறது.

நான் இலங்கைக்கு வருகை தந்த போது திருக்கோணமலையில் உயர்திரு இராசவரோதயம் அவர்களைக் கண்டு அளவளாவும் வாய்ப்பினைப் பெற்றேன். இனிய முகத்தோடு, இனிய சொல்லால், அன்போடு பழகும் தன்மை அவரிடம் இருக்கக் கண்டேன். அறிவு-ஆற்றல்-ஊக்கம்-உணர்ச்சி அவரிடம் மிளிரக் கண்டு வியந்தேன். அவரால் ஏற்படும் பேரிழப்பை ஈடுகட்ட வேண்டிய பெரும் பொறுப்பு இலங்கை வாழ் தமிழ் இளைஞர்களைச் சார்ந்ததாகும். விழிகளில் வழியும் கண்ணீரைத் துடைத்துக் கொண்டு கடமையாற்றக் கட்டிளங் காளையரும், வீறுகொண்ட வீராங்கனையரும் புறப்படுவார்களாக! வாழ்க திரு. இராசவரோதயம் அவர்களின் பெயர்! வாழ்க விடுதலை வீரர்களின் வீர உள்ளம்! வளர்க அவர் தம் விடுதலை முயற்சி! வெல்க அவர் தம் தொண்டு!

—இரா. நெடுஞ்செழியன்

### ஆயிரங்கால் மண்டபம்

நாட்டிற்கும், மொழிக்கும், மக்களுக்கும் சிறை புகுந்துங் கூடப் பணியாற்றிய அறிஞர் திரு. இராசவரோதயத்தின் மரணச் செய்தி என்னைத் திடுக்கிடச் செய்தது. பெரிதும் வருந்தினேன்.

தாய்த் தமிழகத்திலேயும், சேய்த் தமிழகத்திலேயும் கடல் பிரித்துக் காட்டினாலும் மொழி ஒன்றுபடுத்திக் காட்டுகிறது. அதனால்தான் மொழித் துன்பம் ஒரே நேரத்தில் இரு நாடுகளிலும் ஏற்பட்டுள்ளது போலும்.

இன விடுதலைப் போராட்டமும், மொழி விடுதலைப் போராட்டமும் நடந்து கொண்டிருக்கும் இக்காலத்தில் தன்னலமற்றுத் தமிழுக் குழைக்கும் தமிழ்ப் பெருந்தலைவர்கள் அடுத்தடுத்து மறைந்து வருவது பெரிதும் வருந்தத் தக்கது.

தமிழ் மக்களின் தனிப் பெருந் தலைவர் உயர்திரு. செல்வநாயகம் அவர்களின் தலைமையில் இயங்கி வருகின்ற தமிழரசுக் கழகமானது 'நான்கு கால்களும் ஒடிந்து கிடக்கின்ற ஒரு கயிற்றுக் கட்டில்' போன்று அதன் பகைவர்களிற் சிலருக்குத் தோன்றலாம். உண்மையில் 'அது ஒரு ஆயிரங் கால் மண்டபம்' என அவர்களை உணரச் செய்ய வேண்டும்.

கழகத்தின் நான்கு பெருந் தூண்கள் சாயினும், மற்ற 996 தூண்களால் தாங்கி நிற்கும் அம்மண்டபம் தமிழுக்கும், தமிழர்க்கும் வாழ்வும் திறனும் தந்து வளம் பெறச் செய்யும் என நம்புவதே இப்போது ஆறுதல் பெறும் வழியாகும்.

கட்சித் தலைவனும், மக்கள் நண்பனும், மொழி அறிஞனும், சிறைக் கைதியாய், சைவத் தொண்டனும் ஆண்டென் பல அரும்பணியாற்றி மறைந்த அன்பர் திரு. இராசவரோதயத்தின் ஆன்மா சாந்தியடைவேண்டுமெனவும், அவர்களது குடும்பம் ஆறுதல் பெற வேண்டும் எனவும், ஆட்சியில் உள்ளவர்கள் நடுநிலை பிறழாமல் ஆள வேண்டும் எனவும், மக்கள் துயருறாமல் வாழ வேண்டும் எனவும் நாம் அனைவரும் இறைவனை வேண்டுவோமாக.



திரு. கி. ஆ. பெ. விசுவநாதம்

தலைவர்களை இழந்து தவிக்கும் தமிழ் மக்களாகிய நாம் அனைவருமே துன்பத்திலும், துயரத்திலும் உழன்று கொண்டிருக்கின்றோம். யாருக்கு யார் ஆறுதல் கூறுவது? மெல்ல நகர்ந்து செல்லும் காலம்தான் நம் அனைவருக்கும் நல்லாறுதல் அளிக்க வேண்டும்.

தங்கள் அன்பிற்குரிய,
கி. ஆ. பெ. விசுவநாதம்

### தமிழ் காக்கத் தலைவர்கள் தேவை

இலங்கைத் தமிழரின் தலைவரும், திருகோணமலைத் தொகுதிப் பாராளுமன்ற உறுப்பினருமான திரு. ந. இ. இராசவரோதயம் அவர்கள் இயற்கை எய்திய செய்தி அறிந்து பெரிதும் வருந்துகின்றேன்.



திரு. எம். ஜி. ராமச்சந்திரன்

ஈழநாட்டில் தமிழ்த் தொண்டு செய்து வந்த

(15-ம் பக்கம் பார்க்க)


### ஆனந்தா லேகியம்

இதன் குணத்தை ஒரே நாளில் அறிந்து கொள்ளலாம்.

நிர். 174, ஆனந்தா வைத்தியசாலை என்ற விலாசத்துடன் இந்த அடையாளத்தை பார்த்து வாங்குங்கள்.

ஆனந்தா லேகியம் நாள் தோறும் மலஜலத்தை சுகமாகக் கழித்து அசதி, சோம்பல் மேல் கால், கை, கணுக்களில் வலிகள், அஜீரணம், பசியின்மை, பித்த வாய்வு, புளியேப்பம், வயிற்றுப் பொருமல், வயிற்று வலி, இடுப்பு வலி, நெஞ்சு வலி, சிரங்கு பற்றுகள், சொறி, தேமல், நெஞ்சு எரிவு, தேகம் காந்தல், கண் எரிச்சல், உள்ளங் கால், கை எரிச்சல், வாய்வுக் குத்து நெஞ்சடைப்பு, சகல வித வாய்வுகள், வாதக் கடுப்புகள் முதலிய அனேக வியாதிகள் தீரும். சிலகாலம் சாப்பிட்டு வந்தால் மூலவியாதி அடியோடு தொலைந்து போகும். பத்தியமில்லை.

பெரியது ரூபா 5-75. சிறியது ரூபா 3-00.

இத்துடன் "ஆனந்தா தைலத்தை"த் தேய்த்து வந்தால் அதிக உஷ்ணம், கண் எரிச்சல், மூலச் சூடு, பித்த மயக்கம், கை கால் எரிவு முதலான அநேக வியாதிகளை நீக்கி மூளைக்கு குளிர்ச்சியையும் கண்ணுக்குப் பிரகாசத்தையும் கொடுக்கும். சகல வியாதிகளுக்கும் விபரமடங்கிய. கேட்லாக் எழுதினால் இனாமாக அனுப்புவோம்.

பெரியது ரூபா 5-50. சிறியது ரூபா 3.00.
வி. பி. பி. செலவு வேறு.

தயாரிப்பாளர்:
ஆனந்தா வைத்தியசாலை,
நிர். 174, செட்டியார் தெரு. கொழும்பு—11.


## கவிதைப் பூங்கா

### "இமைப்பொழுதும் உறங்குவதோ?"

—உதயகவி—

கன்னல்தரும் தேன்சுவையும் தித்திப்பான
  கற்கண்டும் முக்கனியும் ஒருங்கு சேர்ந்த
இன்னமுதும் ஈடாமோ தமிழ்ச் சுவைக்கு
  எடுத்தியம்பக் கூடுமோ இதன்பெருமை
மின்னலிடைச் செந்தமிழாள் மேனியெல்லாம்
  வெந்துருகி வாடுகின்றாள் இலங்கை தன்னில்
எண்ணமெலாம் அவள்நினைவு ஆனேன் இன்று
  இமைப்பொழுதும் உறங்குவதோ? எனது கண்கள்.

முன்னமொரு காலத்தில் மூவேந்தர்க்கு
  முடிதரித்து மகிழ் வளித்த முதல்வி எங்கள்
அன்னையெனும் செந்தமிழாள் அவனி போற்றும்
  ஆயகலை அறுபத்து நான்கு மீந்த
பொன்னிமலர்ப் பாவையவள் புலவர்க்கெல்லாம்
  புகழ்மாலை சூடுகின்ற புனித நங்கை
இன்னல்பல அடைகின்றாள் என்றால் நாமும்
  இமைப்பொழுதும உறங்குவதோ இந்தமண்ணில்.

தேனருவி பாலாறு தேங்கியோடும்
  தென்றல்வந் தருகணைந்து கீதம் பாடும்
கானமயில் ஆடிவரும் கன்னி மாடம்
  கங்குலிலும் சோதிதரும் கானங்கேட்கும்
ஏனென்றும் நீங்காது எந்தனுள்ளம்
  என்னருமைத் தாயாரின் துயர்நினைந்தால்
ஈனமெமைச் சூழ்வதை எதிரே கண்டும்
  இமைப்பொழுதும் உறங்குவதோ எனது நல்வீர்.

வான்புகழும் வள்ளுவனின் குறளும் என்றும்
  வாழுமணி மேகலையும் சிலம்பும் சந்தத்
தேன்கமழும் திருமணி வாசகமும் கம்பன்
  செப்பிய இராமாயணமும் பத்துப்பாட்டும்
ஏன்தமிழா? நிறைந்தாய்? இவைகளுந்தன்
  எழிலன்னை பெற்றெடுத்த செல்வம் அன்றோ
ஈங்குனது மடமைதீருள் நீங்குமட்டும்
  இமைப்பொழுதும் உறங்குவதோ எனது உள்ளம்.

அன்புமொழிப் பால்கொடுத்த ஆரணங்கு
  அவனியெலாம் ஆட்சிசெய்த பேரணங்கு
துன்பமதைக் கண்டறியாத் தோகைநல்லாள்
  துயர்கொண்ட நிலையதனை நேரில் கண்டும்
இன்பமுடன் வாழுவதோ ஈழம் தன்னில்
  இணையில்லாப் புலவீர்காள் எழுந்து வாரீர்
வன்பகையை முறியடித்து வெற்றி காண்போம்
  வாழ்வரசி தமிழணங்கு மகிழ இன்றே.

### கடமையாற்ற முந்துவோம்

ந. டே. குணரெத்தினம்

காந்தி சொன்ன சாந்தி மார்க்கம்
காட்டும் ஈழக் காந்தியின்
கட்டளைக்குட் பட்டு வெல்லக்
கடமையாவும் ஆற்றுவோம்.

சிங்களத்தைக் கற்று விட்டால்
சீர் எமக்கு உண்டெனு
அங்கலாய்த்துக் கருமமாற்றும்
அசடரை விரட்டுவோம்.

எங்கும் தமிழ் எல்லாம்தமிழ்
என்று சங்கு ஊதுவோம்
பங்கம் எம் மொழிக்கெழாது
பார்த்துக் கொள்ள முந்துவோம்.

### 'சுதந்திரன்'
### புதிய சந்தா விபரம்

தபால் கட்டணம் அதிகரித்திருப்பதன் காரணமாக, பின்வருமாறு சந்தா உயர்த்தப் பட்டிருக்கிறது.

ஒரு வருடம் ரூபா 14-00
ஆறு மாதம் ரூபா 7-50

நிர்வாகி
'சுதந்திரன்'




மா. உ. கந்தையா, அட்டன்

கே: எதிர்வரும் திருமலை இடைத் தேர்தலில் திருமதி பண்டாரநாயக்கா போட்டியிட்டால்......?

ப: அவர் தமது செல்வாக்கைப் பரிசோதித்துப்பார்க்க இதுவரை விரும்பவில்லை—இனியும் விரும்பமாட்டார்.

ஃ

வே. மகேந்திரன், கொழும்பு-12

கே: சிங்கள அரசாங்கத்துக்குச் சேவை செய்வதை விட மலையகத் தமிழ் மக்களுக்குச் சேவை செய்ய விரும்புகிறேன். இதற்கு ஒரு வழி சொல்ல முடியுமா?

ப: இ. தொ. கழகத்தில் சேர்ந்து மலையகம் சென்று தொண்டாற்றுங்கள். இரவு பகல் 24 மணி நேரம் பணியாற்ற வேண்டுமானாலும், அங்கே அதற்கான தொண்டு உண்டு.

ஃ

சா. வீரப்பன், கொழும்பு-4.

கே: இவ்வாரம் கொழும்பில் பலத்த மழை பெய்ததே! கால நிலையில் ஏன் இந்தத் திடீர் மாற்றம்?

ப: காங்கிரஸ் தலைவர் ஒருவர் அட்டனில் முழக்கம் செய்ததாகவும், கர்ஜனை புரிந்ததாகவும் ஒரு தினசரி செய்தி வெளியிட்டிருந்ததல்லவா? இந்த இடி முழக்கத்தின்—மேக கர்ஜனையின்... விளைவுதான் இந்த மழை என்று பேச்சு அடிபடுகிறது.

ஃ

க. மு. நாசன், நெல்லிப்பளை

கே: தமிழில் விஞ்ஞானக் கல்வி நல்லதா, கூடாதா?

ப: நல்லது, விஞ்ஞான நூல்கள் சரியானபடி மொழி பெயர்க்கப்பட்டிருந்தால். ஆனால் விஞ்ஞான வளர்ச்சியின் வேகம் மொழி பெயர்ப்பு வேகத்தை விடத் துரிதமாகச் செல்லுகிறதே!

ஃ

எஸ். எம். தாஹிம், கொழும்பு-12

கே: ஒருவர் அறுபது (60) வயதில் இருபது வயதுப் பெண்ணை மணக்கப் போகிறார். இது ஏற்கக் கூடியதா?

ப: இது தவறு. திருமண வாழ்க்கை மகிழ்ச்சிகரமாக இருக்க வேண்டுமானால் வயதுப் பொருத்தம் முக்கியமாகும். ஆனால் இளம் பெண்களை மணமுடிப்பதால் வயோதிபர்கள் நீர்க்காயுள் பெறுவார்களாம்.

ஃ

ஆர். லெட்சுமணன், பலாங்கொடை.

கே: வருங்காலத்தில் மலை நாட்டுத் தமிழ் மக்கள் எல்லோரும் தமிழரசுக் கட்சியில் சேர்ந்து விட்டால், தொண்டமான் என்ன செய்வார்?

ப: அவரும் கட்சியில் சேருவதைத் தவிர வேறு வழி இருக்காது!

ஃ

எஸ். எம். இராசமாணிக்கம், பலாங்கொடை.

கே: மலைநாடுகளில் வசிக்கும் படித்த வாலிபர்கள் தோட்ட வாரியாக ஒன்று சேர்ந்து, நல்லொழுக்கங்களையும், தமிழரின் உரிமைகள் என்ன என்பதையும் விளக்கும் சிறு சிறு நாடகங்களை 'டிவிஷன்' வாரியாக நடத்தினால், கூடிய சீக்கிரத்தில் உரிமைகள் எல்லாம் கிடைக்கும் என நம்புகிறேன்.

ப: நாடகங்கள் மூலம் உரிமைகளைப் பெற முடியாது. ஆனால் உரிமை உணர்ச்சியை ஊட்டலாம்.

ஃ

ச. த. பழனிவேல், நோர்வூட்.

கே: எங்கள் இல்லத்தின் அருகிலுள்ள ஒரு பௌத்தாலயத்தில் எல்லாவற்றையும் சிங்களத்தில் எழுதி, காணிக்கை என்பதை மட்டும தமிழில் எழுதியிருக்கிறார்களே, இதன் மர்மம் என்ன?

ப: பணத்துக்காகச் சிங்களத்தைச் சிறிது விட்டுக் கொடுத்திருக்கிறார்கள்.

ஃ

க. பொன்னுத்துரை, ஈறற் பெரியகுளம்.

கே: வருங்காலத்தில் அனுராதபுரம் தலைநகரமாகுமென்று சில வதந்திகள் அடிபடுகின்றன; உண்மையா?

ப: உண்மைதான்! துட்டகைமுனு (துஷ்ட காமினி) மன்னன், அனுராதபுரத்தைத் தலைநகராகக் கொண்டு அகில இலங்கையையும் கட்டி ஆண்டாராம். அம்மாதிரியான ஒரு சிங்கள ஏகாதிபத்தியத்தை நிறுவவேண்டுமெனக் கனவு காணும் சிங்களவர் சிலர், தலைநகரை அனுராதபுரத்துக்குக் கொண்டுபோக வேண்டுமென்று வற்புறுத்துகின்றனர்.

> திருவாளர்
> **குயுக்தியார்**
> மே/பா சுதந்திரன்
> தபால் பெட்டி இல. 1183
> கொழும்பு-12.
>
> இம் முகவரியைக் கத்தரித்து தபால் அட்டையில் ஒட்டியனுப்பப்படும் வினாக்கள் மட்டுமே கவனத்திற்கு எடுக்கப்படும்.

ஃ

க. சு. பால்பாண்டி, கண்டி.

கே: காங்கிரஸ் தலைவர் ஒரு தமிழ்த் தினசரியைப் பாராட்டி சான்றிதழ் வழங்கியிருந்தாரே! பார்த்தீர்களா? அதில் ஒரு முக்கிய விஷயத்தைக் குறிப்பிட மறந்துவிட்டார். அது என்னவென்று சொல்லுங்கள் பார்க்கலாம்.

ப: பார்த்தேன்! அவர் மூச்சு விட்டாலும் அதற்கு ஒரு தலையங்கம் தீட்டும் பத்திரிகை அது. இந்திய யுத்த நிதிக்கு அந்தப் பத்திரிகை பல்லாயிரக் கணக்கில் பணம் திரட்டியதே, அதை சான்றிதழில் குறிப்பிட மறந்து விட்டார் என்று கூறுகிறீர்களா? இப்பொழுது அந்த விஷயம் நிதி மந்திரியின் கவனத்தைக் கவர்ந்துள்ளதாம்.

ஃ

ஆர். சுப்பிரமணியம், பொரலஸ்கட.

கே: கலையுலகில் இந்திய யுத்த நிதிக்கு முதலில் கொடுத்தது தமிழகமா வட நாடா?

ப: தமிழகமே! முதலில் 75,000 ரூபாயை அள்ளிக் கொடுத்தவர் எம். ஜி. ஆர். ஒருவரே!

ஃ

ரா. குமாரன், எலிங்டன் தோட்டம்.

கே: நான் தமிழும் ஆங்கிலமும் படித்த பாடசாலையில் இப்போது தனிச் சிங்களம் படிக்கச் சொல்லுகிறார்கள். இதற்கு என்ன செய்யலாம்?

ப: சிங்களத்தைப் பகிஷ்கரியுங்கள்.

ஃ

தமிழன், அட்டன்.

யாழ்ப்பாணத்தில் பெண் கொடுப்பவர் சிலர் கேட்கும் முதற் கேள்வி, மாப்பிள்ளை சிங்களத்தில் எந்த வகுப்பு சித்தியடைந்திருக்கிறார்என்பது. இதில்தான் சீதனமும் பெண் வீட்டாரின் முடிவும் தங்கியிருக்கிறது. ஏன் இவர்கள் சிங்கள மாப்பிள்ளைகளுக்கே பெண்களைக் கொடுக்கலாமே! இப்படிப்பட்டவர்களைத் தமிழ் இனம் என்ன செய்ய வேண்டும்?

ப: அவர்களைப் பகிஷ்கரிக்க வேண்டும்.

ஃ

வி. கருப்பண்ணன், பதுளை.

கே: ஒரு தினசரி, பத்திரிகா தர்மத்தையும் மீறி, சிறிய செய்திகளையும் பிரமாதப் படுத்தி, அட்டன் காங்கிரஸ் மகாநாட்டுக்காகத் தினசரி மலர்கள் வெளியிட்டுக்கொண்டிருந்ததே! ஏன்?

ப: உஸ்—! சோழியன் குடுமி சும்மா ஆடுமா?

ஃ

குமாரச்செல்வன், ஏழாலை-மேற்கு.

கே: "சிங்களம் மட்டும்" அமுல் செய்வது ஒத்திப் போடப்பட்டால், "சாத்விகமான பகிஷ்கரிப்பு இயக்கத்தை"த் தமிழரசுக் கட்சி ஒத்திப் போடுமா?

ப: சிங்களத்தை அமுல் நடத்துவதென அரசாங்கம் தீர்மானித்துவிட்டது. பகிஷ்கரிப்பை நடத்துவதெனத் தமிழரசுக் கட்சியும் தீர்மானித்து விட்டது.

கே: தொண்டமானும் மகாநாடு நடத்துகிறாரே!

ப: அவர் இ. தொ. கா. வின் ஆயுட் காலத் தலைவர். தனது தலைமையைப் புதுப்பித்துக் கொள்ள மகாநாடுகள் அடிக்கடி நடத்த வேண்டாமா?

ஃ

செல்வி. ஆர். திலகநந்தினி, துனுகலை.

கே: இலங்கையில் "நாம் தமிழர்" என்ற ஒரு கட்சி இருக்கின்றதா?

ப: இருக்கிறது—சிங்களப் பத்திரிகைகளின் அலுவலகங்களில்.

ஃ

சு. பாலகிருஷ்ணன், பம்பலப்பிட்டி.

கே: காதலிலே தோல்வியுற்ற பெண்ணொருத்தி இப்போ சகல ஆடவர்களுடனும் குதூகலமாக கூச்சமின்றி, நெருங்கிப் பழகுவதன் காரணம் என்ன?

ப: தட்டிக் கேட்கக் காதலன் ஒருவன் இல்லாததே காரணம்.

சி. பொ. ஈழத்துமணி, யாழ்ப்பாணம்.

கே: ஆட்சியாளரின் சிங்களம் நிறைவேற்றத்தை எதிர்த்து அரசாங்க ஊழியர்கள் முதல், துறைமுகம், தோட்டத் தொழிலாளர்கள் வரை இரண்டு கிழமைக்கு மேல் வேலை நிறுத்தம் செய்தால், அரசாங்கத்தின் நிலைமை என்னவாகும்?

ப: வேறு அரசாங்கம் பதவிக்கு வரும்.

ஃ

ஆர். எஸ். மாரியாய், தெரணியாகல.

கே: தமிழ் நாட்டின் முதல் அமைச்சர் திரு. காமராஜ் பதவியிலிருந்து விலகிக் கட்சியை வளர்க்கப் போகிறாராம்! அதனால் கட்சி வளர்ந்து விடுமா?

ப: கட்சி வளராது. ஆனால் ராஜிநாமாவால் அரசாங்கத்தின் தலையிடியொன்று தீரும்.

ஃ

இ. பொன்னம்பலவாணேசர், கொழும்பு-1.

கே: இறக்குமதிக்கட்டுப்பாட்டுக் கந்தோரில் ஆங்கிலத்தில் வேலை நடந்தும் நான் சிங்கள மூன்றும் வகுப்புப் பரீட்சை இந்த முறை எடுத்திருக்கிறேன். இரகசியமாக பரீட்சை எடுப்பவர்களின் நிலை என்ன?

ப: தமிழ் பேசும் மக்களால் அவர்கள் பகிஷ்கரிக்கப்படுவார்கள்.

ஃ

வி. கணேசன், சாவகச்சேரி.

கே: என் நண்பருக்குத் தமிழ் சரிவர எழுத வாசிக்கத் தெரியாததால் மிகவும் வருந்துகிறார். என்ன செய்யலாம்?

ப. நன்றாகத் தமிழ் எழுதுகிறீர். எனவே நண்பருக்குத் தமிழ் கற்றுக் கொடுக்க வேண்டியது உமது பொறுப்பு. நண்பர் சிங்களவரோ?

ஃ

கிஸ்மி ஜஸ்மின், பதுளை.

கே: வெள்ளத்தில் தன் மனைவியும் தாயும் இழுத்துச் செல்லப்படும்போது முதலில்யாரைக் காப்பாற்ற வேண்டும்?

ப: உங்கள் உயிரையும் பலி கொடுக்காமல், முதலில் யாரைக் காப்பாற்ற முடியுமோ அவரைக் காப்பாற்றுங்கள்.

ஃ

க. இரத்தினசிங்கம், கிளிநொச்சி.

கே: கல்யாணமான ஒரு பெண்ணைக் காதலிக்கிறாரே ஒருவர், இது நியாயமா?

ப: அந்தப் பெண்ணின் கணவன் விவாகரத்துச் செய்திருந்தால், அல்லது இறந்திருந்தால்—காதலிப்பது நியாயமே!

# சுதந்திரன் பேச்சுப் போட்டி

## யாழ்ப்பாண மாவட்ட இடையிறுதித் தேர்வு முடிவுகள்

யாழ்ப்பாண மாவட்டத்திற்கான சுதந்திரன் பேச்சுப் போட்டியின் இடையிறுதித் தேர்வு சென்ற 21-9-63ல் யாழ்ப்பாணம் கொட்டடி நமச்சிவாய வித்தியாசாலை மண்டபத்தில் திரு. புதுமைலோலன் தலைமையில் நடைபெற்றது. நடுவர்களின் முடிவிற்கு இசைய பின்வருவோர் பரிசுக்குரியவர்களாகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்கள்.

### முதற் பரிசு

இ. இராஜகுமார், இராஜகிரி, கேணியடி, திருநெல்வேலி, யாழ்ப்பாணம். பாடசாலை; அர்ச்.பரியோவான் கல்லூரி, யாழ்ப்பாணம்.

விடயம்: "தமிழ் மொழி வாழ்வும் வளமும்"

### இரண்டாம் பரிசு

க. மகாத்மாசீலன், இந்துக் கல்லூரி, யாழ்ப்பாணம்.

விடயம்: காந்தி அண்ணல்.

### மூன்றும் பரிசு

செல்வி நிர்த்திராணி காங்கேஸ், வடலியடைப்பு, பண்டத்தரிப்பு. பாடசாலை: மகளிர் உயர்தர பாடசாலை, பண்டத்தரிப்பு.

விடயம்; காந்தி அண்ணல்.

பின்வருபவர்கள் பாராட்டுக்குரியவராகத் தெரிந்தெடுக்கப்பட்டுள்ளார்கள்.

மு. செந்தமிழ்ச் செல்வன், மில் வீதி, சங்கானை. இந்துக் கல்லூரி, சண்டிலிப்பாய்.

விடயம்: இன்றைய ஈழத் தமிழ் பேசுவோர் நிலை.

செ. அம்பிகைபாலன், மட்டுவில் தெற்கு, சாவகச்சேரி. அர்ச்.பரியோவான் கல்லூரி, சாவகச்சேரி.

விடயம்; பாரதிக்குப் பின்......

சி. சிவபாதசுந்தரம், இந்துக் கல்லூரி, காரை நகர்.

விடயம்: இன்றைய ஈழத் தமிழ் பேசுவோர் நிலை.

ச. ஜெயகுமாரி, திருநெல்வேலி வடக்கு, யாழ்ப்பாணம்.

விடயம்: காந்தி அண்ணல்.

த. குமரவேல், தோப்புக்காடு, காரை நகர். பரமேஸ்வராக் கல்லூரி, யாழ்ப்பாணம்.

விடயம்: தமிழ்மொழி வாழ்வும் வளமும்

சி. சிவலிங்கராசா, செங்குந்த வீதி, கரவெட்டி கிழக்கு, கரவெட்டி.

விடயம்: பாரதிக்குப் பின்......

சிவயோகம் சின்னத்தம்பி, மலர்தளிர்ச் சந்தி, பருத்தித்துறை. மெதடிஸ்ற் பெண்கள் உயர்தர பாடசாலை, பருத்தித்துறை.

விடயம்: இன்றைய ஈழத் தமிழ் பேசுவோர் நிலை.

தா. டே. சத்தியகிரி, தங்கமணி வாசா, துன்னாலை

(6-ம் பக்கம் பார்க்க)

**வேல் தைலம்**
**மிகச் சிறந்த சஞ்சீவி**

ஜலதோஷம், தலைவலி, ஒருதலைக்குத்து, கை கால் உளைச்சல், முதுகு வலி, விஷக் கடி, தேள்கடி, ஜன்னி, வாய்வுப் பிடிப்புகள், சுளுக்கு, வீக்கம், இரத்தக் கட்டு, கட்டிகள், புறப்பாடுகள் முதலிய சகல வியாதிகளுக்கும் பாதிக்கப்பட்ட இடங்களில் நன்றாகத் தேய்த்தால் மிக விரைவில் குணமடையும்.

ஒவ்வொரு வீட்டிலும் இருக்க வேண்டிய மகா சஞ்சீவி.

**விலை ரூபா 1-50**

தபால் செலவு வேறு

தயாரிப்பாளர்கள்:

**S. P. S. ஜெயம் கம்பெனி,**
மதுரை.

இலங்கையில் சோல் ஏஜண்ட்:

**M. A. R. S. மனுவேல் நாடார் அன் கோ.,**
34, செட்டியார் தெரு,
கொழும்பு-11.

# ‘நாம் தமிழ’ரை எதிர்க்க ‘நாம் சிங்களவர்’

# இல்லாத இயக்கத்தை எதிர்க்க எதிர்முகாம் ஏற்படுத்தப் படுகிறது

**“மலைநாட்டில் இரகசியமாகவும், துரிதமாகவும் அமைக்கப்படும் ‘நாம் தமிழர்’ இயக்கத்தின் மீது பலத்த தாக்குதலைத் தொடுப்பதற்காக இரத்தினபுரியில் ‘நாம் சிங்களவர் இயக்கம்’ என்ற பெயரால் ஓர் ஸ்தாபனம் அமைக்கப்பட்டுள்ளது” என்று “ஸவஸ” (மாலைத் தினசரி) என்னும் சிங்களப் பத்திரிகை 19-9-63ந் திகதி ஒரு செய்தியைப் பிரசுரித்துள்ளது.**

இப் புதிய இயக்கம் பற்றி ‘ஸவஸ’ குறிப்பிடுவதாவது:

‘நாம் சிங்களவர்’ இயக்கம் எந்த அரசியற் கட்சியுடனும் தொடர்புடையதன்று. எந்த அரசியற் கட்சியைச் சேர்ந்த சிங்களவரும் இந்த இயக்கத்தில் சேரலாம்.

பல்வேறு அரசியற் கட்சிகளைச் சேர்ந்தவர்கள் இந்த இயக்கத்துக்குத் தலைமை தாங்குகின்றனர்.

அந்தப் பிரதேசத்திலுள்ள பௌத்த பிக்குகள், சிங்கள வைத்தியர்கள், ஆசிரியர்கள், தேச பக்தர்கள், சிங்களத் தோட்டத் தொழிலாளர்கள் ஆகியோரின் ஆதரவு இவ்வியக்கத்துக்குக் கிடைத்துள்ளன.

நாம் சிங்களவர் இயக்கத்தின் கிளைகளை மலைநாட்டில் எல்லாத் தோட்டங்களிலும், நாட்டின் இதர பகுதிகளிலும் நிறுவ உத்தேசித்துள்ளனர். இயக்கத்தின் தலைமை அலுவலகம் இரத்தினபுரியில் இருக்கும்.’

### மாவட்ட சபைகள்

குடியேற்றத் திட்டங்களில் நிலங்கள் விநியோகிப்பது போன்ற முக்கிய பொறுப்புக்களை உத்தேச மாவட்ட சபைகளிடம் ஒப்படைக்கும் பிரச்சினையை முதலில் தீர்த்துக் கொள்ள வேண்டும் என்று ‘லங்கா தீப’ பத்திரிகை இம்மாதம் 20ந் திகதி மாவட்ட சபை அமைப்புப் பற்றி எழுதியுள்ள தலையங்கத்தில் குறிப்பிட்டுள்ளது.

இந்தத் தலையங்கத்தில் மேலும் குறிப்பிடப்பட்டிருப்பதாவது:

‘மாவட்ட சபைகள் மூலம் ஆட்சி புரியும் முறை காலஞ்சென்ற பிரதமர் திரு. பண்டாரநாயக்காவின் திட்டமாகும். இதற்கு அவர் ‘பிராந்திய சபை’ எனப் பெயரிட்டார். அவரது திட்டத்தின் சில அம்சங்கள் பற்றி எழுந்த கருத்துவேற்றுமையின் காரணமாக அதன் குறைபாடுகளை நீக்கி அவரது ஆயுட்காலத்தில் அதனை அமுல் நடத்த முடியவில்லை.

இந்த ஆட்சி முறையை விரைவில் அமுலுக்குக் கொண்டுவர அரசாங்கம் உறுதி கொண்டுள்ளது.

அரசாங்கத்தால் தற்போது நடாத்தப்படும் அலுவல்கள் பல மாவட்ட சபைகளின் பொறுப்பில் விடப்படும். எனவே மாவட்ட சபைகள் அதிக பொறுப்புள்ள சபைகளாகவிருக்கும்.

பத்தாம் பசலி கச்சேரி முறையை ஒழித்து விட்டு, மக்கள் பிரதிநிதிகளிடம் நிர்வாகப் பொறுப்புகளை ஒப்படைக்கும் இந்த நிர்வாக முறையைப் பற்றி யாருக்கும் கருத்து வேற்றுமை இருக்க முடியாது. எனினும் அதன் அம்சங்கள் பற்றி கருத்து வேற்றுமைகள் ஏற்படக் கூடும்.

குடியேற்றத் திட்டங்களில் நிலம் வழங்குவது பற்றி அன்று தயாரிக்கப் பட்ட நகல் மசோதாவிலும் கருத்து வேற்றுமைகள் தோன்றின. குடியேற்ற நிலங்களில் அந்தப் பிரதேசங்களிலுள்ளவர்களைத் தவிர வெளி இடங்களிலிருந்து யாரையும் கொண்டு வந்து குடியேற்றக் கூடாதென்று சமஷ்டிவாதிகள் கூறுகின்றனர். அதற்கு இடம் கொடுத்தால் குடியேற்றத் திட்டங்களை ஏற்படுத்தும் நோக்கமே சிதறுண்டு போகும்.

குடியேற்றத் திட்டங்களை ஏற்படுத்துவதின் நோக்கம் சன நெரிசலுள்ள பகுதிகளிலிருந்து குடும்பங்களைக் கொண்டு வந்து குடியேற்றுவதே. குடியேற்ற நிலங்களை அந்தப் பகுதியிலுள்ள மக்களுக்கு மட்டும் பங்கிட்டுக் கொடுத்தால், இதர பகுதிகளிலுள்ள மக்களுக்கு அதனால் எந்தப் பிரயோசனமும் கிடைக்காது.

நிலம் வழங்குவதை மாவட்ட சபைகள் மூலம் செய்ய வேண்டியதேற்படும். இம்மாதிரியாக சிக்கலான பிரச்சினைகளை முதலில் தீர்த்துக்கொள்ளாமல் மாவட்ட சபைகளை அமைத்தால், நன்மையை விட தீமையே விளையும்.

மாவட்ட சபை அமைப்பில் உத்தியோக மொழி விஷயமும் பெரும்பாலும் முக்கியத்துவம் பெறும். எனவே இது பற்றி அவைரும் விவாதித்து நாட்டுக்குப் பயன்தரத் தக்க முறையில் மாவட்ட சபைகளை அமைக்க வேண்டும்.’

### “கள்ளத்தோணி” அபாயம்

‘நமது கள்ளத்தோணி பிரச்சினை பற்றி இந்தியாவுக்கு அக்கறை கிடையாது. இந்திய அரசாங்கத்துக்குத் தெரிந்தே திட்டமிடப்பட்டு ஸ்தாபனரீதியாகக் கள்ளத்தோணி இயக்கம் நடைபெறுகிறது என்று அஞ்சும் அளவுக்கு அது உலகம் முழுதும் நடைபெறுகிறது’. இவ்வாறு ‘லங்கா தீப’ 24-9-63 ம் திகதி எழுதியுள்ள தலையங்கம் கூறுகிறது.

‘இங்கே கள்ளத்தோணிகளுக்குப் பாதுகாப்பு அளிக்கும் தமிழர் ஸ்தாபனங்களும் தலைவர்களும் உண்டென்பது அரசாங்கம் தெரிந்துள்ளது. தி. மு. க. மட்டுமின்றி இந்நாட்டின் அமைதிக்குப் பங்கம் விளைவிக்கக் கூடியதாயிருக்கும் சில அருப்புவாத அரசியற் கட்சிகளும் சில தொழிற் சங்கங்களும் கள்ளத்தோணிகளுக்குப் பாதுகாப்பளித்து, பெரும்பான்மை இனத்தைச் சில வருடங்களில் சிறுபான்மையாக்கி, ஒரு தமிழ் ஏகாதிபத்தியத்தை நிறுவத் தயாராவதாகத் தெரிகிறது.

முதலில் இரகசியமாக வேலை செய்த கள்ளத்தோணிகள் இப்பொழுது பெரும்பான்மை இனத்துக்கு விரோதமாக பகிரங்கமாகப் பலவந்த நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளனர்.

பௌத்தர்களால் திருகோணமலைக் கோட்டையில் நிறுவப்படும் இரு பௌத்தாலயங்களின் அமைப்பு வேலைகளை நிறுத்தும்படி மிரட்டும் அளவுக்குப் பயங்கரமான நிலைமை இன்று தோன்றியுள்ளது. மூன்று நாள் புரட்சி செய்தால் நாட்டின் நிர்வாகத்தைக் கைப்பற்றலாம் என்று கூறும் எட்மண்ட் சமரக்கொடி போன்றவர்களும் இதற்குப் பொறுப்பாளிகளாவர்.

கள்ளத்தோணி அபாயத்தைத் தடுக்க ஏதேனும் ஒரு துணிச்சலான நடவடிக்கை எடுக்க வேண்டும். இது பற்றி நேருவுக்குக் கடிதம் எழுதுவதில் பயனில்லை’ என்று ‘லங்கா தீப’ தலையங்கம் மேலும் கூறுகிறது.

## சிங்கள இதழ்களில்...

---

## மாணவர்களுக்கு ஓர் வேண்டுகோள்

1963ம் ஆண்டு ஓகஸ்டில் நடந்த க. பொ. த. ப. (சாதாரண தரப்) பரீட்சைக்கு விண்ணப்பித்து அப் பரீட்சையிலிருந்தும் விலகிய பரீட்சார்த்திகளுக்குத் தனிச் சிங்களத்தில் பணச் சீட்டுக்கள் வழங்கப்படுகின்றன. பரீட்சார்த்தி செலுத்திய முத்திரைப் பணத்திற்காகப் பரீட்சார்த்திகளுக்கு வழங்கப்படும் பணச் சீட்டுகள் அவர்களுக்கு விளங்கக்கூடிய மொழியிலேயே எழுதப்பட்டிருத்தல் அவசியமாகும்.

அல்லாமலும் க. பொ. த. ப. (சாதாரண தரப்) பரீட்சைக்குரிய பிரமாணம் 13 (இ) பிரிவின்படி பணச்சீட்டு வேறு பரீட்சார்த்திக்காவது, பரீட்சைக்காவது மாற்றக்கூடியது அல்ல.

எனவே தனது பெயரும், மற்ற விபரங்களும் சரியா என்பதைப் பரீட்சார்த்திகள் தெரிந்து கொள்ளுதல் அவசியமாகும். பரீட்சார்த்தியின் விண்ணப்பங்கள் எந்த மொழியில் நிரப்பப்பட்டனவோ அம் மொழியிலேயே முன் பணச்சீட்டுக்கள் வழங்கப்பட்டன. ஆகையால் பரீட்சைப் பகுதியிலிருந்து தனிச் சிங்களத்தில் எழுதி வரும் பணச்சீட்டுக்களை அப் பகுதிக்கே திருப்பி அனுப்பி, தாம் விண்ணப்பங்களை நிரப்பிய மொழியிலேயே பணச் சீட்டுக்களைக் கோரும்படி தமிழ் பேசும் மாணவர்கள் வேண்டப்படுகின்றார்கள்.

---

## இந்து வாலிபர் சங்க ஆண்டு விழா

கொழும்பு—செப். 26

கொழும்பு இந்து வாலிபர் சங்கத்தின் ஆறாவது ஆண்டு நிறைவு விழா 28, 29ம் திகதிகளில் பிற்பகல் 5 மணிக்கு வெள்ளவத்தை சைவ மங்கையர் கழக மண்டபத்தில் நடைபெறும்.

முதல் நாள் நிகழ்ச்சியில் சமுதாயத்தைச் சீரிய முறையில் நல்வழிப் படுத்துவது சட்டமா? சமயமா? என்ற பொருளில் பட்டி மண்டபம் ஒன்று நடைபெறும்.

இரண்டாம் நாள் நிகழ்ச்சியில் பல அறிஞர்கள் கருத்துரை வழங்குவார்கள். செல்வி கௌரீஸ்வரி கனகரத்தினத்தின் இன்னிசை விருந்தும் இடம் பெறும்.

---

## சங்கப் பலகை

# நீரர மகளிர்

ஆக்கியோன்: திமிலைத் துமிலன் கிடைக்குமிடம்: ‘இராஜம் பிரசுரம்’ திமிலைதீவு, மட்டக்களப்பு. விலை சதம் 50.

மட்டக்களப்பு வாவிகளில் உள்ள ஊரிகள் எழுப்புகின்ற இசையின் பெருமை விளம்புமுகமாக மீன் பாடும் தேன் நாடு என்ற அடை மொழி மட்டக்களப்புக்கே ஒரு தனிச் சிறப்பாக அமைந்துள்ளது. இந்த அற்புதத்தை விளக்குமுகமாக, அந்த ஊரிகளின் இசை முழக்கத்தை எடுத்தோதிப் பெருமை பகரும் வாயிலாக, திமிலைத் துமிலனின் ‘நீரர மகளிர்’ அமைந்துள்ளது. நாம் அவற்றினை அழைக்கும் போது ஊரி என்று மட்டுமே பகர்வோம். ஆனால் அவை கவி உளம் கொண்ட திமிலைத் துமிலன் கையில் நீரர மகளிராகக் காட்சி அளிக்கின்றன. அவற்றினை நாமும் தெரிந்துகொள்ள உதவுமாறு அமைந்திருக்கிறது அவரின் படைப்பு.

> “பாற் கடலாம், மட்டுநகர் வாவி மாறிப்
> பயந்ததுவோ அமுத மெனப் பகருமாறு,
> கேட்டதொரு புதுமைப் பண் நீருள் நின்று
> கிளர்ந்ததடா கற கண்டிற் இனிய நாதம்”

என்று எடுத்த எடுப்பிலேயே அவற்றின் குரலிசைப் பெருமை கூறி, ‘இவற்றின் இன்பப்பேர்; ‘உழை’யே’ என்று நமக்கு அவற்றினை அறிமுகம் செய்து வைக்கிறார் கவிஞர் திமிலைத் துமிலன்.

இத்துணைப் பெருமை கொள் மட்டுநகர் தன்னை அடக்கியுள்ள ஈழத்தின் பெருமையினையும் அதனை ஆண்ட இராவணன் சிறப்பினையும் எடுத்தியம்புங்கால்,

> குணா மதகுரல் குறுமுனிவன் துணையுங் கொண்டு
> ஆடவரும் ஈசனிடம் பணிக்குன் றதனை
> அருள் வேண்டித், தவம் கிடந்த அவள் கொள் ஈழ
> நாடதற்கு இறைவனெனும் ராவணேசன்”

என்று பாமாலை சூட்டுகிறார் கவிஞர்.

அதுமட்டுமல்ல, மறத் தமிழன் வீரம் போற்றி ‘மறத்

(13-ம் பக்கம் பார்க்க)

---

## வாழ்வு

அடுத்த வாரம் பிரபல சிறுகதை எழுத்தாளர் நாவேந்தன் அவர்களின் ‘வாழ்வு’ சிறுகதைத் தொகுப்பின் மதிப்புரை இடம் பெறும்.

---

## சந்தியில்....

இந்த நாட்டில் மீண்டும் ஒரு இனக் கலவரத்தை உருவாக்க சில சிங்களத் தினசரிகள் பிரயத்தனம் செய்து வருகின்றன. இல்லாததும் பொல்லாததுமாக பொய்ப் பிரசாரத்தின் மூலம் சிங்கள மக்களை மலைநாட்டு மக்கள்பால் தூண்டிவிடுகின்றன. இந்நிலையை உருவாக்க ஆதிகாரணமாகவிருந்தவர் யார் என்பதையிட்டு அம்மானுக்குத் தகவல்கள் கிடைத்துள்ளன.

மலைநாட்டில் தான் ஏகச் சக்கராதிபதியாக வாழ வேண்டும் என்று பேராசை கொண்ட ஒருவர், தி. மு. க., நாம் தமிழர் இயக்கம், தமிழரசுக் கட்சி, இ. தொ. கழகம் ஆகிய இயக்கங்களை ஒன்றுசேர்த்து இணைத்து இல்லாததும் பொல்லாததுமாக பலதரப்பட்ட புழுகுகளை மலைநாட்டிலுள்ள சிங்களத் தினசரிநிருபர்களுக்கு பணம் கொடுத்து எழுதத் தூண்டி விட்டாராம்.

கிணறு வெட்டப் பூதம் புறப்பட்டது போல, இப்பொழுது ஏவிவிட்டவரையே பூண்டோடு ஒழித்துவிடத்தக்க அளவுக்கும் பிரசினைகளும் எழுந்துவிட்டதாம்.

மேற்படி ஏகச் சக்கராதிபதி ஏழைகளின் இரத்தத்திலிருந்து உறிஞ்சிய பணத்தில் ஒருசில ஆயிரத்தை ஒரு பத்திரிகைக்கு வாரி வழங்கினாராம். அதன் பலன்தான் ஒரு தினசரியின் பிரதாபங்கள் மூலம் வெளியாகி விட்டதே!

ஒரு தனிப்பட்ட நபரைத் தமதுபேனாவால் புகழ்வதன் மூலம் காசோலை பெற்று வயிறு வளர்க்கும் பத்திரிகையாளர்களின் தயவிருக்கு மட்டும் மேற்படி தான் தோன்றீஸ்வரர்கள் பவிசுடன் வாழத்தான் வாழ்வார்கள்.

பத்திரிகையை வைத்துக்கொண்டு பணம் சுருட்டும் எத்தர்களினால் எழுத்தாளர்களுக்கும் பத்திரிகைகளுக்கும் பெருத்த அவமானம்.

அண்மையில் நடந்த ஒரு உப தேர்தலில் ஒரு அபேட்சகருக்கு ஒரு பத்திரிகை விழுந்தடித்துக் கொண்டு வோட்டுத் தேடியது. அப்பத்திரிகையின் கீழ்த்தரத் தன்மையினாலேயே, அபேட்சகர் தோற்று விட்டார் என்றால் மிகையாகாது. தம்மைப் பற்றி எழுதுவதற்காகப் பத்திரிகை அதிபருக்கு வாக்களிக்கப்பட்டபடி “சம்திங்” கொடுபடவில்லையாதலால் காவடி தூக்க ஆரம்பித்துள்ளாராம்—ஆசிரிய அதிபர்.

பலரைக் காக்காய் பிடித்து, பல்லிளித்து, பச்சோந்திபோல் வேடம் போட்டுப் பத்திரிகை போட்டு எழுத்து விபசாரம் செய்யும் இந்த பத்திரிகாசிரிய சிரோன்மணி, பிள்ளைகளைப் படிப்பிக்கும் பாடசாலை ஆசிரியர் தான் என்றும் தன்னைத்தானே விளம்பரப் படுத்திக் கொள்ளத் தயங்குவதில்லை.

—அம்மான்.

# உழைப்பால் நாட்டை உயர்த்தியோருக்கு உய்வே யில்லையா?

## ஊதிய உயர்வுப் போருக்கு ஆயத்தமாகுங்கள்

"ஈழ நாடு வாழ்வது எங்களால்தான்" என்று மலையகத்துத் தொழிலாளர் மார் தட்டிக் கூறிவரும் உண்மையை உலகிற்கே எடுத்துரைக்கும் பெரும் பணியினை உருவாக்கி செயலாற்றும் கட்டத்தில் செந்தமிழர் இருக்கின்றனர் இன்று.

### உழைப்புக் கேற்ற ஊதியமில்லை

மலையகத்தார் உழைப்பால் இலங்கை வாழ்கிறது, இது யாவரும் அறிந்த உண்மை. மலையகத்தார் வாழ்க்கை உயர்ந்துள்ளதா? அதுதான் இல்லை. உழைப்பிற்கேற்ற ஊதியமாவது கிடைக்கிறதா? அதுவும் இல்லை. எல்லாம் விட்டு உரிமையோடுதான் வாழ்கின்றனரா? அடியோடு இல்லை, இல்லை!

ஆண்டவன் படைப்பிலேயே அவதியுறும் மக்கள் உழைப்பாளர் மட்டுமே தானே! ஆமாம்! மற்றோர் மகிழ்ந்து மஞ்சத்தில் சுகம் தேடும்போது, உழைப்பைத் தந்து உதிரத்தைக் கொட்டி உற்பத்தி பெருக்கி, ஒரு நாட்டையே வாழ வைத்து, உரிமையிழந்து வாழ்பவர்கள் உலகிலேயே உயர்ந்த நிலையிலிருந்து தாழ்ந்து வந்திருக்கும் இன்றைய தமிழ் பேசும் தொழிலாளரே!

உன்னைத் தருகின்றான் உழவன். பிறர் வாழ உழைக்கின்றான் தன்னை மறந்து உழைப்பாளி. நீர் தந்து வாழ்வளிக்கின்றான் தேயிலைத் தோட்டத் தொழிலாளி. இவ்விரு உருவமும் உழைப்பாலேயே உருக்காகவும் உருகியும் வாழ்கிறது. உயர்வுதான இல்லை. இவர்களால் உயர்ந்தோர், உப்பரிகை சுகம் தேடுகின்றனர். ஊதிய உயர்வும் இல்லை, உடுக்கும் வசதியும் இல்லை, உண்ண வாய்ப்பும் இல்லை இவர்களுக்கு. உயர்ந்தோர் தாழ்வாரா? எப்படி முடியும்? தாழ்ந்தோர் உயர வேண்டும். அப்படியாயின் தாழ்ந்தவர் யார்? தமிழரேதான்.

உலகோடு பிறந்த உயர்ந்தோர், இப்படித் தாழ்ந்த நிலையில் வாழ்வதேன்? சிந்தித்துப் பார்க்க வேண்டும். நாட்டைச் செப்பனிட்ட செம்மல்கள், சிந்திக்க வேண்டும். செயலாற்ற வேண்டும்.

### உச்சத்தில் வாழ்க்கைச் செலவு

ஆரம்ப கால வாழ்வு எப்படி அமைந்திருந்தது, அன்று கிடைத்த ஊதியத்திற்கேற்றபடி உயர்ந்து இருந்தது, இன்று என்ன நிலை? அன்று வாழ்க்கைக்குத் தேவையான செலவினங்கள் குறைந்த விலையில் நிறைய கிடைத்தன. இன்றோ, ஊதியம் குறைந்து வாழ்க்கைச் செலவுகள் உயர்ந்து உச்ச நிலையில் உள்ளன. இதனால் பாதிக்கப்படுபவர்கள் மலையகத்துத் தொழிலாளரே!

இளைப்பாறியவருக்குக் கிடைக்கும் ஊதியம் கூட இங்கு உழைப்பவருக்கில்லை. ஏன்? உழைப்பைத் தரும் உயிர் ஊசலாடிக் கொண்டே உழைக்கிறது. பிழைப்பைக் கருதிக் களைப்பறியாமல் உழைப்பைத் தருகிறது. உண்டு களித்தும் கண்டு களித்தும் இருப்போர் காலப் போக்கில் மாறத்தான் போகின்றனர்.

இதற்கும் முன் இனம் விடுதலையடைய வேண்டும், விடுதலைக்கான வழி, உரிமைப் போர், உயிருக்கு நேரான போர். இனம் உள்ளங்கள் நாளை வளர்ந்து உயர்ந்து வாழ வேண்டும். இதற்கு ஒரு திட்டம், அண்மித்து விட்ட உரிமைப் போரில் ஒன்று கூடிப் போராடுவதே. தமிழரே! பரணி பாடி வாழ்வது நலத்தோடும் வளத்தோடும் வாழட்டும். நன்றியையாவது மறக்காமல் இருப்பர்.

நமக்குள் பல பிளவுகள் இருக்கலாம், கருத்து வேற்றுமை இருக்கலாம், கட்சி பேதங்கள் இருக்கலாம், ஆனால் நாமெல்லாம் தமிழினம், நாமெல்லாம் தமிழர், நமது நாளைய சந்ததியினர்

## மலைநாடு

பவரே! தருக்கர்கள் தவறுணர்ந்து நமக்கு உரிமைகள் வழங்கும் மட்டும் ஓயக் கூடாது! வெற்றி! வாழ்வு, வெற்றி! என்று நாளைய வரலாறு நம்மைக் கூற வேண்டும்.

### உன் பசி நீங்க நீ ஒன்றுபடு!

நமக்கு அந்த வாழ்வு கிட்டாமல் போனால் நட்டமில்லை நாளைய சமுதாயமா நல்வாழ்வு வாழ ஒன்று கூடி, நன்றி கெட்ட இவ்வரசுக்கு நல்ல பாடம் கற்பிக்க வேண்டும்!

எந்தக் கட்சியானாலும் சரி, மக்கள் நன்மையைக் கருதி ஆரம்பிக்கும் போராட்டத்தில் வேற்றுமை மறந்து ஒன்றறக்கலந்து உரிமைப் போர் சாத்வீக முறையில் நடாத்த விழைதல் நம் தமிழ் அன்னைக்கு நாம் ஆற்றும் முதற் கடனாக இருக்கட்டும். பாடுபடும் பாட்டாளியே! பிறர் பசி நீக்கப் பாடு பட்டாய்; பலன் இல்லை. உன் பசி நீங்க நீ ஒன்று கூடு! உரிமைப் போர் பரணிபாடு! இன்றே ஓடு, வாழ்வைத் தேடி!

பொருளாதார அடிப்படையில், இலங்கையின்

(13-ம் பக்கம் பார்க்க)

## அந்தத் தோட்டமும் சேர்ந்தது

மஸ்கெலியா சாமிமலை பெரிய சோளங்கந்தை தோட்டத் தொழிலாளர்கள் சுமார் 150 அங்கத்தவர்கள் கடந்த 20-9-63ந் திகதி இலங்கைத் தொழிலாளர் கழகத்தில் சேர்ந்தனர். இன்னும் பலர் சேர இருக்கிறார்கள்.

மேற்படி தோட்டத் தொழிலாளர்கள் பல தொழிற் சங்கங்களிலிருந்து அனுபவப்பட்டவர்கள். அத் தோட்டத்து இளைஞர்கள் கூடி இன்றிருக்கும் நிலையில் இலங்கைத் தொழிலாளர் கழகம்தான் தமிழ்த் தொழிலாளர்களுக்காகப் பாடுபடும் ஒரே சங்கம் என்பதை உணர்ந்து, இலங்கைத் தொழிலாளர் கழகத்தில் சேர்ந்துள்ளார்கள்.

## பாரதி விழா நடத்தத் தடை

ருகலையில் பாரதி விழா 21ம் திகதி நடாத்த ருகலை இளைஞர் மன்றக் குழுவினரால் சகல ஏற்பாடுகளும் செய்யப்பட்டிருந்தன. விழா நடாத்த மேலதிகாரியிடமிருந்து அநுமதியும் பெற்றிருந்தார்களாம். யாழ்ப்பாணம், அட்டன் போன்ற ஊர்களிலிருந்தும் பேச்சாளர்களாகப் பல பிரமுகர்கள் வந்திருந்தார்கள்.

எதிர்பாரா வண்ணம் திடீரென 20ம் திகதி இரவு ருகலை பொலிஸ் சப் இன்ஸ்பெக்டர், மன்றக் குழுவினர்களைப் பொலிஸுக்கு அழைத்துப் போய் இரகசிய விசாரணை நடத்தினராம்.

'பாரதி விழா என்ற பெயரில் மறைமுகமாக 'நாம் தமிழர்' என்று புதிய கட்சியை உண்டுபண்ணி மக்களுக்குக் கஷ்டம் கொடுக்கப் போகிறார்கள். மக்கள் உணர்ச்சி வசப்பட்டுத் தூண்டி விடப்பட்டுக் குழப்பம் உண்டுபண்ணத் திட்டமிட்டுள்ளார்கள்' என்று சிலர் தந்தி கொடுத்திருப்பதாலும், எதிர்ப்பு இருப்பதாலும் இந்த விழாவை நடத்தி அநுமதிக்க முடியாதென்று கூறியதாகவும் ஏற்கனவே மேலதிகாரிகளால் வழங்கப்பட்டிருந்த உத்தரவை ரத்துச் செய்து விட்டதாகவும் அறியப்படுகிறது இத்தடை உத்தரவை மீறி விழாவை நடத்தினால் மேலதிகாரிகள் ராணுவ படையுடன் வர இருப்பதாகவும் கூறி எச்சரிக்கை செய்து அனுப்பப்பட்டார்களாம்.

ஆகவே விழா குறிப்பிட்ட நாளில் நடைபெறவில்லை என்று தெரிகிறது. அதிக தூரங்களிலிருந்து வந்தவர்கள் மிக்க மனவருத்தத்துடன் திரும்பிச் சென்றனர்.

## இ. தொ. க. வில் சேர்ந்து உரிமை பெற வாரீர்

"மலைநாட்டுத் தமிழர்கள் அனைவரும் இலங்கைத் தொழிலாளர் கழகத்தில் இணைய வேண்டும். அப்பொழுதுதான் அவர்கள் தங்களின் இழந்த உரிமைகளைப் பெறமுடியும்" என்று இ. தொ. க. பிரமுகரும், நிர்வாக சபை உறுப்பினருமான திரு. தென்னரசு எஸ்டேட் தோட்டத்தில் இம்மாதம் 13ந் திகதி நடைபெற்ற இ. தொ. க. பிரச்சாரக் கூட்டமொன்றில் பேசும்போது கூறினார்.

கூட்டத்திற்கு ஏராளமான இளைஞர்களும், யுவதிகளும் வந்திருந்தனர். கூட்டம் நடைபெற்ற இடத்திற்கு தமிழரசுக் கொடிகள் தாங்கி 'தமிழ் வாழ்க' என்ற ஒலியுடன் மக்கள் ஊர்வலமாகச்சென்றனர். தோட்டக் குழுவினரால் வரவேற்கப்பட்ட திரு. தென்னரசு மேலும் பேசியதாவது:-

"எத்தனையோ இன்னல்களுக்கிடையில் நீங்கள் இக் கழகத்தைக் கட்டி வளர்த்து வருகின்றீர்கள். மாற்றாரும் போற்றும் இக் கழகம் வளர்ச்சியடைந்துள்ளதைக் கண்டு நான் மகிழ்ச்சியடைகின்றேன். எதிர்ப்பிலே பிறந்து எதிர்ப்பிலே வளருகின்றது நமது கழகம். எந்த ஒரு விடுதலை இயக்கத்திற்கும் ஆரம்பத்தில் எதிர்ப்புக்கள் ஏற்படுவது இயற்கை. எதிர்ப்புக்களை முறியடித்து வளர்வதில் தான் இயக்கத்தின் வெற்றி தங்கியுள்ளது. நமது இலங்கைத் தொழிலாளர் கழகத்தைப் பொறுத்தவரையில் அதற்கு இன்று ஏற்பட்டுள்ள எதிர்ப்புக்கள் இருந்த இடம் தெரியாமல் மறையும் நாள் அதிக தூரத்தில் இல்லை. மாற்றுக் கட்சித் தலைவர்கள் என்னதான் பொய்ப் பிரச்சாரம் செய்து வந்தபோதிலும் மக்கள் உண்மை நிலையைப் புரிந்துகொண்டு தான் வருகின்றனர். மலைநாட்டுத் தமிழர்கள் அனைவரும் இலங்கைத் தொழிலாளர் கழகத்தில் இணைய வேண்டும். அப்பொழுது தான் அவர்கள் தங்களின் இழந்த உரிமைகளைப் பெற முடியும."

### மஸ்கெலியாவில்

மஸ்கெலியாவைச் சேர்ந்த பால்காமம் தோட்டத்தில் 16-9-63ம் திகதி மாலை, இ. தொ. கழகத் தலைவர் திரு. நாகமுத்து அவர்கள் தலைமையில் பிரச்சாரக் கூட்டம் நடைபெற்றது. அவ்வமயம் கழகப் பிரமுகரும் செயற்குழு அங்கத்தவருமான திரு தென்னரசு கூறியதாவது:

நமது கழக வழி முறைகள் புனிதமானவை. ஆனால் கட்டிக் காக்கின்ற பொறுப்பு உங்களைச் சார்ந்தது. காங்கிரசிலே உள்ள பழக்க வழக்கங்களை நமது பாதையில் அனுசரித்தலாகாது. காங்கிரசின் கோட்டைகள் சரிந்து அழிந்துவிடக் கூடியவை. காங்கிரஸ் ஸ்தாபனம் இதுநாள் வரை தொழிலாளர்களுக்கு எதையுமே பெற்றுக் கொடுப்பதற்கு முன்வின்றது கிடையாது. அதனால்தான் உண்மையை உணர்ந்த படித்த வாலிபர்களும் ஏனைய பெரியோர்களும் நம்மை நோக்கி வந்த வண்ணமாக இருக்கின்றார்கள். இதை எண்ணி காங்கிரசின் பெருந் தலைவர்கள் எதைச் சொல்லுவது எதைச் செய்வது என்று புரியாமல் உளறுகிறார்கள். அன்று வராத தமிழரசு ஏன் இன்று வருகிறது? என்ற அர்த்தமற்ற கேள்விகளையும் கேட்பதற்குத் தயங்குகிறார்கள் இல்லை

மலை வாழின மக்களுக்கு அபயம் அளிக்கக்கூடிய நல்லவர்கள் உள்ள கட்சிதான் தமிழரசுக் கட்சி. ஆகவே. எங்கே தமிழரசுக் கட்சி வளர்ந்துவிடுமோ என்ற அச்சத்தின் காரணத்தால் ஏனைய கட்சிகளை எதிர்க்காத காங்கிரஸ் இரு பிரிவுகளும் நம்மை எதிர்ப்பதற்கு, மாபெரும் "எதிர்ப்பு" முன்

(13-ம் பக்கம் பார்க்க)


## சில விஷேச மருந்துகள்

**பாலபந்து** (விளக்கெண்ணெய்) குழந்தைகளுக்குண்டாகும் கரப்பான், சொறி சிரங்குகள், மாந்தம், கணை, பூச்சிக் கோளாறுகள், சுக்குவான் இருமல், இளைப்பு, இருமல், நெஞ்சு கிறுகிறுப்பு, மலச்சிக்கல், விதை வீக்கம் முதலிய எல்லா பால ரோகங்களுக்கும் சிறந்தது. ஒரு மாதக் குழந்தையிலிருந்து, 12 வயது வரைக்கும் கொடுக்கலாம்.

அளவு : 1 சொட்டு முதல் 10-15-20 சொட்டுவரை

விலை : ½ அவுன்ஸ் சீசா ரூ. 2-25

S. N. **குரு தைலம்** இம் மருந்தின் குணங்கள் எவருக்கும் தெரியும்படி பிரசித்தமானது. அநேக வருத்தங்களுக்கும், வலிகளுக்கும், உள்ளுக்கும் வெளிக்கும் பாவிக்கத் தகுந்தது.

விலை : டப்பா 1 ரூ. 2-00

**விரேசன மாத்திரை** விரேசனத்திற்கு விசேஷமான மருந்து. காலையில் 1—2 மாத்திரை சாப்பிட்டு தண்ணீர் குடித்தால் பேதியாகும்; வெந்நீர் குடித்தால் நின்றுவிடும். விரேசனத்திற்கு இவ்வளவு நல்ல மருந்து வேறு கிடையாது.

விலை : 25 மாத்திரை ரூ. 3-00

**பிரஹத் ஜாத்யாதிகிருதம்** (வெளிப் பிரயோகத் திற்கு மட்டும்) வெட்டுக்காயம், குழிப் புண்கள், சொறி சிரங்குகள், இரத்த வாதப் புண்கள், (எக்ஸிமா) கரப்பான், மர்மங்களிலுண்டாகும் புண்கள், முதலிய நாள் பட்டதும் புதியதுமான எல்லாவிதப் புண்களுடைய, வலியும், சீழ்வடிவதும், வீக்கமும், விரைவில் நிறுத்தி காயச் செய்கிறது. இம் மருந்தால் ஆறுத புண்கள் கிடையாது.

விலை : 1 அவுன்ஸ் 2-25

**எஸ். என். குரு மெடிக்கல் ஹால்,**

80, புதுச் செட்டித்தெரு, கொழும்பு-13.

# அடுத்த திங்களில் இறுதிப் போர் ஆரம்பம்

## உலகாண்ட இனம் உரிமையின்றி வாழும் இழிநிலை ஒழிக்க கிளர்ந்தெழுவீர்

மீண்டும் ஒரு போராட்டம்.

மொழி காக்க, இனம் காக்க, வண்தமிழர் வாழ்விடம் காக்க, வரலாறு காக்க, மாத் தமிழர் மானம் காக்க — மாண்பு காக்க, அன்னை மொழி அரியாசனத்தில் சரியாசனம் பெற-மீண்டும் ஒரு போராட்டம்.

நம்மைப் பழித்தோரை, நம் மொழியை ஒழித்தோரை எதிர்த்து மீண்டும் சத்திய யுத்தம்.

தமிழ் பேசும் இனத்தின் போராட்ட வரலாற்றின் நாலாம் பாகம் புரட்டப்படுகிறது.

ஆனி ஐந்திலே வித்திட்ட உரிமைப் போராட்டம் என்ற நீண்ட நெடும் வரலாற்றில், ஒரு புதிய திருப்பம்.

நாலாவது களம் உங்கள் நல்வரவை எதிர்நோக்கி நிற்கிறது.

முதல் களம் கண்டோம், ஆனித் திங்கள் ஐந்தாம் நாள் காலிமுகக் கடற்கரையிலே. என்ன நேருமோ, எது நடக்குமோ என்று ஆள வந்தார் ஏங்கித் தவிக்க, நம்மவர்கள் செங்குருதி கொட்டி பசும் புற்றரையில் வீர வரலாற்றின் முதல் அத்தியாயத்தைத் தீட்டினார்கள்.

கல் கொண்டும் கழி கொண்டும் நம் தலைவர்கள் தாக்கப்பட்டார்கள். என்றாலும் சத்திய யுத்தத்தின் நிலையில் நின்று தளரவில்லை.

இது கண்டு நல்லவர்கள் போற்றினார்கள். வல்லவர்கள் வாழ்த்தினார்கள். நாடெல்லாம் போற்றியது, நல்ல ஏடெல்லாம் வாழ்த்தியது.

சிறுமதி படைத்த நாடாள்வோர் வெட்கித் தலைகுனிந்தார்கள்.

தொடர்ந்தது திருமலை யாத்திரை. காலிமுகப் பசும் புற்றரையில் பச்சை இரத்தத்தால் தீட்டிய சித்திரத்துக்கு உயிரூட்ட — அன்னைமொழியின் அருந்துயர் துடைக்கத் திடங் கொண்டோர் தொகை கண்டோம் திருமலையில்.

ஆட்சி பீடத்தின் உச்சியில் அமர்ந்திருந்தோர் யாத்திரைக்குத் தடையென்றனர். தடையா நமக்கு? நம் பிரதேசத்தில் நாம் நடந்து செல்லத் தடையா என்ற ஒலி, தடை விதித்தோரைத் தொடை நடுங்க வைத்தது.

தடை விதித்தோர் படையும் தந்துதவினர் மாநாட்டிற்கு.

திருமலையில் எழுந்த சங்கநாதம் நாட்டின் மூதல் வரை நிலைகுலைய வைத்தது. சிங்களம் மட்டும் என்ற நிலையிலிருந்து இறங்கி வந்து நம் தலைவர்களுடன் ஒப்பந்தம் எழுதினர்.

ஒப்பந்தத்தின் வரையறைக்குப் புறம்பாக, 'சிறீ' யென்ற உருவில் தமிழினத்தைச் சிறுமைப்படுத்த முற்பட்டனர் ஆட்சியாளர். பொங்கி எழுந்தது தமிழினம். 'சிறியை அழிப்போம் சிறையை நிறைப்போம்,' என்று சங்கநாதம் முழங்கியது.

தலைவர்கள் முதல் தொண்டர்கள் வரை சிறையையும் நிறைத்தனர்.

அரசியல் துறந்த போதி மரச் சத்துருவாரின் வழித்தோன்றல்களின் மிரட்டலுக்கும் உருட்டலுக்கும் பணிந்தார் முதல்வர்.

பெருந்தன்மையுடன் செய்து கொண்ட ஒப்பந்தம் சுக்கு நூறாகியது.

நாடு என்றுமே கண்டிராத வகுப்புக் கலவரம் தலைவிரி கோலத்துடன் தாண்டவமாடியது.

அன்னை மொழிமட்டுமல்ல, அன்னைமாரும்கூட நடுத் தெருவில் வைத்துத் துகில் உரியப்பட்டார்கள்.

தமிழ் பேசும் மக்களின் உரிமைப் போராட்ட வரலாற்றின் இரண்டாம் பாகம் இது.

மூன்றும் பாகம் ஆரம்பமாகியது அறுபத்தொன்றில்.

அண்ணல் காந்தியின் வழித்தோன்றல்கள் என்

**பூங்குன்றன்**

பதைச் சிறிதளவும் பிறழாது நிலைநாட்டினர் நம்மவர்.

'கோணிப் புழுகன் கோயபல்சின்' குறுக்கு வழியை நாடினர் நாடாள்வோர். தோல்வி கண்டனர். ஆட்சியே ஆட்டங் கண்டது. தமிழ்ப் பிரதேசத்தில் சிங்கள அரசு செயலிழந்தது.

இராணுவம் கட்டவிழ்த்து விடப்பட்டது. அவசரகாலச் சட்டம் ஆட்சி புரிந்தது.

தமிழ் பேசும் மக்கள் நையப்புடைக்கப்பட்டார்கள். தமிழ்ப்பெண்களின் கற்பும் சூறையாடப்பட்டது. தமிழினமே சித்திரவதைக்குள்ளாகியது.

என்றாலும், தமிழினத்தின் சுதந்திர வேட்கையை அடக்க முடிந்ததா ஆட்சியாளரால் என்றால், அது தான் இல்லை.

மீண்டும் போராட்டம்.

போராட்ட வரலாற்றின் நாலாவது பாகம் ஆரம்பமாகிறது.

இதுவே இறுதிப் போர் என்பதும் உறுதியாகி விட்டது.

வாழ்வா அல்லது சாவா என்பது நிச்சயம் முடிவாகும்.

சந்தேகத்திற்கு இடமேதுமில்லை.

'மானமொன்றே வாழ்வு அது மறைந்தால் எதற்கு இவ் வாழ்வு' என்ற வீர வரலாற்றின் இனத்தோரே!

'தமிழ் எங்கள் உயிருக்கு நேர்,' உலகாண்ட மொழியினருக்கு வரும் அவமானத்தை ஒருக்காலும் பொறுக்கோம், என்றும் பொங்கு தமிழர்க்கு இன்னல் விளைத்தால் சங்காரம் நிசம் என்று விரதம் பூண்டிருக்கும் வீர வாலிபரே!

மீண்டும் போராட்டம்,

நாள் வந்துவிட்டது நாத் தழும்பேறிய நாடாள்வோருக்கு நல்ல பாடம் புகட்ட.

வாரீர், களம் நோக்கி விரைந்து வாரீர்.

தந்தையின் ஆணை கிடைத்து விட்டது. மீண்டும் ஏன் தயக்கம்?

நல்லவரைப் பகைத்த நாடு வாழ்ந்ததாக வரலாறு இல்லை.

உரிமைப் போர் ஒடுக்கப் பட்டதாக வரலாற்று ஏடுகள் எங்குமே கூறவில்லை.

எனவே—

நமது நோக்கத்திற்கு வெற்றியுண்டு. இதில் சிறிதும் சந்தேகம் வேண்டாம். அகிம்சை வழி நின்றோர் அடிபணிந்தது கிடையாது.

அடிமையாக வாழ்வதை விட இறந்தொழிவது மேல்.

நடக்கவிருக்கும் போராட்டம் நமக்கு வாழ்வழிக்கும் போராட்டம்.

நமது மண்ணில் நமது மொழி மிதிக்கப்படுவதா?

வேற்றுமொழி நமது மண்ணில் ஆட்சி மொழியாவதைப் பார்த்து நாம் கைகட்டி வாய்பொத்தி நிற்பதா?

அன்னிய மொழி ஆதிக்கத்திற்கு நம்மவர் உடந்தையா?

ஆம்.

இதற்குத்தான், தந்தை செல்வா நல்லதொரு திட்டத்தை நம் முன் வைத்துள்ளார்.

அதுதான் பகிஷ்கரிப்பு இயக்கம்.

நமக்கு யாருடனும் பகைமையில்லை.

ஆனால் எப்படி அன்னிய ஆதிக்கமா? அதைப் பார்த்து நாம் வாளாவிருப்பதா?

அதுதான் முடியாது.

பகிஷ்கரிப்பு இயக்கம் பல் துறையிலும் நடக்கும்.

சிங்களத் திணிப்புக்கு உடந்தையாக உள்ளவர்களுடன் மட்டும் நின்றுவிடப் போவதல்ல இது.

நமது பொருளியல் நிலை உயர உழைக்க வேண்டும். நமது பொருளியல் நிலை உயர்வுக்குத் தடையாக உள்ளனவற்றையெல்லாம் பகிஷ்கரிப்போம்.

பகிஷ்கரிப்புப் போராட்டம் பல வழிகளில் நடைபெறும். அதற்கு ஒத்துழைப்புக் கொடுத்து வெற்றி பெறச் செய்வது உங்கள் கடன்.

பகிஷ்கரிப்புடன் மட்டும் நின்றுவிடப் போவதில்லை நமது போராட்டம். மேலும் உண்டு.

தமிழ் பேசும் மக்களே! வீட்டுக்கொரு வீரனைக் கொடுத்து தனித்தன்மை பேணி வாழ்ந்த இனத்தின் பெருமை காப்பீர்.

தமிழ் பேசும் வீர வாலிபர்களே!

'பாய்ந்து வரும் எதிரியின் வேலுக்கு நான் பலியாகின்றேன்' என்று விரித்த மார்பைக் கொடுத்தானே உம் முன்னோர், அதை நினைத்துப் பாரீர்.

வாள் என்று தெரியும்; அது என் வாழ்வையே ஒழிக்கும் — சுதந்திரப் போரை அழிக்காது — அழிக்கும் வலிமையும் அதனிடம் இல்லை என்று கேட்ட, போருக்கு அஞ்சாப் பரம்பரையே!

தமிழைப் பழித்தவன் தலையில் கல்லேற்றியவன் என்னவன்;

கடல் கடந்து படை நடத்தியவன் கரிகால் பெருவளத்தான்;

வெள்ளையனை வெளியேற்ற முதல் முழக்கம் செய்தவன் எம்மினத்தவன்;

மண்ணை மீட்க மண்ணிலே வீழ்ந்து இறந்தான் திருப்பூர் குமரன் — அவனும் எம்மினத்தவன்;

மொழிகாக்க உயிர்ந்தான் தமிழகத்தில் நாள

(13-ம் பக்கம் பார்க்க)




ராஜபீடி ஸ்பெஷல்

இலங்கை எங்கிலும் புகழ் பெற்றதும் எல்லோர் மனதிற்கும் திருப்தி அளிப்பதும்

ராஜு பீடி ஸ்பெஷல் ஒன்றே தான்

புகைத்து பலனடையுங்கள்

ராஜாபீடி கம்பனி

கொழும்பு-14.


# சுதந்திரன் பேச்சுப் போட்டி

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

தெற்கு. ஹாட்லிக் கல்லூரி, பருத்தித்துறை.

விடயம்: காந்தி அண்ணல்.

செல்வி சின்னதுரை அன்னலட்சுமி, சைவமங்கையர் கழகம், திருநெல்வேலி. முத்தம்பி வித்தியாசாலை, திருநெல்வேலி.

விடயம்: தமிழ் மொழி வாழ்வும் வளமும்.

செல்வி ஜெய திலகராணி செல்லத்துரை, 273, நாவலர் வீதி, யாழ்ப்பாணம். வேம்படி மகளிர் கல்லூரி, யாழ்ப்பாணம்.

விடயம்: தமிழ் மொழி வாழ்வும் வளமும்.

க. திவ்வியநாதன், நுணுவில் மேற்கு, சாவகச்சேரி. அர்ச். பரியோவான் கல்லூரி, யாழ்ப்பாணம்.

விடயம்: பாரதிக்குப் பின்......

சோ. சபானந்தன், சந்தை வீதி, உடுப்பிட்டி.

விடயம்: தமிழ் மொழி வாழ்வும் வளமும்.

க. பரஞ்சோதி, சங்கவாவத்தை, ரவிணடில், கரவெட்டி. அமெரிக்க மிஷன் கல்லூரி, உடுப்பிட்டி.

விடயம்: தமிழ் மொழி வாழ்வும் வளமும்.

செ. சத்தியமூர்த்தி, 10ம் வட்டாரம், புங்குடுதீவு. அரசினர் மத்திய கல்லூரி, கரவெட்டி.

விடயம்: பாரதிக்குப் பின்......

செல்வி ந. சற்குணதேவி, வட்டு கிழக்கு, சித்தங்கேணி.

விடயம்: காந்தி அண்ணல்.

ச. பேராயிரசிங்கம், 10ம் வாய்க்கால், உருத்திரபுரம்.

விடயம்: இன்றைய ஈழத் தமிழ் பேசுவோர் நிலை.

இ. அருந்தவேஸ்வரி, வட்டு கிழக்கு, சித்தங்கேணி. யாழ்ப்பாணக் கல்லூரி, வட்டுக்கோட்டை.

விடயம்: இன்றைய ஈழத் தமிழ் பேசுவோர் நிலை.

செல்வி சி. சிவலோகநாயகி, புத்தூர் சந்தி, புத்தூர். பெண்கள் உயர் நிலைப் பள்ளி, பண்டத்தரிப்பு.

விடயம்: இன்றைய ஈழத் தமிழ பேசுவோர் நிலை.

இ. ரஞ்சனு, இராஜகிரி, திருநெல்வேலி, யாழ்ப்பாணம். வேம்படி மகளிர் கல்லூரி, யாழ்ப்பாணம்.

விடயம்: தமிழ் மொழி வாழ்வும் வளமும்.

மா. பொன்னுத்துரை, மத்திய சனசமூக நிலையம், மாவிட்டபுரம்.

விடயம்: இன்றைய ஈழத் தமிழ் பேசுவோர் நிலை.

க. சிவபாதவிருதயர், அராலி தெற்கு, வட்டுக்கோட்டை. இந்துக் கல்லூரி, மானிப்பாய்.

விடயம்: நமது பொருளாதாரம் உயர......

குறிப்பு:

முதற் பரிசு பெற்ற திரு. இ. இராஜகுமாரி அவர்களும் இரண்டாம் பரிசு பெற்ற திரு. க. மகாத்மசீலன் அவர்களும் கொழும்பில் நடைபெறும் இறுதித் தேர்வில் கலந்துகொள்ள உரிமை உடையவர்களாவர்.

—பேச்சுப் போட்டி ஆசிரியர்

# ஒப்பந்த எதிர்ப்புப் பிரசாரத்தை பத்திரிகைகள் பகிஷ்கரித்தன

### அரங்கம் 9

கிறிஸ்துமஸ் விடுமுறைக்காகப் பாராளுமன்றம் ஒத்திவைக்கப்பட்டதைத் தொடர்ந்து ஒப்பந்தத்திற்கு ஆதரவு தேடப் பலர் முற்பட்டனர். பிரித்தானியப் பத்திரிகைகளும் அயர்நாட்டுப் பத்திரிகைகளும் ஒப்பந்தத்தைப் போற்றி எழுதின. கத்தோலிக்க மதகுருமார்கள் தேவாலயங்களில் பிரசாரம் செய்தனர். அயர் குடியரசு மன்றம், இராணுவத்தினர் மத்தியிலேயும் மற்றும் இடங்களிலேயும் இரகசியமாகப் பிரசாரம் செய்தது. ஆங்கிலேயரால் நூற்றுக்கணக்கான அரசியற் கைதிகள் விடுதலை செய்யப்பட்டது. 43 கைதிகள் மரண தண்டனையை எதிர்நோக்கி நிற்பது, நாட்டில் 1,30000

மைக்கேல் கொளின்ஸின் நெருங்கிய நண்பரும் பாதுகாப்பு மந்திரியுமான கதல் புருகா, ஒப்பந்தத்தைப் பற்றிப் பேசுகையில், 'அது ஒரு துளி நஞ்சு' என அதை வர்ணித்தார். ஈற்றில் வாக்கெடுக்கப்பட்டது. 64 பேர் ஒப்பந்தத்துக்குச் சாதகமாகவும் 57 பேர் பாதகமாகவும் வாக்களித்தனர். குடியதிபதி டி வேலராவுக்கு இது ஒரு தோல்வி!

இந்த வேளையில் நாட்டில் கட்டுப்பாடு இருக்க வேண்டியதின் அவசியத்தை வற்புறுத்துவதற்காகக் குடியதிபதி எழுந்தார். ஒருசில வார்த்தைகள் கூறியதும் அவரது குரல் கரகரக்கத்

### அரங்கம் 10

டி வேலரா முதலியோர் இல்லாத பொழுது ஆதர் கிரிவித் குடியதிபதியாகத் தெரிவு செய்யப்பட்டார். மைக்கேல் கொளின்ஸ் நிதியமைச்சராகவும் விலியம் கொஸ்கிரால் உள் ஆட்சி அமைச்சராகவும் கவன் டபி வெளிவிவகார அமைச்சராக

**'கோமகன்'**
**'மாமல்லன்'**

வும் கெவின் ஓஹிக்கின்ஸ் பொருளாதார விவகார அமைச்சராகவும் றிச்சட் மல்க்கஹி பாதுகாப்பு அமைச்சராகவும் தெரிவு செய்யப்பட்டனர்.

தெரிவுகள் முடிவடைந்ததும், தான் ஒரு குடியரசின் தலைவராகவே பணியாற்றுவதாக ஆதர் கிரிபித்தும், இராணுவம் அயர் குடியரசின் இராணுவமாகவே மதிக்கப்படும் என மலக்கியும் உறுதிமொழியளித்தனர். அதன் பின் தோள் அயரினின் கூட்டம் முடிவுற்றது.

ஆங்கிலேயருடனான ஒப்பந்தத்தில் கையொப்பமிட்ட அரசாதிகாரிகளின் முதல்வர் என்ற முறையில் கிரிபித், ஆங்கிலேயரால்

ஐவர் அமைச்சர்களாக்கப்பட்டனர். மைக்கேல் கொளின்ஸ் இடைக்கால அரசாங்கத்தின் அதிபராகத் தெரிவுசெய்யப்பட்டார்.

ஆங்கில மாதளபதி 16-1-1922ல் மைக்கேல் கொளின்ஸிடம் டப்ளின் மாளிகையை ஒப்படைத்தார். ஆங்கில இராணுவத்தினரையும் கறுப்பர்—துவரரையும் இங்கிலாந்துக்கு அனுப்ப ஆயத்தங்கள் செய்யப்பட்டன. ஆர். ஐ. பொலீஸ் படை கலைக்கப்பட்டது. ஆங்கில நீதி மன்றங்களும் சிறைச்சாலைகளும் இடைக்கால அரசாங்கத்திடம் ஒப்படைக்கப்பட்டன.

ஒன்றை ஆரம்பித்தார். மக்கள் அமைத்த குடியரசை மக்களே அழிக்காதிருப்பதற்காக அவர்கள் மத்தியில் ஒப்பந்தத்துக்கு எதிராகப் பிரசாரம் செய்வதற்காக ஒப்பந்தத்திற்கு எதிராக வாக்களித்த பாராளுமன்ற உறுப்பினர்கள் அனைவரையும் சேர்த்து ஏமன் டி வேலரா குடியரசுக் கட்சியை ஆரம்பித்தார்.

மகளிர் கழகம் மாநாடு கூட்டி ஒப்பந்தத்தை எதிர்த்துத் தீர்மானம் நிறைவேற்றியது. ஒப்பந்தத்தை ஆதரித்த மகளிர் கழக உறுப்பினர்கள் பதவித்துறவு செய்ய வேண்டும் எனக் கோரப்பட்டது.

இவை இவ்வாறிருக்க, அள்ஸ்ரர் மாகாணத்தில்

# குடியதிபதி தேர்வில் குளறுபடி

வேலையற்றோர் இருப்பது—இவையெல்லாம் ஒப்பந்தத்தை மக்கள் ஏற்றுக்கொள்வதற்குக் காரணங்களாக எடுத்துக் காட்டப்பட்டன. ஒப்பந்தத்துக்கு எதிரான எந்தவிதப் பிரசாரங்களுக்கும் பத்திரிகைகள் இடமளிக்கவில்லை.

மீண்டும் 3-1-1922ல் தோள் அயரின் கூடியது. ஒப்பந்தத்தை ஏற்றுச் சிலர் பேசினார்; எதிர்த்துச் சிலர் பேசினர். மந்திரிசபையில் ஒற்றுமை இல்லாமையைக் காரணமாகக் கொண்டு குடியதிபதி டி வேலரா 6-1-1922ல் தமது பதவித் துறவைச் சமர்ப்பித்து, உள்ளத்தை உருக்கும் உரையொன்றை நிகழ்த்தினார்:—

"......அயர் மக்கள் மத்தியில் நான் வளர்க்கப்பட்டேன். அயர் நாட்டிலே, ஒரு தொழிலாளியின் குடிசையில் நான் வளர்க்கப்பட்டேன்; மதிஞர்கள் மத்தியில் மட்டும் நான் வாழவில்லை...... 1916ம் ஆண்டில் பிரகடனப்படுத்தப்பட்டு 1919ம் ஆண்டில் பாராளுமன்றத்துக்கு அமைய அமைக்கப்பட்ட குடியரசைத்தான் நான் நிச்சயமாக ஆதரிக்கின்றேன். இந்தக் கொள்கையோடு ஒவ்வாத வேறெந்தக் கொள்கையையும் நான் ஏற்கமாட்டேன்.

"......அயர்நாட்டுக்காகச் சட்டங்கள் இட்டப் பிரித்தானியப் பாராளுமன்றம் விழைந்தால் அதை நாம் எதிர்ப்போம்; அந்தப் பாராளுமன்றத்துக்கு அந்த உரிமை இல்லை என மறுப்போம். இராணுவ முறையிலோ

தொடங்கியது. அவர் உட்கார்ந்து விட்டார்! இராணுவத்தைப் பொறுத்தவரையில் ஒழுங்கும் கட்டுப்பாடும் நிச்சயமாக நிலவும் எனக் கதல் புருகா உறுதி கூறினார்.

குடியரசை நிறுவுவதற்கும் அதைக் காப்பாற்றுவதற்குமாக அமைக்கப்

# இரத்த வெள்ளம் அளித்த ஐரிஷ் விடுதலை

பட்ட தோள் அயரினே குடியரசைத் தரைமட்டமாக்கி விட்டதைக் கண்ட டி வேலரா தனது பதவித் துறவை 9-1-1922ல் மீண்டும் சமர்ப்பித்தார். தோள் அயரின் விரும்பினால் தன்னை மீண்டும் குடியதிபதியாகத் தெரிவு செய்யலாம் என டி வேலரா அறிவித்தார். அவ்வாறு தெரிவு செய்யப்பட்டால், குடியரசை எதிர்க்கும் எவரையும் தான் அமைச்சரவையில் விட்டு வைக்க மாட்டாரெனவும் கூறினார். டி வேலராவை மீண்டும் குடியதிபதியாகத் தெரிவு செய்யப்படும் பிரேரணை, வாக்குக்கு விடப்பட்டபொழுது சாதகமாக 58 வாக்குகளும் பாதக

தெற்கு அயர்நாடு என அழைக்கப்படும் பகுதியின் பாராளுமன்ற உறுப்பினர்கள் அனைவரையும் 14-1-1622ல் டப்ளினில் திரினிற்றி கல்லூரியில் கூடுமாறு அழைத்தார். டி வேலரா போன்ற சில சின் பீன் வாதிகள் தென் அயர் நாட்டிலும் வட அயர்நாட்டிலுமுள்ள தொகுதிகளுக்குப் பிரதிநிதித்துவம் வகித்தாலும் அவர்கள் தென் அயர்நாட்டுத் தொகுதிகளின் பிரதிநிதிகளாகவே அழைக்கப்பட்டனர், வட அயர்நாட்டுத் தொகுதியொன்றுக்கு மாத்திரம் பிரதிநிதியாக இருந்த ஒரு சின் பீன் வாதி அழைக்கப்படவில்லை. எனினும்,

# மந்திரிசபையில் அபிப்பிராய பேதம் குடியதிபதி பதவி துறந்தார்

வேறெந்த முறையிலோ, இங்கிலாந்தின் சக்தி அயர்நாட்டை அடிமையாக்க முயன்றால் நாங்கள் எல்லா வழிகளாலும் அந்தச் சக்தியை விரயமாக்கியே தீருவோம்."

குடியதிபதியின் பேச்சு அவரது நேர்மையை எடுத்துக் கூறியது. ஆதர் கிரிபித் முதலியோரது உள்ளத்தில் அது தைத்தது. அதனால் பதவித்துறவை மீளப் பெறுமாறு ஆதர் கிரிபித்தும் மற்றும் பலரும் குடியதிபதியை வேண்டிக் கொண்டனர். 24 மணித்தியாலங்களுக்கிடையில் விவாதத்தின் மீதான வாக்கெடுப்பு நடைபெறுமானால் தான் பதவித் துறவை மீளப் பெறுவதாகக் குடியதிபதி அறிவித்தார். அதற்கு அனைவரும் ஒப்புக் கொண்டனர்.

மாக 60 வாக்குகளும் அளிக்கப்பட்டன. ஆதர் கிரிபித் மிகவும் தயக்கத்துடன் எதிர்த்து வாக்களித்தார்!

அயர் சுதந்திர மாநிலத்தின் அரசாங்கம் 6-12-1922ல் தான் நடைமுறைக்கு வரும். அதுவரையும் திகழப்போகும் குடியாக ஆட்சியின் தலைவராக ஒரு குடியதியைத் தேர்ந்தெடுக்க வேண்டிய கடமை இப்பொழுது தோள் அயரினைச் சார்ந்தது. ஆதர் கிரிபித்தின் பெயர் எழுந்தது. அமைக்கப்பட்ட குடியரசைத் தரைமட்டமாக்கியதில் முதலாவது ஆளான ஆதர் கிரிபித் குடியதிபதிப்பதவிக்கு அருகதையற்றவர் என்று கூறி டி வேலராவும் அவருடைய சகாக்களும் வெளிநடப்புச் செய்தனர்.

தென்அயர்நாட்டுப் பாராளுமன்றம் என்றதொன்றைத் தாம் ஏற்றுக் கொள்வதில்லை என்று கூறி டி வேலராவோடு நின்ற குடியரசுவாதிகள் கூட்டத்தைப் புறக்கணித்தனர்.

கூட்டம் கூடியதும் ஒரு இடைக்கால அரசாங்கம் அமைக்க முயற்சிகள் எடுக்கப்பட்டன. அயர் சுதந்திர மாநில அரசாங்கம் செயற்படும் வரை குடியரசு அரசாங்கம் செயற்படும் என்று கூறிய கிரிபித், எதற்காகத் தான் இந்த இடைக்கால அரசாங்கத்தை அமைக்க எண்ணினாரோ, தெரியவில்லை. குடியதிபதி ஆதர் கிரிபித்தின் கீழுள்ள அமைச்சர்கள் மீண்டும் அதே பதவிகளுக்கு இடைக்கால அரசாங்கத்தின் அமைச்சர்களாக்கப்பட்டனர். மேலும்

# புதிய கட்சி உருவாகியது

இடைக்கால அரசாங்கம், வேதனம் அளிக்கப்படும் ஒரு பொலீஸ் படையை உருவாக்க முற்பட்டது. குடிகள் காவலர் என அழைக்கப்பட்ட இந்தப் படையில் ஒப்பந்தத்தை ஆதரித்த தொண்டர்களே சேர்க்கப்பட்டனர். ஓர் ஒற்றுத்துறையும் அமைக்கப்பட்டது. இதிலும் ஒப்பந்தத்தை ஆதரித்தவர்களே சேர்க்கப்பட்டனர். குடியரசு இராணுவத்தில் ஆணையாளர்களாக நியமிக்கப்பட்டவர்களில் அதிகமானோரும் ஒப்பந்தத்தை ஆதரித்தவர்களே!

சட்ட வல்லுநரான ஏஸ்கின் சில்டேஸ், ஒப்பந்தத்தை எதிர்த்து மக்கள் மத்தியில் பிரசாரம் செய்யும் பொருட்டு குடியரசு அயர்நாடு என்னும் பத்திரிகை

மீண்டும் இனக்கலவரம் நடைபெற்றுக் கொண்டிருந்தது. கத்தோலிக்கர்கள் ஈனஇரக்கமின்றிச் கடப்பட்டனர். இவற்றை அனேகமாக அள்ஸ்ரர் பொலீசாரே செய்தனர். இந்தக் கலவரங்கள் நடைபெற்றுக் கொண்டிருந்த காலத்தில் எல்லை ஆணைக் குழு நியமிப்பது பற்றிய பிரச்சினை எழுந்தது.

(வளரும்)

### தலைவருக்கு அஞ்சலி

சங்கானை இந்து முற்போக்கு வாலிபர் சங்கக் கூட்டத்தில் தலைவர் திரு. என். ஆர். இராஜவரோதயருக்கு அஞ்சலி தெரிவிக்கப்பட்டது. இக் கூட்டத்துக்கு திரு. கா. சுந்தரலிங்கம் தலைமை தாங்கிப் பேசுகையில், சிதைந்து கிடந்த ஈழத் தமிழ் பேசும் இனத்தைச் சீராக்கி மேம்படுத்தியவர் திரு. இராசவரோதயமேயாகும்; அன்னாரை இந்த அகாலவேலையில் இறந்தது ஈடு செய்ய முடியாத நட்டமாகும், என்று குறிப்பிட்டார்.


## இந்த எழுத்துக்கள்

இப்பத்திரிகையில் உபயோகிக்கப்பட்டிருக்கும் 12 பொயிண்ட் றோமன், 12 பொயிண்ட் போல்ட், 10 பொயிண்ட் றோமன், 10 பொயிண்ட் போல்ட் எழுத்துக்கள் யாவும் சுதந்திரன் ரைப் பவுண்டரியில் உற்பத்தி செய்யப்பட்டவை.

8, 10, 12, 14, 18 பொயிண்ட்களில் தமிழ், ஆங்கில எழுத்துக்களும், ஸ்பேஸ், குவாட்ஸ் போன்ற இதர உபகரணங்களும் வார்க்கும் திறமை வாய்ந்தது எங்கள் இயந்திரம். அத்தோடு சாதாரண எழுத்துக்களையும், அலங்கார எழுத்துக்களையும் வார்க்க முடியும்.

இப்பத்திரிகையில் உபயோகிக்கப்படும் புது எழுத்துக்கள் நம்மிடம் விற்பனைக்குண்டு. வேண்டியவர்கள் விவரத்துக்கும், விலைப்பட்டியலுக்கும் எழுதவும்.

தேய்ந்த பழைய எழுத்துக்கள் வைத்திருக்கும் அச்சகங்கள் அந்த எழுத்துக்களைக் கொண்டு எங்களிடம் புதிய எழுத்துக்களைக் குறைந்த கட்டணத்தில் திரும்ப வார்த்து எடுத்துக் கொள்ளலாம்.

**சுதந்திரன் ரைப் பவுண்டரி,**

194 ஏ. பண்டாரநாயக்க விதி,
கொழும்பு—12.

சுதந்திரன்
SUTANTIRAN

1963 செப்டம்பர் மாதம் 29-ந் தேதி

194 ஏ, பண்டாரநாயக்க வீதி, கொழும்பு-12.
தொலை பேசி எண் : 3411 த. பெ. 1183

# அரசாங்க முடிவும் அறப் போராட்டமும்

அடுத்த ஆண்டு ஜனவரி முதற் திகதி தொடக்கம் தனிச் சிங்களம் அமுல் நடத்தும் முடிவை மந்திரி சபை மீண்டும் ஊர்ஜிதம் செய்துள்ளது. எனவே தமிழ் மொழியைப் பாதுகாக்க வேண்டுமானால், தமிழ் பேசும் மக்களுக்கு நேரடி நடவடிக்கையைத் தவிர வேறு வழியே கிடையாது.

அரசாங்கத்தின் வகுப்புவாதம் முழு உருவம் பெற்றுவிட்டது. அதன் சிங்கள அமுல் பற்றிய முடிவு முற்றிலும் வகுப்புவாதம் நிறைந்ததாகும். கடுகளவு இடம் கூட தமிழுக்கு அளிக்காமல் தனிச் சிங்களத்தை மூர்த்தண்யமாகத் திணிக்க ஆட்சியாளர் திடசங்கற்பம் கொண்டுள்ளனர். இது தமிழ் பேசும் சமுதாயத்திற்கே விடுத்த சவாலாகும்.

மந்திரி சபை தமிழ் மொழியை அடியோடு புறக்கணித்து விட்டது. தமிழைப் புறக்கணித்தல் நாட்டில் மூன்றிலொரு பகுதி மக்களையே புறக்கணிப்பதாகும்.

திரு. பண்டாரநாயக்காவின் கொள்கையைப் பின்பற்றுவதாகக் கூறும் ஆட்சியாளர் அவரது நியாயமான தமிழ் உபயோகச் சட்டத்திற்கு ஏன் குழி தோண்டினர்? சிங்கள அமுலைப்பற்றி முடிவு செய்தபோது "நியாயமான தமிழ் உபயோகம்" பற்றி இம்மியளவுகூட சிந்தித்தார்களா? தமிழையும் தமிழ் பேசும் இனத்தையும் துடைத்தெறிய வேண்டும் என்ற நோக்கம் கொண்டவர்கள் தமிழுக்கு இடமளிப்பது பற்றி எப்படிச் சிந்திக்க முடியும்?

மந்திரி சபையின் முடிவைக் கண்டு மகிழ்ச்சியால் ஆரவாரம் செய்கின்றனர் சிங்கள வகுப்புவாதிகள். வகுப்புவாதப் பத்திரிகைகள் முடிவை வரவேற்று தலையங்கம் தீட்டுகின்றன. அவர்களின் மகிழ்ச்சிக்குக் காரணம் தமிழ் இனி நிச்சயமாக ஒழிந்து விடுமென்பதுதான்.

அரசாங்க ஊழியர்கள் சிங்களம் படிக்க மேலும் இரு வருடங்கள் அவகாசம் அளிக்கப்பட்டுள்ளது. இது ஊழியர்கள் மீது கொண்ட கருணையால் செய்யப்பட்ட முடிவு என்று யாரும் கருத வேண்டியதில்லை. கண்மூடித்தனமாக வகுப்புவாத நடவடிக்கையில் இறங்கியிருப்பவர்களுக்கு அந்த எண்ணம் இருக்க முடியாது. ஆயிரக்கணக்கான ஊழியர்கள் திடீரென வெளியேறினால் அரசாங்க நிர்வாகம் சீர்குலையும். அதைத் தடுக்கவே இந்த ஏற்பாடு.

"ஈராண்டு" முடிவால் தமிழ் பேசும் அரசாங்க ஊழியர்களின் நிலையில் எத்தகைய மாறுதலும் ஏற்படவில்லை. "சிங்களம் படிப்பதுமில்லை — ஓய்வு பெறுவதுமில்லை" என்னும் அவர்களின் முன்னைய தீர்மானத்தை ஊழியர்கள் இவ்வாரம் கொழும்பில் கூடி ஊர்ஜிதம் செய்துள்ளனர். இது மந்திரி சபையின் முடிவுக்குக் கொடுத்த பதிலடியாகும்.

தமிழ் பேசும் பாராளுமன்ற உறுப்பினர்கள் அரசியல் ஊழியர்களுக்கு கூட்டாக ஒரு வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

அரசாங்க ஊழியர்கள் எந்நிலையிலும் பதவியிலிருந்து விலகக் கூடாதென்பதே அந்த வேண்டுகோள்.

ஈராண்டு அவகாசம் அளித்ததால் அரசாங்கத்தின் மொழிக் கொள்கையில் எவ்வித மாற்றமும் ஏற்படவில்லை. எனவே இரு வருடங்களுக்குப் பிறகும் இதே நிலைமைதான் நீடிக்குமென்பதில் ஐயமில்லை. இனத்துக்கும் மொழிக்கும் பேராபத்து ஏற்பட்டுள்ள இந்த நெருக்கடியான வேளையில் தலைவர்கள் காட்டும் வழியிலே செல்ல வேண்டியது அரசாங்க ஊழியர்களின் கடமை.

அடுத்த அறப்போராட்டத்தின் ஆரம்பக் கட்டமே பகிஷ்காரம். இவ்வியக்கம் நாளை மறுதினம் தொடங்குகிறது. சிங்களத் திணிப்புக்குக் கருவியாகப் பயன்படுத்தப்படுகிறவர்கள் மக்களால் சமூக பகிஷ்காரம் செய்யப்படுவர். தமிழ் பேசும் சமுதாயத்திலிருந்தே அவர்கள் ஒதுக்கப்படுவர். தமிழ்ப் பகுதியில் சிங்களத்தைப் பலவந்தமாகத் திணிக்கும் முயற்சியை முறியடிப்பதே இவ்வியக்கத்தின் நோக்கம்.

இந்தப் புனித இயக்கம் நிறைவேறப் பொது மக்களின் பூரண ஒத்துழைப்பு தேவை. மக்களின் பேராதரவின்றேல் நேரடி நடவடிக்கை வெற்றி பெறுதல் சாத்தியமன்று. ஆகவே,

மக்களின் ஒத்துழைப்பையும், ஆதரவையும் திரட்டும் பொருட்டு தமிழரசுத் தலைவர்கள் இவ்வாரம் கிராமம் கிராமமாகப் பாதயாத்திரை புறப்படுகின்றனர்.

தமிழ்ப் பிரதேசத்தின் உயிர் கிராமத்திலேயே இருக்கிறது. மக்கள் சக்தியின் உறைவிடமும் கிராமமே. எனவே தமிழரசுத் தலைவர்கள் கிராமங்கள்தோறும் கால்நடையாகச் சென்று, மக்களை நேரடியாகச் சந்திப்பதால், அறப்போராட்டத்துக்கு மக்களின் ஆதரவைப் பெருமளவு திரட்டமுடியும்.

தாய் மொழிக்கும் தமிழ் பேசும் இனத்துக்கும் ஏற்பட்டுள்ள பேராபத்தையும், உரிமைப் போராட்டத்தின் விபரங்களையும் தலைவர்கள் பாதயாத்திரையின்போது கிராம மக்களுக்கு எடுத்துக் கூறுவார்கள்.

அத்துடன், இப்பாதயாத்திரை தீண்டாமைக்கும் சாவு மணி அடிக்கவும் பெரிதும் உதவும். சாதியின் பெயரால் மக்கள் ஒருசாராரை ஒதுக்கி வைப்பதின் கேடுகளை விளக்கி கூறி, மக்களிடையே மனமாற்றத்தை ஏற்படுத்த தலைவர்கள் முயற்சி செய்வார்கள்.

அவர்கள் தங்களின் கால்நடை யாத்திரையின்போது கிராமங்களில் சம பந்தி போசனம் நடத்தி தீண்டாமையை அகற்ற வழிகாட்டுவார்களென்றும் ஒரு செய்தி கூறுகிறது. இது ஒரு சிறந்த திட்டம்.

இனத்தின் ஒற்றுமையைக் கெடுக்கும் தீண்டாமைப் பிசாசு நமது உரிமைப் போராட்டத்தையே வலுவிழக்கச் செய்கிறது. மக்கள் அனைவரையும் ஒரே கொடியின் கீழ் சேர்க்க வேண்டுமானால் தீண்டாமை நிச்சயமாக அகற்றப்படவேண்டும்.

தலைவர்களின் பாதயாத்திரையால் கிராம மக்களிடையே உரிமை உணர்ச்சி உந்தப்படும். கிராமங்களிலே புதிய உத்வேகம் கிளர்ந்தெழும். உரிமை உணர்வின்றி உறங்கிக் கிடக்கும் கிராமங்கள் தட்டி எழுப்பப்படும். அறப்போராட்டத்துக்கு கிராம மக்களின் பேராதரவு பெருமளவில் கிட்டும். எனவே தலைவர்களின் பாதயாத்திரை தமிழ் பேசும் மக்களின் போராட்ட வரலாற்றிலே முக்கிய இடம் பெறும் என்பதில் ஐயமில்லை.

நாளை மறுதினம் தனிச் சிங்களம் தமிழ்ப் பிரதேசத்தின்மீது படையெடுக்கும் போது, அதனை முறியடிக்கும் பகிஷ்கார இயக்கத்துக்கு முழு ஒத்துழைப்பையும் அளிக்குமாறு தமிழ் பேசும் பெருங்குடி மக்களைக் கேட்டுக்கொள்கின்றோம்.

# தமிழ் மக்கள் மத்தியில் உள்ள எட்டப்பர்களே முதலில் பகிஷ்கரிக்கப்படுவர்

## ஆட்சி மொழியை அமுல் நடத்த முனைவோருக்கு வட-கிழக்கில் இடமில்லை

தமிழரசுக் கட்சி ஆரம்பிக்கப் போகும் பகிஷ்கரிப்பு இயக்கம் எத்தன்மையதாகவிருக்கப் போகிறது என்பதையிட்டு அறிய மக்கள் ஆவலாயுள்ளனர். சாத்வீகமான முறையில் அஹிம்சையை ஆயுதமாகக் கொண்டே பகிஷ்கார இயக்கம் நடைபெறும் என்று தமிழரசுத் தந்தை உட்பட தலைவர்கள் அனைவரும் வலியுறுத்தி உள்ளனர். வடக்குக் கிழக்கு மாகாணங்களில் சிங்களம் மட்டும் சட்டத்தை அமுல் நடத்தும் நோக்கமாக அரசாங்க அலுவலகங்களில் சிங்களத்தில் கடமை புரிய முனையும் எவரையும் தயவு தாட்சண்யம் எதுவுமின்றி, உறவுமுறை நட்பு சகலவற்றையும் மறந்து சமூக ரீதியில் பகிஷ்கரிக்க வேண்டுமென்று தலைவர்கள் தமிழ் பேசும் பொதுமக்களைக் கேட்டுள்ளனர்.

### இடமில்லை

சிங்களத்தை அமுல் நடத்த முனையும் எவருக்கும் வடக்குக் கிழக்கு மாகாணத்தில் வாழ்க்கை வசதிகளைச் செய்யாமல் விடுவதே இவ்வியக்கத்தின் நோக்கமாகும்.

சுருங்கக் கூறின், சிங்களம் மட்டும் சட்டத்தை அமுல் நடத்தத் துணையாக இருக்கும் எவருக்கும் வட கிழக்கு மாகாணத்தில் இடமில்லை.

தமிழ் பேசும் இனத்திற்குக் கேடு புரியும் கொடும் சட்டத்தைத் துணைகொண்டு வரும் எவரும் தமிழ் மொழியின் பகைவர்களே என்பதை மக்கள் நன்கு உணர்வர்.

### உள்ளத் துணிவுடன் போராடுவோம்

இத்தகைய பகைவர்களை வாள் கொண்டோ, வேல் கொண்டோ, வில்லம்பு தனைக் கொண்டோ போரிட வேண்டியதில்லை. துப்பாக்கிச் சனியனின் துணையைக் கூட நாட வேண்டிய அவசியமில்லை. உள்ளத் துணிவுடன், உறுதியான போக்குடன் அஹிம்சை எனும் சீரிய ஆயுதம் கொண்டு தாக்கிப் புறமுதுகிட்டோடச் செய்ய வேண்டும்.

தமிழ் பேசும் மக்கள் மத்தியில் அவர்களுக்குத் தீங்கு பயக்கும் துரோகிகளை வாழ விடுவது மென்மேலும் அபாயத்தைக் கூட்டுவதாகவே முடியும். தமிழ் பேசும் இனத்தின் வைரியான சிங்களம் மட்டும் சட்டத்தை உருவாக்கியவர்கள், அச் சட்டத்தை அமுலாக்குவதற்குத் தம் சுற்றத்தவரை மட்டுமல்ல, நமது சக உதிரச் செல்வங்களையும் சூதால் மயக்கி நம் மத்தியில், நமக்கு எதிராகத் தூண்டி வருகின்றனர். இவர்களையும் நாம் பகிஷ்கரிக்க நேரிடுவதால் நம்மிடையேயுள்ள உறவு முறைகள் பாதிக்கப்படலாம், வாழ்க்கை வசதிகளை இழந்து அவர்கள் வாடி வதங்கி, தமிழ் பேசும் மக்கள் மத்தியில் வாழ முடியாதவர்களாக வெளியேறி, தமது ஏவலாளர்களான எஜமானர்களின் தாள்பணிந்து 'தமிழ் பேசும் மகன் எவனும் அடிமைப்பட ஆயத்தமில்லை' என்று அழுது புலம்ப வேண்டும். அத்தகைய நிலையினை வடக்குக் கிழக்குவாழ் தமிழ் பேசும் பெருங்குடி மக்கள் உருவாக்குவார்களா?

### 'தீண்டாதோர்'

பகிஷ்கரிப்பு இயக்கத்தின் பலனாக நம் மத்தியிலேயே ஒருசாரார் சிங்களத்தை அமுல்நடத்தத் துணிந்த நம்மின ஊழியர்களே—புறக்கணிக்கப்படக்கூடும். காலத்தின் இடைவெளி அவர்களை இனத்துரோகிகள் வரிசையில் சேர்த்துவிடும். ஏன்! இப்போதுள்ள தீய சக்தியான தீண்டாமைப் பூதம் தன் நிலை மாறி, சிங்களம் படித்தோரே தீண்டாதோர் என்ற நிலை உருவாகவும் இடமுண்டு.

சில அதிகாரிகளுக்கும் மந்திரிமார்களுக்கும், ஏன் தமது நண்பர்களுக்குமே சிங்களத்தில் கடிதம் எழுதவும், சிங்களத்தில் ஒப்பமிடவும் துணிந்துவிடுகின்றனர். தமிழ் பேசும் மக்கள் தாங்

(9ம் பக்கம் பார்க்க)

# தலைவர்களின் பாத யாத்திரை

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

### அமைதியான முறையில்

இவ்வியக்கம் அமைதியான முறையிலும் அஹிம்சையை ஆயுதமாகக் கொண்டுமே நடைபெறும் என்பது மீண்டும் வலியுறுத்தப்பட்டுள்ளது.

1-10-63-ல் ஆரம்பமாகும் பகிஷ்கார இயக்கத்தைத் தொடர்ந்து காந்தி அடிகள் அவதரித்த தினமாகிய ஒக்டோபர் மாதம் 2-ம் திகதி தமிழரசுக் கட்சித் தலைவர்களின் பாத யாத்திரை இயக்கமும் ஆரம்பமாகிறது.

### பாத யாத்திரை

காந்தியடிகளின் புனித அஸ்தி கரைக்கப்பட்ட புனித தீர்த்தத் தலமாகிய கீரிமலையிலிருந்து தமிழரசுத் தந்தை திரு. சா. ஜே. வே. செல்வநாயகம் தலைமையில் இப் பாத யாத்திரை ஆரம்பமாகிறது.

யாழ்ப்பாண மாவட்டத்திலுள்ள கிராமங்கள், பட்டினங்கள் தோறும் தலைவர்கள் கால் நடையாகச் சென்று பகிஷ்கார இயக்கத்துக்கு ஆதரவு தேடுவதுடன் இயக்கத்தை நடத்தும் முறைகளையும் விளக்குவர் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

தமிழ் பேசும் மக்களை ஒதுக்கி, அவர்கள் தம் உரிமைகளைத்தையும் பிடுங்கிய ஆட்சிக்கு எதிராக அடுத்து நடைபெறவிருக்கும் நேரடி நடவடிக்கைக்கு ஆதரவு திரட்டுவதற்காகவே கிராமம் கிராமமாகத் தலைவர்கள் கால் நடையாகச் செல்லவுள்ளனர்.

### தீண்டாமை ஒழிப்பு

தமிழ் மக்களிடத்தில் பிரிவினை உண்டுபண்ணியிருக்கும் தீண்டாமைப் பேயைக் களைவதற்கும் இந்தப் பாதயாத்திரை பயன்படும் என்றும் நம்பப்படுகிறது.

மேலும் சமபந்தி போசனமும் ஆங்காங்கே நடைபெறும் என்று அறியப்படுகிறது.

யாழ்ப்பாண மாவட்டத்திலுள்ள ஒவ்வொரு கிராமத்துக்கும் தலைவர்கள் கால் நடையாகச் செல்ல விரும்புவதால் வடக்குக் கிழக்கு மாகாண பாராளுமன்ற உறுப்பினர்கள், செனட்டர்கள் அனைவரும் ஒரு மாத காலமாவது யாழ்ப்பாணத்திலேயே அதிக நாட்கள் தங்குவார்கள் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

பாதயாத்திரைக்கான திட்டங்களும் மிக வேகமாகத் தயாரிக்கப்பட்டுள்ளன. ஒவ்வொரு கிராமத்திலும் தலைவர்களை வரவேற்கவும், அவர்களுடைய கருத்தை அறியவும் இப்பொழுதிருந்தே மக்கள் பேரார்வம் கொண்டுழைப்பதாக நமது நிருபர் மேலும் தெரிவிக்கிறார்.

### பொதுக் கூட்டம்

29-9-63-ல் யாழ்ப்பாணம் கோட்டை மைதானத்தில் மாபெரும் பொதுக் கூட்டமொன்று கட்சித் தலைவர் திரு. சி. மூ. இராசமாணிக்கம் தலைமையில் நடைபெறவிருக்கிறது. இதில் வடக்குத்தமிழரசுப் பாராளுமன்ற உறுப்பினர்களும், உடுப்பிட்டிப் பிரதிநிதி திரு. மூ. சிவசிதம்பரம், வவுனியாப் பிரதிநிதி திரு. தி. சிவசிதம்பரம் ஆகியோரும் பேசுவார்கள் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

# பதவியிலிருந்து ஓய்வு பெற வேண்டாம்

## சிங்களப் பரீட்சைக்கு தோற்றுபவர்களை பகிஷ்கரிப்போம்

### தமிழ் அரசாங்க ஊழியர் சங்கம் முடிவு

தமிழ் பேசும் அரசாங்க ஊழியர்கள் அனைவரும் உத்தியோக மொழியை அமுல் நடத்துபவர்களது கெடுபிடிக்கும் கட்டாயத்திற்கும் பணிந்து அரச சேவையிலிருந்து இளைப்பாற எத்தனிக்கும் எண்ணத்தை முற்றுகத் துறந்து விட வேண்டும். அதே நேரத்தில் எல்லாத் தமிழ் பேசும் அரசாங்க ஊழியர்களும், அவர்கள் எந்தப் பிரிவைச் சேர்ந்தவர்களாயினும் வருங்காலத்தில் சிங்களப் பரீட்சைக்குத் தோற்றவோ, விண்ணப்பிக்கவோ கூடாது. இம் முடிவுக்கு அமைய நடக்கத் தவறுபவர்களைத் தமிழ் அரசாங்க ஊழியர்கள் நிச்சயம் பகிஷ்கரிப்பார்கள்.

இவ்வாறு கடந்த 25ம் திகதி பம்பலப்பிட்டி சரஸ்வதி மண்டபத்தில் நடைபெற்ற தமிழ் அரசாங்க ஊழியர் சங்கத்தின் சிறப்புப் பொதுக் கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டுள்ளது.

கலாநிதி திரு. வ. கணேசலிங்கம் தலைமையில் நடைபெற்ற இக் கூட்டத்தில் மேலும் பல முக்கிய தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டுள்ளன:

கடந்த வாரம் அமைச்சர் அவை வெளியிட்ட அறிக்கை உட்பட அண்மைகாலச் சம்பவங்களை நன்கு பரிசீலித்த பொழுது அரசாங்கத்தின் அடிப்படைத் திட்டத்தில் எவ்வித மாற்றமும் ஏற்படவில்லை என்பது தெளிவாகிறது. மேலும் அமைச்சர்அவையின் முடிவு, மொழி அமுலுக்கு ஆதரவாக உள்ளதேயொழிய வேறு எவ்வித மாற்றங்களும் இருப்பதாகத் தெரியவில்லை.

அமைச்சரவையின் இந்த முடிவைக் கண்டித்துத் தமிழ் அரசாங்க ஊழியர் சங்கம் பின்வரும் தீர்மானங்களை நிறைவேற்றியுள்ளது:

சிங்களத் தேர்வுக்கு விண்ணப்பித்ததன் மூலமும் தோன்றுவதன் மூலமும் தவறிழைத்து விட்ட தமிழ் பேசும் அரசாங்க ஊழியர்களும், அவர்கள் எந்தப் பிரிவைச் சேர்ந்தவர்களாயினும் இனிமேல் சிங்களப் பரீட்சைக்கு விண்ணப்பிக்கவோ — தோன்றவோ கூடாது.

தமிழ் பேசும் அரசாங்க ஊழியர்கள் அனைவரும் உத்தியோக மொழியை அமுல் நடத்துபவர்களது கெடுபிடிக்கும் கட்டாயத்திற்கும் பணிந்து அரச சேவையிலிருந்து இளைப்பாற எத்தனிக்கும் எண்ணத்தை முற்றுகத் துறந்துவிட வேண்டும்.

தமிழ் பேசும் மக்களின் தாய் மொழிக்கு உரிமை கிடைக்க முன் சிங்களப் பரீட்சைக்குத் தோற்றியவர்களை மேலும் தொடர்ந்து பரீட்சை எடுத்தால் நாம் பகிஷ்கரிக்காது விடின் எமது இனம் அழிந்து விடும்.

எல்லாத் தமிழ் அரசாங்க ஊழியர்களும் தங்களைச் சார்ந்த வேலைகளில் வரும் எந்தச் சிங்களப் பத்திரங்களிலாவது கையொப்பம் இடுவதில்லை.

சிங்களப் பரீட்சையின் ஒரு பகுதியையோ அல்லது முழுப் பிரிவுகளையோ எடுத்துப் பரீட்சைக்குத் தோற்றிய தமிழ் பேசும் அரசாங்க ஊழியர்கள் சிங்களத்தில் கடமையாற்றுது இருக்க வேண்டும்.

சிங்கள அமுல் காரணமாகக் கட்டாயப் பதவி நீக்கத்திற்கு ஆளானவர்களின் பொருளாதார நிலையைச் சீர்படுத்து முகமாகத் தமிழ் அரசாங்க ஊழியர் சங்கம் எமது நலனில் நாட்டமுள்ள பிற இயக்கங்களின் உதவியுடன் ஆவன செய்ய வேண்டும்.

## விண்ணப்பம் அனுப்பியவர்கள் உடன் திருப்பிப் பெறவேண்டும்

## ஆட்சியாளர் முடிவிற்கு தமிழ் பாராளுமன்ற உறுப்பினர் கண்டனம்

அரசாங்கத்தின் மொழிக் கொள்கையின் கீழ் கொடுக்கப்படும் சலுகைகளைப் பயன்படுத்தி தமிழ் பேசும் அரசாங்க ஊழியர் எவரும் எந்த சந்தர்ப்பத்திலும், தாம் வகிக்கும் பதவியிலிருந்து ஓய்வு பெறக்கூடாது. இச்சந்தர்ப்பத்தைப் பயன் படுத்தி ஓய்வு பெற ஏற்கனவே முன்னறிவித்தல் கொடுத்திருப்பவர்கள் தமது விண்ணப்பங்களைத் திருப்பிப் பெற்றுக் கொள்ள வேண்டும்.

இவ்வாறு தமிழரசுக் கட்சிப் பாராளுமன்ற உறுப்பினர்களும் உடுப்பிட்டி, வவுனியாத் தொகுதி உறுப்பினர்களும் சேர்ந்து கூட்டாக வெளியிட்டுள்ள ஓர் பகிரங்க அறிக்கையில் தமிழ் பேசும் அரசாங்க ஊழியர்களை வேண்டியுள்ளார்கள்.

மேலும் அந்த அறிக்கை கூறுவதாவது:-

சர்ச்சைக்குட்பட்ட உத்தியோக மொழி மசோதாவை 1964ம் ஆண்டு, ஜனவரி முதல் திகதி தொடக்கம் கட்டாயமாகத் திணிக்கும், அரசாங்கத்தின் படுபாதகமான, ஒரவஞ்சகக் கொள்கையின் விளைவாக அரசாங்க சேவையிலிருந்து விரட்டியடிக்கப்படவிருக்கும் ஆயிரக்கணக்கான அரசாங்க ஊழியர்களின் நிலை பற்றிய பிரச்சினை எங்கள் உள்ளங்களைத் துன்புறுத்திக் கொண்டிருக்கிறது.

நடைபெறவிருக்கும் மாற்றத்தால் எமது மக்களே அதிகம் பாதிக்கப்படவிருப்பதால், நாங்கள், அவர்களின் பாராளுமன்றப் பிரதிநிதிகள் என்ற முறையில், உருவாகி வரும் நிலைமையைப் பார்த்து வாளாவிருக்க முடியாது.

நீதி, நேர்மை, நியாயம், நாகரிக அரசாங்கத்திற்குள்ள சாதாராண பண்பாடு, யாவற்றுக்கும் எதிராக, இந்நாட்டின் ஒருபகுதியினர் மீது அரசாங்கம், இன அடிப்படையில் பாரபட்சம் காட்டி வருகிறது. அந்த அளவுக்கு அரசாங்கம், அம் மக்களிடம் பணிவை எதிர்பார்க்கும் உரிமையை இழக்கிறது.

எங்களது நிலை, அன்றும் இன்றும், என்னவென்றால், அரசியல் ரீதியில் மொழிப் பிரச்சினைக்கு ஓர் முடிவு காணும் வரை, அரசாங்க சேவையில் கடமையாற்றும் எப்பகுதியினரையும் தண்டிக்கவோ, அவர்கள் உத்தியோகங்களை இழக்கச் செய்யவோ கூடாதென்பதே. காலஞ்சென்ற பிரதமர், திரு. எஸ். டபிள்யூ. ஆர். டி. பண்டாரநாயக்கா அவர்கள் அளித்த உறுதி மொழியும் அதுவே.

ஆகவே, அரசாங்கத்தின் மொழிக் கொள்கைக்கிணங்க, அரசாங்க சேவையிலிருந்து ஓய்வு பெற அளிக்கப்படும் சலுகையை எந்தவோர் அரசாங்க ஊழியரும் ஏற்றுக் கொள்ளக் கூடாதென்பதே எங்கள் ஆழ்ந்த அபிப்பிராயமாகும்.

அரசாங்கத்தின் கீழ் கடமையாற்றும் ஒவ்வொரு அரசாங்க ஊழியரையும் தனது உத்தியோகத்தில் உறுதியாக நிற்கும்படி கேட்டிக் கொள்ளும் அதே நேரத்தில், ஓய்வு பெற ஏற்கனவே விண்ணப்பித்தவர்களைத் தமது விண்ணப்பங்களைத் திருப்பிப் பெறுமாறும் வேண்டிக் கொள்கிறோம்.

கையொப்பம்: திருவாளர்கள் எம். சிவசிதம்பரம், பா. உ., உடுப்பிட்டி, அ. அமிர்தலிங்கம், பா. உ., வட்டுக்கோட்டை, எம். பாலசுந்தரம், பா. உ., கோப்பாய், எம். ஈ. எச். முகம்மதலி, பா. உ., மூதூர், வி. தர்மலிங்கம், பா. உ., உடுவில், எஸ். ஜே. வி. செல்வநாயகம், பா. உ., காங்கேசன்துறை, அ. சிவசுந்தரம், பா. உ., கிளிநொச்சி, சி. மூ. இராசமாணிக்கம், பா. உ., பட்டிருப்பு, செ. இராசதுரை, பா. உ., மட்டக்களப்பு, க. துரைரத்தினம், பா. உ., பருத்தித்துறை, வி. எ. அழகக்கோன், பா. உ., மன்னார், பி. மாணிக்கவாசகர், பா. உ., கல்குடா, ரி. சிவசிதம்பரம், பா. உ., வவுனியா, ஈ. எம். வி. நாகநாதன், பா. உ., நல்லூர், வி. நவரத்தினம், பா. உ., ஊர்காவற்றுறை, வி. என். நவரத்தினம், பா. உ., சாவகச்சேரி.

## தியாகத்திற்குத் தயாராக....

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

வேறல்ல என்னும் மறுக்க முடியாத முடிவிற்கு வருகிறது.

தமிழ் பேசும் அரசாங்க ஊழியர்பால் கடைப் பிடிக்கப்படும் இந்தப் பாரபட்சக் கொள்கைக்கு அரசாங்க சக்தி அனைத்தும் பிரயோகிக்கப்படுவதால், தமது நியாயமான உரிமைகளை மீட்பதற்கான இப்போராட்டத்தில் பெருமளவு தியாகமும் தன்னல மறுப்பும் தமிழ் பேசும் அரசாங்க ஊழியருக்கு இருக்க வேண்டுமென்பதை எடுத்துக் காட்டி, எந்த நிலையிலும் சிங்களம் கற்பதுமில்லை, ஓய்வு பெறுவதுமில்லை என்றும் முந்திய முடிவை மீண்டும் வலியுறுத்தி அம் முடிவைக் கடைப்பிடித்தற்கு பதவி இழப்பு உள்ளிட்ட எல்லாவிதத் தியாகத்திற்கும் தயாராயிருத்தல் வேண்டுமென்பதையும் சங்கம் தமிழ் பேசும் அரசாங்க ஊழியருக்குச் சுட்டிக் காட்ட விரும்புகிறது.

சங்கத்தின் தலைமைப் பீடம் அவ்வித தியாகங்களுக்குத் தயாராயிருப்பதுடன், உறுப்பினர்களையும் ஏனைய தமிழ் பேசும் அரசாங்க ஊழியர்களையும் தவறுதும் இடையறுதும் இப்போராட்டத்தை தொடர்ந்து நடத்த முன்வருமாறு அழைக்கிறது. அவ்வாறு முன்வர முடியாத தமிழ் பேசும் அரசாங்க ஊழியர் இருப்பின் அவர்கள் சங்கத்தின் இலட்சியத்திற்கு கேடு விளைவிக்காதவாறு சேவையிலிருந்து வெளியேறி, வெளியிலிருந்து போராட்டத்தில் பங்கு கொள்ளுமாறு சங்கம் கேட்டுக்கொள்கிறது.

## தமிழ் மக்கள்...

(8-ம் பக்கத் தொடர்ச்சி)

கள் இழந்துவிட்ட உரிமைகளை மீண்டும் பெற அரும்பாடுபட்டு அல்லலுறும் இவ்வேளையில் வெந்தபுண்ணிலே வேல்பாய்ச்சும் வேதனைச் சம்பவங்களில் ஈடுபடும் இத்தகையோரே முதன் முதலில் புறக்கணிக்கப்பட வேண்டியவர்களாவர்.

அரசுவரி குறைப்பு

தம்மினத்துக்கு இம்மியளவும் உதவி புரிய முன்வராத அரசுக்கு நாம் கொடுக்கும் பணத்தில் கூடுமானவரை கட்டுப்பாட்டை நாமே விதித்துக் கொள்ளக் கடமைப்பட்டுள்ளோம். நம்மை நாமே கட்டுப்படுத்துவதன் மூலம் ஆட்சியினருக்கு நாம் தேடிக் கொடுக்கும் திரவியக் குவியலுக்குத் தடை விதிக்க வழியுண்டு.

எத்தனையோ வகையில் நாம் கொடுக்கும் பணத்திற்குக் கட்டுப்பாடு விதிக்கலாம் ஒவ்வொரு நாளும் கண்மூடித்தனமாக நாம் புகைத்துச் சுவைக்கும் சிகரெட்டுகளில் மட்டும் பல லட்ச ரூபாய்களைத் தினசரி அரசுக்கு வரியாகச் செலுத்துகின்றோம்.

பாடுபட்டு உழைத்த பல லட்ச ரூபாய்களை "பியர்" புட்டி வாங்கித் தாக சாந்தி செய்வதில் அழித்துவிடுகிறோம். நமது உழைப்பு அரசினரால் வரி என்ற உருவில் உறிஞ்சப்படுகிறது. நமது உழைப்பைக்கொண்டு நமது பிரதேசம் செழிக்கவில்லை, நமது பெண்டு பிள்ளைகள் சுகம் காணவில்லை. நம்மை அடிமைகளாக்கி விடக் கங்கணம் கட்டிக் கொண்டுள்ள நம்மைப் புறக்கணிக்கும் இனம் வாழ்கிறது. நம்மிருப்பிடம் வரட்சி அடைகிறது.

நமது உழைப்பை உறிஞ்சுமிடம் வளம் சிறக்கிறது. இனியும் இந்நிலை நீடிக்க வேண்டுமா? சிந்தித்துச்செயலாற்ற வேண்டிய கட்டம் நெருங்கி விட்டது.

## பகிஷ்கார...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

பகிஷ்கார இயக்கத்தில் சகல மக்களும் கலந்து கொள்ள வேண்டும் என்றும் பகிஷ்கார இயக்கத்தின் நன்மை எத்தகையது என்பதை விளக்கும் முகமாக இலங்கை பூராவும் விநியோகம் செய்வதற்கு ஒரு துண்டுப் பிரசுரம் வெளியிடுவதாகவும் முடிவு செய்யப்பட்டுள்ளது.





சுகாதாரமான நவீன முறைப்படி
கைபடாமல் தயாரிக்கப்பட்ட
ரோஸ் பிராண்ட்
சுவீட்ஸ் டொபீஸ்
இலங்கையில் முதல் இடத்தை வகிப்பவை
ஒரு முறை சுவைத்தால் போதும்
மறுமுறை டொபி சுவீற்ஸ் வாங்கும்பொழுது
'ரோஸ்' பிராண்ட்
என்றே கேட்பீர்கள்.




கூட்டாக எழுதும் தொடர்கதை

## கதிர் ஏழு
## உயிர் மலர்

மல்லிகை மலரின் இதழ் கொண்டு அவன் கன்னங்கள் வருடப்படுகின்றனவா?...வெண்பனித் துகள் இதழ்களில் பட்டுச் சிலிர்க்கின்றனவா?........பஞ்சுப் பொதிக்கு பூந்தாழை மடலின் அடிப்பரப்பின் தண்மை கலந்த வளவளப்பு எங்கிருந்து வந்தது?.......துளிர் இலையாய் பளபளத்துச் சிரிக்கும், அந்தச் சின்னஞ் சிறு உயிர் மலர், இதயத்தின் நுண்ணிய உணர்ச்சி நரம்புகளை வருடி எழுப்பும் மதுராந்தக கானத்தில் அவன் சிந்தை, நெஞ்சமெல்லாம் கிறங்கிக் கிடக்கிறதா?

அவன் கைகளிலே பிடிக்கு அகப்படாமல்,வழுவிநழுவிக் குறும்புகள் செய்யும்—தன் அண்ணன் மகன் — சந்திரனுடன் விளையாடிக் கொண்டிருக்கிறான். அவனுக்கு வேடிக்கைப் பொருட்கள் யார் யார் தெரியுமா? தெருவில் நடக்கும் மனிதர்கள், கார், யந்திரவாகனங்கள், பறவையினங்கள் எல்லாமே அவனது விளையாட்டுக் கருவிகள்.

குழந்தையும், தெய்வமெனக் கொண்டாடும் தத்துவமே இதுதானு? அலகிலா விளையாட்டுடையானின் பிரதிநிதியான குழந்தை மனிதர்களை ஆடவிட்டு வேடிக்கைப் பார்ப்பதில் வியப்பில்லைத்தான்! அவன் தொழிலை குழந்தைகள் செய்கின்றன.

''தம்பி!......குழந்தையை உள்ளே கொண்டு வாங்கோ! ...வெளிய நிண்டா கெட்ட காத்தெல்லாம் பட்டு உடம்புக்கு ஆகாது!...'—அண்ணி குரல் கொண்டே வருகிருள். அவன் சந்திரனை உள்ளே கொண்டு வர முயல, சந்திரன் அழ ஆரம்பிக்கிறன்.

'அடடா!.......இதென்னது பிடிவாதம்!...வாடா கண்ணு ...உள்ள போவம்!......அங்க பார் அம்மா!......'—வேடிக்கைக் கருவிகளை விட்டு வர குழந்தைக்கு மனமில்லை.

'என்னண்ணி செய்ய!... அவன் வரமாட்டானெண்டு பிடிவாதம் பிடிக்கிருனே!...'

'போக்கிரிப் பயல்,........! உன்னைவிடப் பிடிவாதக்காரனுவான் போலக் கிடக்கே!...'

'அப்படியெண்டா நான் பிடிவாதக்காரனு, அண்ணி!'

'சிச்சிச்சி!......அப்படியெல்லாம் சொல்லுவேனு?...... கொஞ்சம் முன் கோபக்காரன் இல்லையா, ராஜா!...'

'போ!...அண்ணி!...அப்படியெண்டா நான் பிடிவாதக்காரன்...... முன் கோபக்காரன்!...எண்டெல்லாம் என்னைக் கேலி பண்ணிறியள் அப்படித்தானே!...'— என்று முகத்தை 'உர்' என்று வைத்துக் கொள்கிருன்.

'பாரன் குழந்தையை!... இவ்வளவு வளர்ந்தும் இன்னும் குழந்தைத்தனம் போகேல்ல!..... நீ எப்படித்தான் அங்க எல்லாம் படிப்பிக்கிறியோ!...ராஜா, உன்னை என் தம்பியாகக் கூட நினைக்க முடியவில்லை... என் மூத்த மகனுகத்தான் உன்னை எண்ண முடிகிறது!...நீ எப்பவும் இப்படியே குழந்தைத் தனத்தோடு இருப்பதைத் தான் நான் விரும்புகிறேனடா!......இந்தக் குழந்தை மனப்பான்மை எல்லாருக்கும் கிடைக்கக் கூடிய செல்வமல்ல ராஜா!...'—அண்ணி உணர்ச்சியின் விளிம்பில், தாய்மைச் சுடர்விட வார்த்தைகளை உதிர்க்கிருள்.!...'

'அண்ணி!...'—அவன் உதடுகள் துடிக்க, பாசச் சுழிப்பில் அவன் இதயம் வட்டமிட, கண்களிலே நீர் மல்கிறது.

'ஆனு!......உன்னுல் இப்படியே நீண்ட நாள் இருக்க முடியுமெண்டு என்னுல் எண்ணவே முடியவில்லை, ராஜா!'

'என்ன சொல்லுறீங்க அண்ணி!... ...விளங்கத்தான் சொல்லுங்களேன்!...'

'இல்லை ராஜா!...உனக்கும் நாளைக்கு ஒரு கலியாணம், கார்த்திகை எண்டு ஒண்டு நடந்திட்டா, அப்புறம் உனக்கு வரப் போறவள் என்ன சொல்லுவாளோ, அவளுக்கு நாங்க எல்லாம் ஐக்கியமாக இருக்கிறது பிடிக்குமோ!.......'—அண்ணி ஏதோ சொல்லிக்கொண்டே போனுள்.

'உனக்கு வரப்போறவள்.. உனக்கு வரப்போறவள்!...' —நெஞ்சம் கீறல் விழுந்த 'கிராமபோன்' தட்டாகிறது.

'புவனம், நீ எங்கே!...'—நெஞ்சத்தின் ஒரு மூலையிலிருந்து 'எதுவோ' கூவுகிறது.

'அண்ணி!...'

'என்ன தம்பி?...'

'....ம்......என்ன......ஒண்டுமில்லை அண்ணி!...'

'பரவாயில்லை, நீ உன்ர அண்ணியிடம் கேட்கவா. தயக்கம்......உன் அன்னை போன்றவளிடம் கூறவா யோசனை!...எனக்கு வேதனையாக இருக்கிறது ராஜா!...' —அண்ணி,பாசம் நெஞ்சத்தை அடைக்கக் கூறினுள்.

'உன் அன்னை போன்றவளிடம்!...'

'ராஜ்!...நான் உங்களுக்கு காதலியாக மட்டுமல்ல... உங்கள் அன்னையாகவும் இருப்பேன் ராஜ்!...நீங்கள் எனை புவனம் என்றழைக்கிறதைவிட, 'அம்மா' என்று

**செம்பியன் செல்வன்**

வேடிக்கையாக அழைப்பீர்களே அதுதான் எனக்கு 'ரொம்ப'ப்பிடிக்கிறது ராஜ்! ...ஒரு முறை 'அம்மா' என்று அழையுங்கள் ராஜ்! ....கதையுங்களேன்!...மாட்டீர்களா? நீங்கள் ஒரு முரடு! பெண்களின் மென்மை உணர்ச்சியைப் புரிந்து கொள்ளாதவர்கள்!...'

'அம்மா' வுக்கு கோபம் வந்துவிட்டதா?.....'—அவன் கலகலக்கிருன். அவன் அம்மா என்றழைத்ததால் அவள் முகம் ஒளிர்கிறது.

—நினைவுகளும் மரத்தின் வேர்களைப் போன்றவைதான். ஒன்றினடியிலிருந்து அதோடு தொடர்புடைய இன்னென்றுக்கு பிரம்மாவாகின்றன.

'என்ன ராஜா!.......ஏன் மெளனமாக நிண்டுவிட்டாய்!...'—அண்ணி அவனைச் சுய நிலை அடையச் செய்கிருள்.

'ஒண்டுமில்லை யண்ணி!..... வந்து....வந்து......கந்தையர் வீட்டாக்களெல்லாம் எப்ப வீடு மாறினவையள்....எங்க போயிட்டினம்........சொந்த வீட்டை வாடகைக்குக் கொடுத்திட்டு, ஏன் வாடகைக்கு வீடெடுத்துக் கொண்டு போனவை?...'

'தம்பி!... எனக்கொண்டும் சரியா விளப்பமா சொல்லத் தெரியாது!......புவனத்துக்கு கந்தையர் எங்கோ மாப்பிள்ளை பேசி வந்திருக்கிருர். பொடிச்சி அதுக்கு மாட்டனெண்டு சொல்லியிருக்குப் போல..அதுதான் ஆச்சுதோ போச்சுதோ எண்டு ஒரு நாள் இராத்திரி முழுதும் குடிச்சிட்டு வந்து கந்தையர் கத்தினுர்!...' இங்க இருக்கப் போய்த்தானே அவள் இப்படி மறுக்கிருள். இவளை வேறொரு இடத்தில கொண்டு போய் வைச்சுக் கட்டிக்கொடுக்காட்டி நான் கந்தையனில்லை!......அவன் இங்க மறுபடியும் திரும்ப வரேக்க முந்தி, நான் இவளுக்குக் கல்யாணம் செய்யாட்டி என்னை என்ர அம்மா வம்பிலை பெத்தவளெண்டு சொல்லு!...' எண்டெல்லாம் கத்தினுர் தம்பி! மறுநாளே வீட்டைக் காலி பண்ணிவிட்டுப் போயினம்!...'

'எங்க குடிபோய்ச்சினம் எண்டு தெரியுமா அண்ணி!..'

'எனக்குத் தெரியாது தம்பி!...ஆனு வீடு மாறுவதுக்கு முந்தி ஒரு நாள் புவனம் இங்கயே வந்திருந்தாள்!...'

'என்ன?..புவனம் இங்கயே வந்திருந்தாளா?...'—அதிர்ச்சியுடன், வியப்பின் எல்லையில் நிற்கிருன் ராஜா.

'ஓம்தம்பி, வந்திருந்தா!...'

'கந்தையருக்குத் தெரிந்திருந்தா சும்மா விட்டிருக்க மாட்டாரே!...'

'வீடு மாறுறதைச்சொல்லி விடை பெற்றுப் போக வந்திருந்தாள்......!'—அண்ணி ஒரு கணம் பேச்சை நிறுத்திவிட்டு, பெருமூச்செறிகிருள். அவள் உடல் புல்லரிப்பது அவனுக்குத்தெரிகிறது.

'என்னண்ணி!...'

'ஒண்டுமில்லை ராஜா!..... அவளுக்கு என்னைப் பற்றி ஏதாவது சொல்லியிருந்தியா?...'

'ஏதாவது என்ன அண்ணி ஏதாவது?.....உங்களைத்தான் எல்லாத்துக்கும் மலைபோல நம்பியிருக்கிறேன். யார் எங்களைக் கைவிட்டாலும், நீங்கள் எங்களை இணைத்து வைப்பீர்களென்றெல்லாம் அவளுக்கு ஆறுதல் சொல்லியிருக்கிறேனே, அண்ணி!...'

'அதுதான் அவள் அப்படி நடந்திருக்க வேண்டும்!...' —அண்ணியின் கருமணிகளில் நீர் படருகிறது.

'என்ன செய்தாள்!..என்ன நடந்தது அண்ணி!...'-அவன் இதய நரம்புகள் துடிக்கின்றன.

'விடை பெறேக்க இறுதியில், என் காலடியில் விழுந்து 'ஹோ' வென்று கதறினுளடா!...... 'உங்களைத்தான் அக்கா அவரும் நானும் மலை போல நம்பி இருக்கிறேம். எங்களை கைவிட்டிடாதேங்க அக்கா!...' — என்று அலறினுள்! அப்போது என் இதயம் எப்படித் துடித்தது தெரியுமா? இப்படித் துடிக்க விட்ட உன்மேல்தான் ஆத்திரம் ஆத்திரமாக வந்தது!'

'அண்ணி!...அவ எங்க வீடு மாறுகிறமெண்டு சொல்லேல்லயா?...'

'எங்கோ கொக்குவில் பக்கம்தான் என்று சொல்ல முடிந்ததே தவிர, செப்பமா அவளால் சொல்ல முடியவில்லை ராஜா!...அதைக் கந்தையர் ரகசியமா வைத்திருந்தாராம்...'

'அண்ணி!...எங்களை இப்படிப் பிரிப்பதினுல எங்கள் அன்பைப் பிரித்துவிடவா மெனக் கந்தையர் நினைக்கிருர். எங்களை அல்ல! எங்கள் காதலின் நிழலைக் கூட அவராால் பிரிக்க முடியாது. இப்படி உடல்களை நீண்ட தூரம் பிரிப்பதினுல், அதன் விளைவாக உள்ளம் பிரிக்க முடியாத அளவு இறுக்கமடைவதை அவரால் உணர முடியவில்லை!...... '— அவன் கண்களில் நீர் வழிகின்றது.

'என்ன புள்ளை!...தம்பியும் நீயும் கைக் குழந்தையை வெளியில வைச்சுக்கொண்டு பேசிக் கொண்டு நிக்கிறீங்க! ...கொக்குக் குருவி பறக்கிற நேரத்தில வெளியில பிள்ளையைக் கொண்டு வரக்கூடாது எண்டு இன்னும் தெரியாது? உள்ள கொண்டு வாங்க பிள்ளையை! .....'—ஆச்சியின் குரல் வீட்டுக்குள்ளிருந்து ஒலிக்கிறது. ராஜா சந்திரனைப் பார்க்கிருன். அவன் சிற்றப்பனின் தோளில், 'வீணி' வடித்துக் கொண்டு ஆழ்ந்த நித்திரையில் கிடக்கிருன்.

* * *

மனித மனமே விசித்திரமானதுதான்! அதில் எழும் இன்ப துன்ப அலைகள் தாம் எத்தனை சிந்தனையாக்கத்துக்குக் காரணமாகி விடுகின்றன! சிறப்பாக மனதினடித்தளத்திலே சென்று ஆழப் பதிந்து, சிந்தனைச் சுடர் ஏற்றுவதில், துன்ப நிகழ்ச்சிகளே முக்கிய பங்கெடுக்கின்றன.

'தந்தி' என்றதும் அவன் நெஞ்சம் எதை எதையோவெல்லாம் எண்ணி ஒரு கணம் கலங்கிக் குழம்பிய குட்டையாகிறது. நடுங்கும் கரங்களில் தந்தியைப் பிரிக்கிருன். ஒளிரும் வாசக மணிகள்:

'மகன் பிறந்துவிட்டான்! சிற்றப்பனை எதிர்பார்க்கிருன்!'

—அவன் இதயம் புகாரகன்ற பனிப் பாறையாக, தெளிவுறுகிறது.

'கங்ராஜுலேசன்ஸ்!. ...'—உமாவும், தோழியரும்தமது வாழ்த்தைத் தெரிவிக்கிருர்கள்.

'நன்றி!...'—அவன் கரங்கள் வேகின்றன.

'அப்போ என்ன ராஜா!—ஊருக்குப் புறப்படப் போறீங்களா?...'

'அதுதான் என்ன செய்வது எண்டு தெரியல்ல!...'—என்கிருன் ராஜா!

'ஏன் ராஜா?...'

'இல்லை!...வந்து வேலை ஏத்துக் கனை நாளாகவில்லை!... அதுக்குள்ள எப்படி லீவு கேட்கிறது என்று புரியேல்ல!...'

'தம்பி!......நீங்க அப்படி ஒண்டும் அவசியமில்லையே போக!......இன்னும் ஒரு மாதத்தில பிள்ளையளுக்கு விடுமுறை விட்டவுடன் நீங்க புறப்படுவதுதான் நல்லது எனடு எனக்குப் புரிகிறது!...' —என்று அப்போது அங்கு வந்த பாலாவின் தந்தை கூறுகிருர்.

'என்ன இருந்தாலும் மகனில்லையா?......பாக்க வேண்டும் என்ற ஆசை இருக்காதா?.........'—என்கிருள் சாவித்திரி.

தந்தியைவைத்துச்சுருட்டி விளையாடிக் கொண்டிருந்த உமா திடீரென 'சித்தி!'—, என்று ஆச்சரியக் குரல் எழுப்புகிருள்.

'என்னம்மா, உமா!......'—என்று கேட்கிருள் சாவித்திரி.

'இந்தத் தந்தியைப் பாருங்களேன்! இது அடிச்சு பத்து நாளாகிறது! இந்தத் தபால் இலாகாவே இப்படித்தான்! பத்து நாளைக்கு முந்திய தந்தி எங்கோ மூலையில கிடந்து உறங்கிவிட்டு இப்பதான் வந்து சேர்ந்திருக்கு' —என்று தந்தியின் முத்திரையிட்ட திகதியைக் காட்டுகிருள்.

'நல்ல கூத்துத்தான்!...... பத்து நாளைக்கு முந்திய தந்தியா?...இப்ப ராஜா அலறி அடித்துக் கொண்டு போறதில் அர்த்தமேயில்லை!...ஒரேயடியா விடுமுறைக்கே வீட்டுக்குப் போறதுதான் நல்லது!...' என்கிருன் சின்னராசா. அதுதான் நல்லது போல் படுகிறது ராஜாவுக்கு.

'அப்படியே செய்யலாம்!... அதுசரி சின்னராசா! வந்த விசயத்தைச் சொல்லேல்லியே! எல்லாத்தையும் இந்தத் தந்தியெல்லே குழப்பிவிட்டுது!...'—என்று சின்னராசாவை விசாரிக்கிருன் ராஜா!

(15-ம் பக்கம் பார்க்க)



# ரிஷி லேகியம்

ரிஷி கருணைக் கிழங்கு லேகியம்

ரிஷி படம் உள்ளதாவெனப் பார்த்து வாங்கவும்

மலச்சிக்கலுக்கும், மூலவியாதிக்கும்
மூல முளைகள், இரத்த மூலம், சீழ் மூலம், வெளி மூலம், உள் மூலம், பௌந்திர கை கால் அசதி, சோம்பல், அஜீரணம், பசியின்மை, பத்தவாயு, புளியேப்பம், வயிற்றுப் பொருமல், இடுப்பு வலி, நெஞ்சுவலி, புற்றுகள், கண், கை கால், திரேக எரிச்சல், தேக மெலிவு, மூலச் சூட்டினுல் உண்டாகும் எல்லா வியாதிகளையும் உடனே கண்டிக்கும்.

விபரமடங்கிய கேட்லாக் இனும்

15 நாள் டின் ரூபா 3-00
30 நாள் டின் ரூபா 5-75

தபால் செலவு /-95

ஞானசுந்தர வைத்தியசாலை,
187, செட்டியார் தெரு, கொழும்பு-11.

# காந்தீயம் நம்மவர்க்கு ஒளிவிளக்கு

## இழந்த உரிமை பெற இது ஒன்றே மார்க்கம்

நாடு உரிமை, குடியுரிமை, வாக்குரிமை, மொழியுரிமை, மரபு வழி வாழ்விட உரிமை, அரசுரிமை என எல்லா உரிமைகளையும் இழந்து தன் நிலை கெட்டு நாம் ஒரு இனமாக வாழ முடியுமா? முடியாதா? என்ற ஏக்க உணர்ச்சியுடன் தத்தளிக்கின்ற தமிழ் பேசும் இனம் இனி எம் இனத்தைக் காக்க இறுதிப் போர் நடாத்தியே தீர வேண்டும் என்று உறுதி பூண்டு அக்டோபர் ஒன்றில் போர் முரசம் கொட்டப் போகிறது. போராட்டம் பல துறையில் விரிவடைந்து அரசாங்கத்தின் ஆணி வேரையே அறுத்தெறியப் போகிறது. போராட்டத்தின் முதற்படியாக — அடித்தளமாக—பகிஷ்கார இயக்கம் அமையப் போகிறது.

### "செய் அல்லது செத்து மடி"

அக்டோபர் ஒன்றில் இன வெறி பிடித்த சிங்கள ஏகாதிபத்தியத்தை எதிர்த்துப் போர்க்குரல் எழுப்புவதோடு "செய் அல்லது செத்து மடி" என்ற நிலைக்கு எம்மை உருவாக்கிக் கொண்டு வருகின்றோம். இந்தத் தாரக மந்திரத்தைத் தாரணிக்குத் தந்த மகாத்மாவின் பிறந்த நாளும் அக்டோபர் இரண்டில் வருகிறது.

### காந்தி காட்டும் வழி

பகிஷ்காரம், ஒத்துழையாமை (Non-Co-operation) உண்மை கடைப்பிடித்தல் (சத்தியாக்கிரகம்) சட்டமறுப்பு(Civil dis-obedience)என்று புதுப் புது வழிகளைக் கையாண்டு உலகையே வியப்பில் ஆழ்த்தி இந்தியத் துணைக் கண்டத்திற்கும், அதன் வாயிலாக உலகின் வேறு பல நாடுகளுக்கும் அடிமைத் தளையை அறுத்தெறிய, விர மிக்க விடுதலை வாழ்வைப் பெற்று மகிழ, வழிகண்டவர் மாந்தருக்குள் தெய்வம் என விளங்கும் எம் காந்தியடிகள் என்பதை, யாம் மறக்க முடியாது. அந்த முறையில் ஈழத்தில் வாழுகின்ற தமிழ் பேசும் இனமாகிய யாமும் அவர் செப்பிய செம்மொழிகளைப் பற்றியும், காட்டிய நல் வழியைப் பற்றியும் சிந்தித்துச் செயலாற்றல் சிறப்புடையதன்றோ?

### காந்தியும் தமிழரும்

காந்தியடிகள் சத்தியாக்கிரகம் (சத்தியத்தை—ஆக்கிரமித்தல்) முதலிய முறைகளை முதலில் தென் ஆபிரிக்காவிலேயே கையாண்டார். இவரின் இந் நடவடிக்கைகளுக்கு பக்க துணையாய் இருந்துப் பணியாற்றியவர்கள் அங்கு குடியேறியிருந்த தமிழர்கள் என்பது இங்கு குறிப்பிடத்தக்கது. குறிப்பாக வள்ளியம்மை என்ற இளம் தமிழ் நங்கை காட்டிய விரம், காந்தியடிகளின் வரலாற்றோடு இணைந்து அழியப் புகழ் எய்திவிட்டது. காந்தியடிகள் தமிழர்களோடு நெருங்கிப் பழகியதால் அவர்களின் மொழியிலும் அவருக்கு ஈடுபாடு ஏற்பட்டது. தமிழர்க்கு எழுதும் கடிதங்களுக்குத் தமிழில் தன் கையெழுத்தை எழுதும் அளவிற்கு, விடுதல் அறியா விருப்பு, தமிழ் மீது அவருக்கு ஏற்பட்டு விட்டது. இதனால் திருக்குறளிலும், தமிழ்ப் பழமொழிகளிலும் அவர் உள்ளம் தோயத்தொடங்கியது. எம்மவர் வழங்கும் பழமொழிகளில் ஒரு பழமொழி அவரைப் பெரிதும் கவர்ந்தது. அதுதான் "திக்கற்றவர்களுக்குத் தெய்வம் துணை" என்ற பழமொழி. இதை அவர் அடிக்கடி சொல்லி மகிழ்வதுண்டு.

### திக்கற்றவருக்கு தெய்வம் துணை

திக்கற்றுத் திசைதெரியாது தத்தளிக்கும் மக்களுக்கு முழு பக்க துணை தெய்வம என்பது அவரின் அசைக்க முடியாத நம்பிக்கை. சிந்தை நொந்து செய்வது இன்னதென அறியாது தத்தளிக்கும் தமிழ் பேசும் இனமாகிய யாமும் அவர் வழி நின்று இதயத்தில் இறைவனின் இன்னருளை ஏற்று எமது உரிமைப் போருக்கு உரிய செயல்களில் ஈடுபட வேண்டும். உள்ளம் தூய்மை உற்றால் சொல் தூய்மையுறும். செயலும் செம்மை சான்றதாய் அமையும்.

### எம் கடன் பணி செய்து கிடப்பதே

இதனால் எல்லாப் பழியையும் இறைவன் மீது ஏற்றிவிட்டு யாம் சும்மா சோம்பேறிகளாகவோ, வரட்டு வேதாந்திகளாகவோ வாழ வேண்டும் என்று காந்தியடிகள் கூறினர் என்று எவரும் கருத வேண்டாம். எம்மை இயக்கும் அந்தப் பேராற்றல் (சக்தி) மீது பற்று வைத்து யாம் எம் கடமையைச் சிறிதும் தவறாது செய்ய வேண்டும் என்பதே காந்தியடிகளின் உள்ளக் கிடக்கை ("God helps those who help themselves") 'தனக்குத் தான் உதவியாய் இருப்பவனுக்குத்தான் கடவுளும் துணை புரிவார்' என்ற ஆங்கிலப் பழமொழியையும் யாம் மறத்தல் கூடாது. 'நீ உன் கடமையைச் செய் பலனை எதிர்பாராதே'என்று பகவத் கீதை பகர்கின்ற மொழியும் 'என் கடன் பணி செய்து கிடப்பதே' என்ற அப்பர் அருள் மொழியும் எம் வாழ்விற்கு வழி காட்டிகளாய் அமைய வேண்டும்.

### விடுதலை பெற காந்தி காட்டும் அறவழி

இனி காந்தியடிகள் தன்னாட்சி அல்லது சுயாட்சி பெறுவதற்குக் காட்டும் வழி யாதென ஆராய்வோம். இதோ அவர் ஒரு நாடு சுதந்திரம் பெறுவது எப்படி என்று கூறுவதைக் கவனிப்போம். 'யான் ஒரு மானிடன் என்று உணர்பவன், மனிதன் இயற்றும் சட்டங்களுக்கோ, அரசாங்கத்தின் சட்டங்களுக்கோ அஞ்ச மாட்டான். அவன் இறைவன் ஒருவனுக்கே மட்டும் அஞ்சுவான். அரசாங்கம் இதை இதைத்தான் செய்ய வேண்டும் என்று கூறுவதில்லை. ஆனால் தான் உருவாக்கும் சட்டங்களை ஏற்காவிட்டால் தண்டனைக்குள் உங்களை ஆளாக்குவோம் என்று எச்சரிக்கிறது. எம் இடத்தில் உள்ள அடிமை உணர்ச்சியினால் அரசாங்கம் விதிக்கும் முறையற்ற—நீதியற்ற சட்டங்களைக் கூட தலைமேற் தாங்கி நடைமுறைக்குக் கொண்டு வர முயல்கிறோம். ஆனால் என்று ஒரு மனிதனோ ஒரு இனமோ இந்த அநியாய—நேர்மையற்ற சட்டங்களை ஏற்பது தன் ஆண்மைக்கு இழுக்கு என்று எண்ணுகிறதோ அன்றே எந்த அரசாங்கத்தின் கொடுங்கோல் ஆட்சியும் நடைமுறையில் வெற்றி காண முடியாது. மேற் குறித்த இந்த எதிர்ப்பு எண்ணமே ஒரு இனத்தின்— ஒரு நாட்டின் விடுதலைக்குத் திறவுகோலாய் அமையும்.'

### பெரும்பான்மை —சிறுபான்மை இனச் சிக்கல்

அடுத்து அண்ணல் காந்தி பெரும்பான்மை, சிறுபான்மைச் சிக்கல் பற்றிக் கூறும் கருத்தைப் பற்றிச் சிறிது பார்ப்போம். ஒரு நாட்டின் பெரும்பான்மை இனம் உருவாக்கிய- நீதியற்ற- நேர்மையற்ற சட்டம் அங்கு வாழும் சிறுபான்மை இனத்தையோ, இனங்களையோ கட்டுப்படுத்தும் என்று நம்புவது முழு மூட நம்பிக்கை என்றும் தெய்வீக இயல்பிற்கு மாறுபட்டது என்றும் கூறுகிறார், ஒரு கள்ளர் கூட்டம் களவெடுத்தே வாழ வேண்டும் என்று தீர்மானித்தால் ஒரு நல்லவன் அதற்கு அடி பணிய வேண்டுமா? நிச்சயமாக அத்தகைய தீய செயலிற்கு அவன் ஆளாக முடியாது. அநீதியான சட்டங்களுக்கு அடிபணிய வேண்டும் என்ற நம்பிக்கை உள்ள வரை, அடிமையாக வாழ்வதைவிட வேறு வழியில்லை. ஒரு உண்மை விரும்பி (சத்தியாக்கிரகி) மட்டும்தான் இந்த மூடநம்பிக்கையை முற்றாக நீக்க— முறித்தெறிய முடியும்.

### உடல்வலிவா உள்ள உறுதியா பெரிது?

ஒரு உண்மைப் போர் வீரன் தன் உடல் வலிவிலும் பார்க்கத் தனது உயிர்நிலை (ஆன்மீக) வலிவிற் தான் நம்பிக்கை வைப்பான். அரசாங்கத்தின் எண்ணிக்கைத் தொகையையோ அல்லது அதன்படைப் பலத்தைக் கண்டோ அவன் அஞ்சமாட்டான். துப்பாக்கியின் துணைகொண்டு மற்றவர்களைச் சுட்டு வீழ்த்துவதிலா- அல்லது தன்னைச் சுட வருகின்ற படை விரனைக் கண்டு புன்முறுவல் பூத்து அத்துப்பாக்கியின் சூட்டிற்கு இரையாகி, இறப்பினில் இன்பம் காண்பதிலா உண்மை வீரம் உண்டு? சாவை எந்த நேரமும் இறுக அணைக்கக் கூடியவன்தான் உண்மை வீரன்— சத்தியாக்கிரகி. இந்த சத்தியாக்கிரக—சட்டமறுப்பு இயக்கங்களில் ஆண்களும் பெண்களும் நிறையைக் கலந்து கொள்ளலாம். இதற்கு உள்ளத்தில் உறுதியும் தன் கொள்கையில் உண்மைப் பற்றும் இருந்தால் போதும். வேறு எவ்வித பயிற்சியும் இதற்குத் தேவையில்லை.

### அறப்போர் வீரன் மறப்போர் வீரனையும் வாழ்த்தினர்

எம்மான் காந்தியடிகள் பாரதமணித் திருநாட்டிற்கு விடுதலை பெற்றுக் கொடுப்பதில் பேராவல் கொண்டிருந்தார். அந்த விடுதலையும் தான் விரும்பிய கொல்லா அறவழியில் (அகிம்சையில்) பெறவேண்டும் என்று விழைந்தார். ஆனால் அதே நேரத்தில் ஆயுதம் தாங்கித்தான் இந்தியாவிற்கு விடுதலை பெறமுடியும் என்று சொல்லிப் பெரும் படைதிரட்டிப் போரிட்ட வங்கச் சுபாஸ் சந்திர போஸ் கையாண்ட வழிகளை காந்தியடிகள் ஏற்காவிடினும் நாட்டின் விடுதலையில் சுபாஸ் காட்டிய ஆர்வத்தை—உலகமே வியக்கும் அவர் வீரத்தை—நாட்டுப் பற்றைப் பெரிதும் போற்றினார்.

### காந்தி-செல்வா ஒருமைப்பாடு

மகாத்மா அறப்போர் அடிப்படையில் இந்திய துணைக் கண்டத்திற்கு உரிமை பெற்றுக் கொடுக்க முயன்றபோது சில இடங்களில் வன்முறை (பலாத்காரம்) தலை தூக்கியது உண்டு. வன்முறையை காந்தியடிகள் வெறுத்தாலும் வன்முறை எங்கேயோ ஒரு இடத்தில் தலைகாட்டியதிற்காக இந்தியாவின் உரிமைக்காகப் போராடுவதை அவர் நிறுத்தவில்லை. பெரும் விடுதலைப் போராட்டங்களில் இத்தகைய சிறு தவறுகள் தவிர்க்க முடியாது என்பதை உணர்ந்தார். ஈழத்தின் காந்தி— அறத்தின் வடிவம் என நாம் போற்றுகின்ற திரு. செல்வநாயகம் அவர்கள் கூட 1957ல் ஒப்சேவர் (Observer) செய்தி நாள் இதழுக்கு விட்ட அறிக்கையில் "Threat of violence shall not deter me from performing my sacred task to my community." (பலாத்காரத்தின் பயமுறுத்தலுக்கு அஞ்சி என் இனத்திற்குச் செய்ய வேண்டிய புனிதகடமையைச்செய்யத் தவறேன்) என்று குறிப்பிட்டிருந்தார்.

### செல்வா வழியில் நிற்பின் வெற்றி நமதே

காந்திய வழியில் நின்று கொல்லாமையில் (அகிம்சையில்) முழு நம்பிக்கை வைத்து, கலங்கி நிற்கும் தமிழருக்குக் கலங்கரை விளக்கமாய்த் துலங்குகின்ற தூய மூர்த்தி எங்கள் தந்தை செல்வநாயகம். அந்த அன்புத் தந்தை அக்டோபர் ஒன்றில் தொடக்க விருக்கும் அறப்போருக்கு எம்மை அணிவகுத்து நிற்குமாறு அன்புக்கட்டளையிட்டுள்ளார். எம் தந்தையின் புகழ் பாடும் ஈழத்துப் பெண் கவிஞர் ஒருவர் பின்வருமாறு எம்மை அறப்போருக்கு அழைக்கிறார்.

"மெல்ல 'மெல்லப்
பணிபுரியும்
மேதை செல்வநாயகம்
சொல்லுகின்ற பாதையிலே
செல்லுகின்ற வீரர் நாம்"

"கொல்லுகின்ற வறுமை
எம்மைக்
கொடுமை செய்து வாட்டினும்
கொள்கையுரம்
வாய்ந்தவுளம்
கொண்டறப் போராடுவோம்"

நாமும் அவரின் உள்ளக் குமுறலுக்குத் தலைசாய்த்து, உயிர் நமக்கு வெல்லம் அல்ல, இதை உலகெலாம் உணர்கவே என உணர்த்தி, உயிரினும் இனிய உரிமையைப் பெற்று, உலகில் உயர்ந்தோராக ஈழத் தமிழ் பேசும் இனம் வாழ வழி வகை செய்ய, உறுதி பூணுவோமாக. உண்மைக்கு என்றும் அழிவில்லை. நேர்மை என்றும் நிலைத்து நிற்கும். அறம் இறுதியில் வெல்வது உறுதி. அதனால் அனைவரும் புன்னகை பூத்து பூரிப்போடு அறப் போர்க்களம் நோக்கிப் புறப்பட அணிவகுத்து நில்லுங்கள்— தொண்டர் படையில் சேருங்கள் என வேண்டி நிற்கிறோம். வெற்றி நமதே.

"கத்தியின்றி இரத்தமின்றி
யுத்தமொன்று வருகுது
சத்தியத்தின் நித்தியத்தில்
நம்புமாறும் சேருவீர்"

நியாயத்தையும் தர்மத்தையும் நிலைநாட்டுவதற்கு, சத்தியாக்கிரகத்தையே காந்திஜி ஆயுதமாகக் கொண்டார். பிறரும் அவ்வாறே செய்ய வேண்டுமென்று விரும்பினார்.

இன்று இந்நாட்டு ஆட்சிபீடத்தில் அமர்ந்திருப்போர் சிறுபான்மை மக்கள் மீது, நியாயத்திற்கும் தர்மத்திற்கும் புறம்பான முறையில் சட்டங்களை இயற்றி இனவொழிப்பு நடவடிக்கையில் வெகு தீவிரமாகச் செயல்பட்டு வருகிறார்கள். ஆட்சியாளரின் இந்த வெறித்தன்மைக்கு எதிராக நாம் எடுக்கும் ஒவ்வொரு நடவடிக்கையும் அண்ணல் காந்தியடிகள் காட்டிய சத்திய யுத்தம் என்ற அடிப்படையிலேயே அமைய வேண்டும்.

ஒடுக்கப்பட்ட மக்கள் உரிமை பெற இது ஒன்றே உயர்ந்த வழி என்பதை உலகமே ஏற்றுக் கொண்டு விட்டது. அதையே தந்தை செல்வா அவர்களும் நமக்கு முன் வைத்துள்ளார்.

அந்த உயர்ந்த தத்துவத்தை உலகிற்கு ஈந்த அண்ணலின் பிறந்த தினம் ஒக்டோபர் இரண்டாம் திகதியாகும்.

**ஈழவேந்தன்**


# வியாபாரத்திற்கழகு விளம்பரம் செய்தல்

## பரீட்சை எடுப்பவர்களுக்கு விசேஷ அறிக்கை

எந்த விதமான பரீட்சையிலும் சித்தி அடைய பாடங்கள் மனதில் பதிய, போட்டிகள், நேர்முகப் பரீட்சை முதலியவற்றில் வெற்றியும் உயர்வும் அடைய, உத்தியோகங்கள் கிடைப்பதற்கும் வேண்டிய நபர்கள் உங்களை விரும்பவும் என்னால் கொடுக்கப்படும் மார்க்கத்தை கடைப்பிடியுங்கள். விபரங்களுக்கு எழுதவும்.

கவர்மெண்ட் ரிஜிஸ்டர் மந்திராச்சாரியார்.

**பி. எம். திசாநாயக்க,**

**கம்பளை.**

# 'பாலு' ஒரு கலைஞன்

இலங்கையர்கோன் யாழ்ப்பாணத்தில் தோன்றி இலக்கிய உலகுக்கு அருந்சேவை செய்தார்; மறைந்தார். எம். எஸ். பாலு மட்டக்களப்பிலே தோன்றினுர்—இலக்கியப் பணி புரிந்தார்—பிரிந்தார். இவ்விரு இலக்கிய கர்த்தாக்களின் வாழ்க்கையிலும், இலக்கிய சேவையிலும் அரிய ஒற்றுமையை அவர்களுடன் நெருங்கிப் பழகியவர்கள் நன்கு அறிவர்.

மறைந்த எம். எஸ். பாலு அவர்களையிட்டு எமக்குப் பல கட்டுரைகளும், கவிதைகளும் வந்து கொண்டேயுள்ளன. இவை அனைத்தையும் பிரசுரிப்பது முடியாது. இவற்றில் ''சாஞ'' வின் கட்டுரையையும், இரு கவிதைகளையும் இம்முறை தருகிறோம்.

ஒரு சம்பவத்திற்குப் பல காரணங்கள் இருக்கலாம். காரணங்களுக்கு ஏற்ப சம்பவங்களின் மதிப்பும் மாறுகிறது. காரணத்தைப் பிரித்துவிட்டு, சம்பவத்தை மாத்திரம் எடுத்துக் கொண்டோமானுல், அந்தச் சம்பவத்திற்கு மதிப்பு இருக்காது. ஆனுல் சம்பவத்தை மாத்திரம் வைத்துக் கொண்டு, காரணத்தை

### ''சாஞ''

மாற்றி, அரும் பெரும் கருத்துக்களை மக்களுக்கு விளக்கிக் காட்டுவதில் வல்லமை பொருந்தியவர், எனது நண்பன் எம். எஸ். பாலு. சிலர் அவரை 'பாலு மாஸ்டர்' என்பார்கள். நான் 'மாஸ்டர்' என்றுதான் அழைப்பேன். ஆனுல் அவரது பதிவுப்பெயர் எம். சிவபாலன்.



எம். எஸ். பாலு

'மாஸ்டர்' எழுதிய வானெலி நாடகங்களில், மேற்குறிப்பிட்ட எதிர்மறைவான உத்திகளைக் கையாளுவார். 'எதிர்மறை விளக்கங்களினுல் மக்களை முன்னேறச் செய்யலாம். இன்னெருவர் சொல்வதையே நானும் சொல்வதினுல், மக்கள் ஒரு வித பயனும் பெற முடியாது. ஆகையினுல்தான், நான் இந்தப் புது முறையை வானெலி நாடகங்களிற் புகுத்தியிருக்கிறேன்' என்று, 1952ம் ஆண்டில் என்னை முதன் முதலாகச் சந்தித்தபோது கூறினுர்.

1952ம் ஆண்டில் பார்க்கும்போது 'மாஸ்டர்' எப்படியிருந்தாரோ, அதே மாதிரித்தான் மட்டக்களப்பில் இவ்வருடம் நடைபெற்ற தமிழ் விழாவில் நான் சந்தித்த போதும் இருந்தார். ஒட்டிய தேகம், சிரித்த முகம். பெருந்தன்மையைக் குறிக்கும் கண்கள், வரவேற்கும் உள்ளம் எல்லாம் ஒருங்கு சேர்ந்து, ஒரே நேரத்தில் இயங்கிய மானிட உருவம்தான் 'மாஸ்டர்' எனும் கலைஞன்.

'தனது கலையை விற்காது, தனது மனச்சாட்சியை விற்காது, மற்றவர் மனதைக் காரணமின்றிப் புண்படுத்தாது தான் நினைத்தவாறு, தன் எண்ணங் கொண்டு உலகில் நடமாடுகிறவன் தான் உண்மைக் கலைஞன்' என்று கலைஞனுக்கு விளக்கம் கொடுத்தார் மாஸ்டர்.

தமிழ் உதிரத்திலே உதித்து, தமிழ் மடியில் தவழ்ந்து, தமிழ் மண்ணில் விளையாடி, தமிழ் படித்து, முத்தமிழின் இசையைத் தன் சொந்தமாக்கி வாழ்ந்த 'மாஸ்டரி'ன் தமிழ் மூச்சு காற்றேடு காற்ருகக் கலந்து விட்டது. அந்த மூச்சை இனிச் சுவைக்க முடியாத, அவரின் மனைவியும் குடும்பமும், அவரது நண்பர்களும் கொண்ட தாங்கொணுத் துயரம் சொல்ல முடியாத தொன்று. ஆனுல் அந்த மூச்சு, தமிழ் மூச்சுடன் ஒன்றறக் கலந்து விட்டது என்ற நினைவு, எம்மனதில் இருந்து ஒரு காலமும் மாருது. வாழ்க 'பாலு மாஸ்டர்'.

## வில்லுப் பாட்டு விழா

மட்டக்களப்பு மாஸ்டர் சிவலிங்கம் கலைக் குழுவினர் அண்மையில் தங்கள் 75வது வில்லுப்பாட்டை மேடைஏற்றினர். 5-10-63-ல் அரசடி பாடசாலை மண்டபத்தில் ஒரு பாராட்டு விழா நடைபெற ஏற்பாடாகியுள்ளது. விழாவிற்குத் திரு. செ. இராசதுரை எம். பி. தலைமை தாங்குவார்.

விழாவிற்கு மட்டக்களப்புத் தமிழ் எழுத்தாளர் சங்கச் செயலாளர் 'அன்புமணி', மட்டக்களப்பு சிறுவர் கலைக் கழகத் தலைவி செல்வி வனஜா பரம் ஆகியோர் வில்லுப்பாட்டுக் குழுவினருக்குப் பாராட்டுரை வழங்குவர்.

விழாவை அடுத்து ஒரு தேநீர் விருந்து அளிப்பதற்கு வில்லுப்பாட்டுக் கலைக் குழுவினர் ஏற்பாடு செய்துள்ளனர்.

### மியூட்டினி ஒன் தி பவுண்டி

எம். ஜி. எம். நிறுவனத்தினரின் 'மியூட்டினி ஒன் தி பவுண்டி' என்ற பல வர்ண ஆங்கிலப் படம் கொழும்பு மெஜஸ்டிக் திரைக்கு வருகிறது. மார்லின் பிராண்டோ இப்படத்தில் தோன்றுகிருர்.

## அறிமுகப்படுத்துகிறேம்

இலங்கையில் நாடகக் கலை நன்கு வளர்ந்து வருகிறது. தமிழ் சினிமாக்களும் இந்நாட்டில் வளர்ச்சியடைய வழிவகைகளும் தென்படுகின்றன. நடிப்புக் கலைஞர்களை சுதந்திரனில் அறிமுகப்படுத்த புதிய திட்டம் ஒன்றினை ஆரம்பிக்க எண்ணியுள்ளோம்.

விபரங்களை அடுத்த வார இதழில் எதிர்பாருங்கள்.

## ''நெஞ்சில் நீ''

கண்டி வள்ளுவர் கழகத்தினுல் வெளியிடப்படும் வசந்தி புரடக்ஷன்ஸாரின் தயாரிப்பான ''நெஞ்சில் நீ'' நாடகத்தில் திருவாளர்கள் எம். ஜே. ஆப்தின், சிதம்பரம், சேகர், சரோஜா ஆகியோர் நடிக்கின்றனர். கதை, வசனம், டைரக்ஷன் பொறுப்பை வெண் சங்குவேள் ஏற்று திறம்பட செய்திருக்கிருர். இந் நாடகத்தை திறம்பட அரங்கேற்ற வேண்டி மன்றத்தார் பெரும் பாடுபட்டுழைக்கின்றனர் என்று தெரிகிறது.

## நள-தமயந்தியும் அரிச்சந்திரனும்

அண்மையில் மட்டக்களப்பு வின்சன்ட் கல்லூரிப் பரிசளிப்பு விழாவையொட்டி நடைபெற்ற கலைவிழாவில் 'நள-தமயந்தி' நாட்டிய நாடகம், 'அரிச்சந்திரன்' குட்டி நாடகம் ஆகிய இரண்டும் இடம் பெறறு, சபையோரின் ஏகோபித்த பாராட்டைப் பெற்றன.

மிகவும் கவர்ச்சிகரமாக அமைந்திருந்த 'நள-தமயந்தி' நாட்டிய நாடகத்தில் பங்கு பற்றிய அத்தனை மாணவிகளும் கச்சிதமாக நடனமாடினர். குறிப்பாக நளனுகத் தோன்றிய செல்வி ராஜினி ஜோசப், தமயந்தியாக வந்த செல்வி தேவமலர் சவுந்திரராஜன், வீமராஜனுகத் தோன்றிய செல்வி வனஜா பரம் ஆகியோரின் லளிதமான அபிநயத்திறமை பாராட்டிற்குரியது. அன்னங்களாகத் தோன்றிய மாணவிகள் அனைவரும் அருமையாய் ஆடினர்.

திருமதி இராமச்சந்திராவின் கருத்துமிக்க பாடல்களுக்கு திருமதி கனகசபை இசை அமைத்து இனிமையாகப் பாடினுர். அற்புதமான இந்த நாட்டிய நாடகத்தைத் தயாரித்த திருமதி செல்வி நாகராஜாவை எவ்வளவு பாராட்டினுலும் தகும்.

'அரிச்சந்திரன்' குட்டி நாடகம் உணர்ச்சியும், விறுவிறுப்பும் நிறைந்திருந்தது. சந்திரமதியாகத் தோன்றிய செல்வி கலாவதி சிவலிங்கம் அப்பாத்திரமாகவே மாறி மிக இயற்கையாக நடித்தார். அரிச்சந்திரனுக நடித்த செல்வி ஜெகதீஸ், விஸ்வாமித்திரராக நடித்த செல்வி ஆனந்தி பேரம்பலம் வசிட்டராகத் தோன்றிய செல்வி சிவமலர் ஞானசேகரம் ஆகியோர் தத்ரூபமாக நடித்தனர். இந்திரனுகத் தோன்றிய செல்வி வசந்தி அசல் இந்திரனுகவே காட்சியளித்தார்.

நாடகத்தின் வெற்றிக்கு திருமதி ஆர். சிவபாத சுந்தரத்தின் தரமான வசனமும் ஒரு காரணமாகும். அரிச்சந்திரனை வெற்றி நாடகமாகத் தயாரித்தளித்த செல்வி செல்வராணி செல்லையா, திருமதி இராசையா ஆகிய இருவரும் பாராட்டிற்குரியவர்கள்.

—மாஸ்டர்.



கொழும்பில் அதி முக்கியமானவர்களை நீங்கள் சந்தித்திருப்பீர்கள். அவர்களுக்குள்ளே தான் எத்தனை பிணக்குகள், எத்தனை காப்புகள். பணம் மட்டும் இருந்துவிட்டால் போதுமா? பாவையரின் உள்ளத்தைப் புரிந்துகொள்ளும் கலையும் தெரிந்திருக்க வேண்டும். அதைத் தெரியாததனுல்தான் ரிச்சார்ட் பேட்டனுக்குத் துப்பாக்கி தூக்க வேண்டியேற்பட்டது. மெஜிஸ்டிக் திரையில் நடைபெறும் 'வி ஐ. பீஸ்' (The V. I. Ps.) படத்தில் ஒரு கட்டம்.

நாடக விமர்சனம்

## திருப்பாலையார் அளித்த சிங்க முழக்கம்

இலட்சியப் பாதையை இன்பபுரிப் பாதையாக்கிக்கொண்டு வீரநடை போடும் மூன்று இளைஞர்கள், ஆட்சியாளரின் சூழ்ச்சி வலைக்குள் வீழ்ந்து தங்கள் உயிரைத் தூக்குமேடையில் போக்கும் துன்பக் கதையைச் சித்தரிக்கும் ''சிங்க முழக்கம்'' என்ற நாடகத்தைப் பார்க்கக் கிடைத்தது.

பேசும்மொழி, பழக்க வழக்கங்கள், பண்பாடு, கலை, கலாச்சாரம் ஆகியவற்ருல் பிணைக்கப்பட்ட ஒரே இன மக்கள் அருகருகே இரண்டு நாடுகளில் உள்ளனர். தத்தமது நாடுகளுக்கேற்ற அரசியல் அமைப்புகளை ஏற்படுத்திக்கொண்டிருப்பினும் இருசாரருடைய இலட்சியமும் ஒன்றே என்பதை அறிந்த கதாசிரியர் வெற்றி வேந்தன் நுணுக்கமாககொள்கை இணைப்பை ஏற்படுத்தியிருக்கிருர். நாட்டுச் சூழலுக்கேற்ப கதையையும் பாத்திரங்களையும்திறம்பட அமைத்தமை பாராட்டுதற்குரியதே. இன்றுள்ள அரசியற் சூழ்நிலையில், ஆட்சியாளரின் போக்கு அத்தனையும் பாதகமாக இருந்தும்கூட, கொழும்பு மாநகரின் கண்ணே தமிழுணர்வையும், இன எழுச்சியையும் தூண்டிவிடக்கூடிய 'சிங்கமுழக்க'த்தை மேடை ஏற்றியமையால் தமிழ் பேசும் மக்கள் திருப்பாலை நாடக மன்றத்தாருக்குக் கடமைப் பட்டவாகனே.

நாடகத்தை உருவாக்கியவர்களும் பெரும் பங்கு கொண்டு நடித்தவர்களும் இஸ்லாமிய இளைஞர்களே என்பதை அறிந்ததும், எமது உணர்ச்சிகள் பன்மடங்காயின. மதத்தால் வேறுபடினும் இனத்தால், பேசும் மொழியால் நாம் அனைவரும் ஒன்றே என்பதை அவர்கள் நாடக மூலம் வெளிக்காட்டி விட்டார்கள்.

நடிக, நடிகைகள் அனைவரும் தங்கள் தங்கள் பாகங்களைச் செவ்வனே செய்தனர். இயக்கத்தில் விறுவிறுப்பு இல்லாமற் போய்விட்டது. திருப்பாலையாரின் முதல் நாடகம் இது என்பதால், மென்மேலும தயாரிப்பில் ஈடுபட்டால, சிறப்பிக்க வாய்ப்புண்டு. ஒலி அமைப்பைச் சகிக்கவே முடியவில்லை. பாடல்கள் எதுவும் முன் வரிசையில் இருந்தவர்களுக்கே புரியவில்லை.

இலங்கையெங்கணும் இந் நாடகத்தை மேடையேற்றிஞல் இன எழுச்சியைத் தூண்ட வேறு எதுவித பிரச்சாரமும் தேவையில்லை என்றே கூற விரும்புகிறேம். தரமான கதையை வைத்து நல்ல கலை அம்சங்களைக் கொண்டு மென்மேலும் பல நாடகங்களைத் தயாரிக்க திருப்பாலை நாடக மன்றத்தார் முயலுவார்களாக.

—நாதன்

## 'லேஞ'வின் புதிய படம்

'ராஜா தேசிங்கு' படத்தைத் தயாரித்தவரான 'லேஞ' செட்டியார் சில காலம் நோய்வாய்ப்பட்டிருந்தார். சினிமா உலகை விட்டு விலகிவிடக் கூடும் என்று சினிமா உலகம் கருதியிருந்தது. மீண்டும் 'லேஞ' திரையுலகில் காலடி எடுத்து வைத்திருக்கிருர்.

திரைப்பட உலகில் பெரிய புள்ளி என்று வர்ணிக்கப்பட்டவரும் கிருஷ்ணு பிக்சர்ஸ் உரிமையாளருமான லேஞ செட்டியார் 'மதுரை வீரன்' போன்ற பேர் பெற்ற படங்களைத் தயாரித்தவர். பல பிரபல நடிக நடிகைகளையும் உருவாக்கியவர்.

ஒப்பனையாளர் 'ஹரிபாபுவின் மகனுன நிந்து என்பவரால் கதை வசனம் எழுதப்பட்ட புதுமுறைப் படத்தைத் தயாரிக்கத் திட்டமிட்டுள்ளார் லேஞ. எம். ஜி. ஆர், சரோஜா தேவி ஆகியோர் இப்படத்தில் தோன்றுவர்.

இப்படத்துக்கான பூர்வாங்க எழுத்து வேலைகள் யாவும் முடிவடைந்து விட்டன. விரைவில் ஸ்டுடியோவிற்குள் நுழையும் என்று தெரிகிறது.



'என்னை உலகப் பேரழகி என்று தான் எல்லோரும் கூறுகிருர்கள். ஆனுல் என்னுள்ளத்தைப் புரிந்து கொண்டு நடப்பவராக என கணவர் அமையவில்லையே என்பதுதான் எனது கவலை. பணம் வேண்டிய மட்டும் இருக்கிறது. ஆனுலெனக்கு வேண்டிய உள நிறைவைத் தான் எங்கும் காண முடியவில்லையே' என்று அழகி எலிசபத் டெயிலர் கூறுகிருர் போலும். 'வி. ஐ. பீஸ்' (The V. I. Ps.) படத்தில் ஒரு கட்டம்.

## இரண்டு நாடகங்கள்

சாவகச்சேரி டிறிபேர்க் மண்டபத்தில், பல கலா இரசிகர்களினது வேண்டுகோளுக்கிணங்க, இலங்கை வானெலி பிரபல எழுத்தாளர் சி. சண்முகம் எழுதிய 'வாடகை வீடு' என்ற நகைச்சுவை நாடகமும், பிரபல வானெலி எழுத்தாளர் 'அன்புமணி' எழுதிய ''ஆத்ம திருப்தி'' என்ற நாடகமும் 5—10—63 சனிக்கிழமை மாலை நடைபெறவிருக்கின்றன.

இந்த நாடகங்களில் இலங்கை வானெலி நடிக நடிகையர் பங்கு பற்றுவர். ''வரணியூரான்'' அவர்களின் டைரக்ஷனில் உருவாகிய இந் நாடகங்கள் 25-8-63ல் இதே மண்டபத்தில் அரங்கேற்றப்பட்டு அமோக பாராட்டைப் பெற்றது என குறிப்பிடத்தக்கது.

மாணவ ஆசிரியர் பரீட்சையில்

# தமிழ் மாணவர்களுக்கு நிபந்தனை ஏன்?

## கல்வி மந்திரிக்கு தமிழரசுத் தந்தை கடிதம்

“மாணவ ஆசிரியர்களுக்கான தேர்வுப் பரீட்சையில் தோற்றுவ தற்கென தமிழ் கனிஷ்ட பொதுத் தராதரப் பத்திரம் பெற்றவர்களை விண்ணப்பிக்குமாறு கோரியுள்ள அறிவித்தல் ஒன்றில், இவர்கள் கனிஷ்ட பொதுத் தராதரப் பரீட்சையில் ஆங்கிலமும் ஒரு பாடமாகத் தேறியிருக்க வேண்டுமென்ற நிபந்தனையும் காணப்படுகிறது. இந்த நிபந்தனையை நீக்க நீங்கள் ஆவன செய்தால், நன்றியுள்ளவனுவேன்.”

இவ்வாறு தமிழரசுத் தந்தை, கல்வி மந்திரி திரு. கலுகல்லேக்கு எழுதியுள்ள கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார். அவர் அக்கடிதத்தில் மேலும் கூறுவதாவது:

‘இவ்வித நிபந்தனை எதுவும், சிங்கள அல்லது முஸ்லிம் விண்ணப்பதாரருக்கு விதிக்கப்படவில்லையென நான் அறிகிறேன்.

ஆங்கிலத்தில் தேர்ச்சி பெற்றிருக்க வேண்டுமென்பது, தமிழ் விண்ணப்பதாரருக்கு எவ்வகையில் அவசியமாகின்றது என்பது எனக்கு விளங்கவில்லை. இந்த நிபந்தனையை நீங்கள் நீக்கினால், நான் உங்களுக்கு நன்றியுடையவனுவேன்.

விண்ணப்பங்களுக்கான முடிவுத் திகதி இம்மாதம் 30ம் திகதியானபடியினால், தயவு செய்து முடிவுத் திகதியை இன்னும் இரண்டு வாரங்களுக்கு, ஒத்தி வைத்தீர்களானால் நல்லது.’

## உழைப்பால்...

(5-ம் பக்கத் தொடர்ச்சி)

வெளி நாட்டுச் செலாவணியின் பெரும் பகுதியைச் சம்பாதித்துக் கொடுக்கும் தோட்டத் தொழிலாளரின் வாழ்க்கைச் செலவும் ஏனைய பகுதியினரை விட மிக மட்டரகமாக மோசமடைந்துள்ளது- இவர்களின் வருமானமோ அதிலும் மோசமடைந்துள்ளது. இவர்கள் நாளுக்கு நாள் அனுபவித்து வரும் நரக வேதனைக்கு ஒரு முடிவு காண, நீதி காண, நேர்மையான, நியாயமான வழியில் போராட்டம் அமைய வேண்டும்!

பச்சிளம் பாலகர்களை, குமுறும் வேதனையோடும் வீட்டிலே விட்டு வேலைத்தலம் சென்று தளிர் கொய்து, அயராது உழைத்து வரும் தோட்டப் பெண்களின் வாழ்க்கை, உயர வேண்டிப் போராட வேண்டும்.

உற்பத்தி பெருக்கி, பொருளாதாரம் சிறடைய உழைக்கும் மலையகத்தார் பிள்ளைகள் கல்வி வசதி பெற்று வாழ வகை ஏற்பட போராட்டம் நிகழ வேண்டும்.

நாட்டாரோடு உறவு கொண்டு தம் நா பேசும் கன்னித் தமிழ் மொழி அரியாசனத்தில் சரியாசனமாக இருக்க ‘போராட்டம்’ நடக்க வேண்டும்.

பெரும் பான்மை மக்கள் அனுபவிக்கும் பெரு வாழ்வு எல்லாச் சிறுபான்மைத் தமிழருக்கும் கிடைக்கும் நிதியில் ‘போராட்டம்’ உருவாகி செயல்பட வேண்டும்!

### தொண்டாற்ற முன் வாருங்கள்

முழு மனிதராக வாழ எல்லா உரிமையும் பெற்று எல்லா வகையிலும், வழியிலும் சிறந்து வாழ உரிமைப் ‘போராட்டம்’ அமைய வேண்டும்!

உழைப்பிற் கேற்ற ஊதியம் கிடைக்க உரிமைப் போர் தொடர்ந்து நடத்தி உயர்வு காண வேண்டும்!

பாட்டாளித் தோழர்களே! பாகுபாடு காட்டி துவேசம் பேசி தூண்டிவிடும் தூர்த்தர்களை நம்பி தயரடையாமல் தூய உள்ளத்தோடு புனிதமான கொள்கைகளை ஏற்றுத் தொண்டாற்ற முன் வாருங்கள்!

## சங்கப் பலகை

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

தமிழர் வயக்தோன் வேந்தன்’ என அவனைத் தமிழ் மொழியால் அழைக்கின்றார் அவர். இசையில் வல்லவனுகிய இலங்கை வேந்தன் தன் குலப் பெருமையும் மூவுலகையும் கட்டி ஆண்ட வீரமும் சிதைவுறக் காரணமாக இருந்த அவன் ‘காதலி’ன் சாபக் கேட்டையும் அறிஞர் அருமையாக விளக்குகின்றார்.

‘நீலவான் திரை விலக்கி’ என்று ஆரம்பித்து-‘எழும்பு என்று பிடித்துலுப்பி விட்டவள் என் பிரிய அன்னை’ என அவர் தமது பாடல்களை முடிக்கும்போது கவிஞரின் கற்பனைத் திறன், உண்மையான பாவலருக்கு இருக்கும் ஓர் வித சிறப்புத் தன்மை, நமது கண் முன் காட்சி அளிக்கின்றது. ‘திமிலைத் துமிலன் கவி அனைத்தும் இனித் தினித்துப் பாடி’ என்று பண்டிதமணி கணபதிப்பிள்ளை கூறியது போன்று கவிஞர் திமிலைத் துமிலனின் ஐம்பத் தொரு பாக்களும் படிக்கப் படிக்க இனிமையும் சுவையையும் ஊட்டுகின்றன என்பதில் ஐயமில்லை. ஈழத்திலும் சிறந்த பாவலர்கள் இருக்கின்றார்கள் என்பதற்கு “நீரர மகளிர்” ஒரு சான்று.

—சோதி.

### தமிழர் அடிமைகளா?

‘தமிழ் பேசும் மக்களை அடிமைகளாக்க வேண்டுமென்பதே அரசாங்கத்தின் நோககமாகும். தமிழ் பேசும் மக்கள் அரசாங்கத்தின் சூழ்ச்சிகளை எதிர்க்காவிடில், அடிமைகளாகவே விடவும் கூடும்.’

இவ்வாறு கோப்பாய் பா. உ. திரு. எம். பாலசுந்தரம், சாவகச்சேரியில் வன்னியசிங்கம் நினைவு நாட் கூட்டத்தில் பங்குபற்றிப் பேசும் பொழுது, குறிப்பிட்டார்.

## தையிட்டியிலிருந்து சிங்களக் கடிதம்?

காங்கேசன்துறை தையிட்டியிலுள்ள கன்னியவிலிருக்கும் கலாவல்லி கிராம முன்னேற்றச் சங்கத்தைச் சேர்ந்த எ. டி. குமாரலிங்கம் என்பவரும் எஸ். கே. துரைராஜா என்பவரும் சிங்களத்தில் கையொப்பமிட்டு சிங்களத்திலேயே அச்சிடப்பட்ட கடிதம் ஒன்றினை 30—8—63ல் காணி, விவசாய அமைச்சருக்கு அனுப்பியுள்ளனர். இக்கடிதம் அம்மானிடம் சிக்கியிருக்கிறது என்பதை அறிய மேற்படி கையொப்பக்காரர்களுக்கு ஆச்சரியத்தைக் கொடுக்கலாம்.

சிங்களத்தில் அரசாங்க ஊழியர்களைப் பகிஷ்கரிக்கும் இயக்கத்துக்கான ஆயத்தங்கள் நடைபெறும் இத்தருணத்தில் இத்தகைய அடிமை மோகம் கொண்ட மகான்களின் தகிடுதத்தங்களையும் அம்பலமாக்க வேண்டித்தானுள்ளது. அடுத்த வாரம் அவர்களுடைய கையொப்பத்துடன் கூடிய கடிதம் பிரசுரமாகும்.

—அம்மான்.

## அடுத்த...

(5-ம் பக்கத் தொடர்ச்சி)

மூத்து நடராசன் — ஈழத்தில் திருமலை நடராசன்; இவர்களும் நம்மவர்கள்.

இவ்வாறு வீரப் பரணி பாடும் காளையரே! கன்னியரே!

மொழியை இழந்தவன் உயிரை இழந்தவன், இதை அறியீரா?

உங்கள் பங்கினையும் பணியினையும் நிறைவேற்ற இது நல்ல சந்தர்ப்பம்.

மங்கையொருத்தி தரும் சுகம் எம்மாத் தமிழுக்கு ஈடாமோ? அதைச் சந்தியில் நிறுத்தி அவமானமளிக்கும் மதியினருக்குப் பாடம் புகட்டுவோம் வாரீர்!

மீண்டும் தமிழ் அன்னை அரியாசனத்தில் சரியாசனம் பெற்று வீற்றிருக்க உறுதி பூணுவீர்.

மாங்குயில் கூவிடும் பூஞ்சோலை நம்மை மாட்டடுநினைக்கும் சிறைச்சாலையாக மாறலாம். அது கண்டு ஆச்சரியப்படத் தேவையில்லை.

உலகாண்ட இனம் உரிமையின்றி வாழும் இழிநிலை ஒழிப்போம். இது நிச்சயம்.

## இ. தொ. க. வில்...

(5-ம் பக்கத் தொடர்ச்சி)

ணியை அமைப்பதற்கு, தங்களின் காலத்தை விரயம் செய்கின்றார்கள்.

“சுதந்திர போராட்டங்களென்றால் தொண்டர்களிலிருந்து தலைவர்கள் வரை எல்லோருமே இன்னல் ஏற்பது சகஜம். இவைகளை நாம் பொறுத்துக் கொள்வோமேயானால், பல தியாகிகளை உருவாக்குமேயானால், சில உயிர்களை அர்ப்பணிப்போமேயானால்—நிச்சயம் சுதந்திர ஈழத் தமிழகம் அமைத்து விடலாம்” என்று அவர் மேலும் குறிப்பிட்டார்.

திரு. எஸ். எம். சுப்பையா, திரு. பி. எம். முருகையா, திரு. எஸ். நடராஜா, திரு. தம்பிரான் ஆகியோரும் பேசினர். தலைவர் திரு. நாகமுத்து நன்றி கூறினர்.

# கோணேஸ்வரர் தலத்தருகில் விகாரை நிறுவ முயற்சி

## வாலிப முன்னணியின் பலத்த எதிர்ப்பு

திருக்கோணமலை கோணேசர் கோவிலுக்கருகாமையில் பௌத்த விகாரை ஒன்று நிறுவப்படும் செயல் ஜருராக நடைபெற்றுக் கொண்டிருப்பதாகவும், இன்த முன்னின்று நடத்துவோர் கோணேசர் கோட்டையில் முகாமிட்டுள்ள இராணுவத்தினரெனவும் தெரியவருகிறது.

பழம் பெருமை வாய்ந்த இந்துத் தலமாக விளங்கி வரும் கோணேசர் ஆலயத்தின் மகிமைக்கு இழுக்குத் தேடித் தரும் வகையில், அதன் அருகாமையில் எழுப்பப்படவிருக்கும் பௌத்த விகாரைக்கு ஊரில் பலத்த எதிர்ப்பு ஏற்பட்டு வருகிறது.

விகாரை அமைக்கும் செயலைக் கண்டித்துத் ‘திருக்கோணமலைப் பொதுநலத் தமிழ் பேசும் வாலிப முன்னணி’ அரசாங்க அதிபருக்குப் பின் வரும் அஞ்சலை அனுப்பி வைத்துள்ளது:

“16-9-63ல் கூடிய எங்கள் பொது நலத் தமிழ் பேசும் வாலிப முன்னணியின் காரியக் குழுத் தீர்மானத்திற்கிணங்க இவ்வஞ்சலை வரைந்து தங்கள் சமுகத்திற்குச் சமர்ப்பிக்கின்றோம்.

சமீப காலமாய்த் திருக்கோணமலையில் தமிழர் தம் சரித்திரத்தை வானளாவப் பாடிக் கொண்டிருந்த கோணேசர் கோட்டையினுள் இனத் துவேசத்தை வளர்க்கும் அசம்பாவிதங்கள் பல நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. குறிப்பாக பௌத்த சமயத்தவர்களின் வேண்டாத விபரீதங்களை வளர்க்கும் விகாரை நிறுவும் செயல் இந்நாட்டிலே உரிமையற்று வாழும் மக்களின் உள்ளத்தில் வேலால் தாக்குவதுபோலிருக்கின்றது. வகுப்புத் துவேசம் மறைந்து வரும் இவ்வேளையில் அணைந்த தீயில் வெண்ணெய்யை வார்க்கும் விகாரை கட்டும் செயல் உடனடியாக நிறுத்தப்படல் வேண்டும் எனப் பணிவுடன் வேண்டுகின்றோம்.

சட்டத்தையும் ஒழுங்கையும் நிலைநாட்டி, சமாதானத்திற்கு வர இருக்கும் நட்டத்தையும், அழுச்சையும் ஒழிக்க வேண்டிய நீங்கள், குழப்பத்திற்கு ஏதுவாயிருக்கும், கட்டடத்தையும், அவர்கள் தம் திட்டத்தையும் உடனடியாக மட்டந்தட்டி, எங்களது பரம்பரைச் சொத்தைக் காப்பாற்றும்படி பரிவுடன் வேண்டுகின்றோம்.

தமிழர்களின் சரித்திரம் பாடும் கோணேசர் கோட்டை, அன்னியர் ஆட்சிக் காலத்தில் சிதைந்திருந்த போதும், சுயாட்சி பெற்ற பின்வரும் சிரழிவதாயிருந்தால், ஊராளும் வர்க்கம் எம்மை நிராதரவாய் விட்டிருக்கின்றதென்பதே பொருள். இத்தருணத்தில் தாங்கள் தங்கள் அதிகாரத்தைப் பிரயோகித்து, விகாரை கட்டும் செயலால் நொந்து வாடும் செந்தமிழர்களின் வெந்த உள்ளத்திற்கு ஆறுதல் அளிக்குமாறு தயவுடன் வேண்டுகின்றோம்.

ஆட்சி மன்றத்தாரின் அபிலாசைக்கிணங்க அவர்கள் சமீபத்தில் இட்ட ஆணையின் படி, அதாவது பௌத்த விகாரையின் மணியோசை கேட்கும் எல்லைவரை, அவ்விகாரையைச் சுற்றிவர சிங்கள பௌத்தர்களே வசித்தல் வேண்டும் எனும் தார்ப்பரியத்திற்கிணங்க எங்கள் பரம்பரைப் பூமி சூறையாடப்படுவதற்குச் செய்யப்படும் சூழ்ச்சியோ என ஒவ்வொரு தமிழ் மகனும் ஏக்கங்கொண்டு அங்கலாய்க்கும் இவ்வேளையில், எமக்கு வந்துற்ற பங்கத்தை நீக்கி எமதுள்ளத்திற்குத் தெம்பூட்டுமாறு தாழ்மையுடன் வேண்டுகின்றோம்.

இறுதியாக, இந்நாட்டில் வாழும் ஈரினங்களுக்கு மத்தியில் ஒற்றுமை வேண்டி நிற்கும் எங்கள் முன்னணி, சமாதானத்திற்குப் பங்கம் விளைவிக்கும் சிங்களச் சகோதரர்களின் பௌத்த விகாரை நிறுவும் செயல் உடனடியாக நிறுத்தப்படல் வேண்டுமெனவும், அதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு பணிவுடன் வேண்டி, தமிழர்களின் சொத்து சிதைக்கப்படும் தரங்குறைந்த இச்செயலைக் கண்டிப்பதுடன், இதற்காக உங்கள் கடமையைச் செய்து எங்கள் கண்ணீரைத் துடைக்குமாறும் வேண்டுகின்றோம்.”


## சுதந்திரன் இல்லையே சுபீட்சமில்லை

ஆங்கிலம், தமிழ் ஆகிய இரு மொழிகளிலும் அச்சு வேலைகள் எவையாக இருந்தாலும் சரி— அவை கவர்ச்சிகரமாகவும் உங்களுக்குத் திருப்தி அளிக்கும் முறையிலும் செய்து தரப்படும்.

பாடப் புத்தகங்கள், மலர் வெளியீடுகள், சஞ்சிகைகள், துண்டுப் பிரசுரங்கள், அழைப்பிதழ்கள், வர்த்தக ஸ்தாபனங்களுக்குரிய சகல வேலைகள் யாவும் கச்சிதமாகத் தயாரிக்கப்பட வேண்டும் என்று விரும்புபவர்களுக்கு இதே அதற்கு உரிய இடம்:

**சுதந்திரன் அச்சகம்,**

தபால் பெட்டி 183.

194 ஏ, பண்டாரநாயக்க வீதி,

கொழும்பு-12.

தந்தி : சுதந்திரன் போன் : 3411




# காந்தி வழியில் செல்வோம் நாம்

— எம். எம். எம். [மபூர், பதுளை. —

பாரதம் கண்ட பல அறிஞர்களுள்ளும், தத்துவ ஞானிகளுள்ளும் சிறந்தவராகக் கணிக்கப்படுபவர் மகாத்மா காந்தியாவார். இவர் வட பாரதத்தின் கண் பம்பாய் என்னும் பட்டினத்தில் 2-10-1869ல் அவதரித்தார். இவருடைய குடும்பத்தார் பெரிய பணக்காரர்களாவர். அதனால் அவர் இருபது வயதடையும் வரை மக்களின் கஷ்டங்களைக் கண்ணெடுத்தும் பாராமந் தான் முன்னுக்கு வந்தார். அவர் தமது பத்தொன்பதாம் வயதில் இங்கிலாந்துக்குச் சட்டக் கல்வி பயிலச் சென்று பாரிஸ்டரானார்.

இவர் ஒரு வழக்கு விடயமாக ஆபிரிக்காவிற்குச் சென்றார். அங்கு சென்ற அவர் அப்பகுதி மக்களின் அடிமை வாழ்வையும், பிரபுக்களின் கொடுங்கோன்மையையும் கண்டு மனம் மிக வருந்தினார். அவரது மனச்சாட்சி அவருக்குப் புத்தி புகட்டியது. அவர் இந்திய மக்களின் கஷ்டங்களையும், அவர்கள் வாழ்க்கை நடத்தும் முறையையும் ஆபிரிக்காவில் வைத்து உணர்ந்தார்.

## அறவழி போராட்டம்

கொஞ்ச நாட்களுக்குப் பிறகு அவர் பாரிஸ்டர் உத்தியோகத்தை உதறித் தள்ளிவிட்டு இந்திய மக்களின் கஷ்டங்களைத் தீர்க்க இந்தியாவிற்கு வந்தார். பிறகு சாத்வீக முறையிலும், அகிம்சை வழியிலும், அவர் வெள்ளையர்களை எதிர்த்துப் போராடினார்; அவர் வாளேந்திப் போராடவில்லை. துப்பாக்கியால் வெள்ளையர்களைச் சுட்டுப் பொசுக்கவும் இல்லை. ஆனால் அவர் தனது தற்பாதுகாப்பிற்காக மூன்று ஆயுதங்களை உபயோகித்தார். அவைகள் அன்பு, அறம், அகிம்சை ஆகியவையாகும். இவைகளுக்கு வெள்ளையர்களுடைய துப்பாக்கியும், பீரங்கிகளும், நிகராகவில்லை. இன்னும் இவைகளின் சக்திக்கு நிகரான ஓராயுதமாயினும் கண்டு பிடிக்கப்படவுமில்லை; கண்டு பிடிக்கப்படப்போவதும் இல்லை.

## தனிக் கவர்ச்சி

காந்தியடிகளிடம் ஒரு தனிக் கவர்ச்சி இருந்தது. மக்கள் அவரைக் கண்டதும் அவர் பால் தங்களினுடைய மனதை அடைக்கலம் புகுத்தினர். இவர் மக்களை அறப்போர் செய்யுமாறு தூண்டினார். மக்களைச் சத்தியாக்கிரகங்களில் ஈடுபடச் செய்து, தானும் ஈடுபட்டார். இவர் தனது நோக்கங்களை, மக்களுக்கு அறிவிக்க 'சத்திய சோதனை' என்ற புத்தகமான பொக்கிஷத்தை அளித்தார். உலகில் யாவரும் சமமானவர், ஒன்றே குலம் ஒருவனே தெய்வம், சத்தியத்தின் உறுதிப்பாடு, அகிம்சையின் ஆற்றல் இவை பற்றி அவர் அப் புத்தகத்தில் குறிப்பிட்டுள்ளார்.

இவர் பற்பல தியாகங்களைப் புரிந்தார். சத்தியாக்கிரகங்களில் ஈடுபட்டுக் கஷ்டப்பட்டார். சுயநலமின்றி இந்திய மக்களின் சுதந்திரத்திற்கு அடிகோல உதவினார். இப்படியான ஒரு மகானை உலகம் ஈன்றெடுக்குமா? என நான் ஐயமுறுகிறேன். இவரின் தியாகங்களையும், இவர் தமது நாட்டு மக்கள் மேற் கொண்டிருந்த பற்றையும் கண்ட ஆங்கிலேயரே, அவரின் மேன்மையை உணர்ந்து பணிந்தனர்.

## அவர் வழி செல்வோம்

இவர் காட்டிச் சென்ற வழி காந்தி வழியாகும். இவருடைய பாதையில் செல்ல எல்லோருக்கும் முடியாதெனப் பல பெரிய அறிஞர்கள் கூறுகிறார்கள். எனினும் இவருடைய வாழ்க்கை முறையை நாமறிந்து, ஒரு சில பண்புகளையாவது பின்பற்றுவோமாக!

# வாழ்க நீ, எம்மான்!

—சுப்பிரமணிய பாரதியார்—

வாழ்க நீ! எம்மான், இந்த
    வையத்து நாட்டி லெல்லாம்
தாழ்வுற்று வறுமை மிஞ்சி
    விடுதலை தவறிக் கெட்டுப்
பாழ்பட்டு நின்ற தாமோர்
    பாரத தேசந் தன்னை
வாழ்விக்க வந்த காந்தி
    மகாத்மா! நீ வாழ்க! வாழ்க!

அடிமைவாழ் வகன்றிந் நாட்டார்
    விடுதலை யார்ந்து, செல்வம்,
குடிமையி லுயர்வு, கல்வி,
    ஞானமும் கூடி யோங்கிப்
படி மிசைத் தலைமை யெய்தும்
    படிக்கொரு சூழ்ச்சி செய்தாய்!
முடிவிலாக் கீர்த்தி பெற்றாய்!
    புவிக்குளே முதன்மை யுற்றாய்!

# பேச்சுப் போட்டி இடை இறுதித் தேர்வு விபரங்கள்

போட்டியில் பங்கு கொள்பவர்களது கவனத்திற்கு:

(1) குறித்த தினத்தில் குறித்த இடத்தில் காலை ஒன்பது மணி [பதுளை, அட்டன் மாவட்டங்களில் பத்து மணி] தொடக்கம் மாலை ஐந்து மணி [பதுளை, அட்டன் மாவட்டங்களில் நாலு மணி] தொடக்கம் மாலை ஐந்து மணி [பதுளை, அட்டன் மாவட்டங்களில் நாலு மணி] வரை பேச்சுப் போட்டி நிகழும். நண்பகல் ஒரு மணித்தியாலயம் உணவுக்கு இடைவேளை கொடுக்கப்படும். ஒரு நாளில் போட்டி முடியாது விட்டால் தொடர்ந்து அடுத்த நாட்களிலும் நிகழும்.

(2) பேச்சாளர்கள் குறித்த நேரத்திற்கு மண்டபத்தில் நிற்க வேண்டும். சிறிது நேரம் [அரை மணி கூடியது] பிந்தி வருபவர்களைத் தலைவர் விரும்பினால் மண்டபத்தில் அனுமதிப்பார்.

(3) பேச்சாளரது கருத்து வளம், மொழிவளம், ஆழ்த்துவம் [நிலை, தொனி, அசைவு] பேச்சுத்திறன் என்பவற்றிற்குப் புள்ளிகள் அளிக்கப்படும்.

(4) சீட்டுக் குலுக்குதல் மூலம் பேச்சாளர்கள் வரிசைப்படுத்தப் படுவார்கள்.

(5) ஒவ்வொரு பேச்சாளரும் பத்து நிமிடம் பேச அனுமதிக்கப்படுவர். ஒன்பதாவது நிமிடம் தலைவர் மணியொலி செய்வார். தொடர்ந்து ஒரு நிமிடம் பேசிப் பேச்சை முடித்துக் கொள்ள வேண்டும். பேச்சு முடியாத விடத்து பத்து நிமிடம் முடிய அடுத்த மணி ஒலியைத் தலைவர் எழுப்புவார். அவ்வமயம் பேச்சை முடித்துக்கொள்ள வேண்டும்.

(6) வயது குறித்து நடுவர்கள் சந்தேகப்பட்டால் பிறப்பு அத்தாட்சிப் பத்திரம் காட்டத் தயாராக இருக்க வேண்டும்.

(7) போட்டி முடிவு, அடுத்து வரும் 'சுதந்திரன்' இதழில் வெளியாகும்.

(8) முதல் மூவரைத்தவிர, நடுவர்களின் முடிவுக்கு இசையப் பாராட்டத் தக்க பேச்சாளர்களுக்கும் பரிசுப் பத்திரங்கள் உண்டு.

(9) போட்டி முடிவு வெளியாகிய ஒரு வாரத்திற்குள் தெரிவு செய்யப்பட்டவர்கள் 'பாஸ்போட்' அளவு தங்கள் நிழல் படங்களைப் பேச்சுப் போட்டி அதிபர், சுதந்திரன், தபால் பெட்டி 1183, கொழும்பு-12. என்ற முகவரிக்கு அனுப்பி வைக்க வேண்டும்.

(10) பரிசுக்குரிய முதல் இருவர் கொழும்பில் நடைபெறும் இறுதிப் போட்டியில் சமுகமளிக்கத் தயாராக இருக்க வேண்டும்.

(11) விண்ணப்பத்தில் குறிப்பிட்டுள்ள தலைப்பிலேயே பேச வேண்டும்.

மர்மத் தொடர் கதை:

# புதுமைத் திருடன்

—மாஸ்டர் சிவலிங்கம்—

காரின் ஆசனத்தில் ஏறி 'ஜம்' என்று அமர்ந்து கொண்டு, "பொலிஸ் நிலையத்தைக் கடந்துதானே போகிறீர்கள்? நானும் அது வரையில் வருகிறேன்...... எனது மோட்டார் சைக்கிள் பழுதடைந்து விட்டது......" என்றார் அந்த இன்ஸ்பெக்டர்.

இளைஞனுக்கு வியர்த்துக் கொட்டியது மட்டுமின்றி, உடல் பூராவும் நடுங்கவும் ஆரம்பித்து விட்டது. இளைஞனைப் பார்த்து இன்ஸ்பெக்டர் இலேசாகச் சிரித்தார். அவருடைய சிரிப்பு அவனை என்னவோ செய்தது.

கார் பொலிஸ் நிலயத்தை அடைந்ததும், நிறுத்தப்பட்டது. பொலிஸ் அதிகாரி தமது நன்றியைத் தெரிவிக்கும் பாவனையில், "மிஸ்டர்! வாருங்கள் தேநீர் சாப்பிட்டு விட்டுப் போகலாம்..." என்று இங்கிதத்துடன் அழைத்தார்.

இளைஞன் எவ்வளவோ மறுத்துப் பார்த்தான். பொலிஸ் அதிகாரி விடுவதாகத் தெரியவில்லை. "என்னுடைய வேண்டுகோளை நீங்கள் தட்டக் கூடாது. வந்துதான் ஆக வேண்டும்..." என்று கூறிய பின், அவனால் மறுக்க முடியவில்லை.

மெள்ள இறங்கி, அவருக்குப் பின்னால் நடந்தான். பொலிஸ் நிலயத்திற்குள் நுழைந்ததும்... அவனுடைய மனம் 'திக்திக்' என்று அடித்துக் கொண்டது. உடல்... இப்போதும் நடுங்கிக் கொண்டேயிருந்தது.

இளைஞனைத் தமது பிரத்தியேக அறைக்கு அழைத்துச் சென்று உட்காரும்படி சொல்லிவிட்டு எதிரிலிருந்த கதிரையில் அவர் அமர்ந்து கொண்டார். மேசை மீது கிடந்த சில கடிதங்களின் மூலம் இன்ஸ்பெக்டரின் பெயர் வினோதராஜ் என்பதை இலகுவில் அறிந்து கொண்டான்.

பழுதடைந்த தமது மோட்டார் சைக்கிளைப் பற்றி மூச்சுவிடாமல் பேசிக் கொண்டிருந்தார் இன்ஸ்பெக்டர். அவருடைய பேச்சு அவனுடைய பொறுமையைச் சோதிப்பது போலிருந்தது. அங்கிருக்கும் ஒவ்வோர் நிமிடமும் ஒவ்வோர் யுகமாக அவனுக்குப்பட்டது. வெளியில் செல்வதற்காகத் துடித்துக் கொண்டிருந்தான்.

பொலிஸ் இன்ஸ்பெக்டரோ இலகுவில் தனது பேச்சை முடிப்பதாகத் தெரியவில்லை. "இலகுவில் மேடை கிடைக்காத பிரசங்கிக்கு எப்போதாவது அபூர்வமாக மேடை கிடைத்து விட்டால் கூட்டத்தினர் அலுத்துக் கொள்ளுமட்டும் பேசுவதைப்போல, பொலிஸ் அதிகாரியும் தொண தொணவென்று பேசிக்கொண்டிருக்கிறாரே' என்று மனதிற்குள் முணுமுணுத்துக் கொண்டான் அவன். அப்போது...

ஒரு பணியாள் மெல்ல வந்து எட்டிப் பார்த்தான். அவனிடம் ஏதோ சைகை காட்டினார் அதிகாரி. இளைஞனுக்குப் 'பகீர்' என்றது. ஒன்றும் புரியாமல் அசடு வழியச் சிரித்துக் கொண்டிருந்தான்.

சிறிது நேரத்திற்கெல்லாம் பணியாள் இருவருக்கும் தேநீர் பரிமாறினான். தேநீர்க் கோப்பையை வாங்கும் போதும், இளைஞனின் கரம் இலேசாக நடுங்கிக் கொண்டுதான் இருந்தது. இருவரும் தேநீர் அருந்திக் கொண்டிருக்கும் போது......

ஒரு பொலிஸ்காரர் உள்ளே நுழைந்து 'சலூட்' செய்துவிட்டு இன்ஸ்பெக்டருக்கு மிக அருகில் சென்று அவருக்கு மட்டும் கேட்கக் கூடியதாக ஏதோ கூறிக் கொண்டிருந்தார்.

அதே நேரத்தில்... அங்கிருந்த தொலைபேசி அலறியது. இன்ஸ்பெக்டர் தொலைபேசியை எடுத்துப் பேசினார். அடுத்த வினாடி...! அவருடைய முகம் மிகப் பயங்கரமாக மாறியது.

"ஹலோ......! என்ன......! வாடகைக் காரொன்று 'அபேஸ்' பண்ணப்பட்டு விட்டதா?..." என்று கேட்டவாறு இளைஞனைப் பார்த்தார். அவன்...!

(தொடரும்)

# நீவிர் அறிவீர்!

உலகில் அதி உயரமான இடத்தில் இருக்கும் நாடு 'திபெத்'. இதன் பரப்பு ஏழு லட்சம் சதுர மைல். இது 10,000 அடிக்கு மேல் இமயமலையின் உச்சியில் இருக்கிறது.

உலகில் உள்ள பாலை வனங்களில் அதி பயங்கரமானதும் பெரியதுமான பாலைவனம், சகரா. இதன் விஸ்திரணம் 35 லட்சம் சதுர மைல். இங்கே ஒரு வகையான விஷ நாகம் ஜீவிக்கின்றது.

உலகில் உள்ள மாளிகைகளில் மிகப்பெரியது இத்தாலியின் தலைநகரான ரோம் நகரில் உள்ள 'வாதிகான்' மாளிகை. இது 1145ம் ஆண்டு நிர்மாணிக்கப்பட்டது. இங்கே 20 பெரிய மண்டபங்களும் 11,000 அறைகளும் உள்ளன. இதுதான் கத்தோலிக்க மதகுருவான போப் ஆண்டவர் வசிக்கும் மாளிகையாகும்.

உலகில் உள்ள நதிகளில் பெரியது அமெரிக்காவில் உள்ள மிஸிஸிபி என்ற நதி. இதன் நீளம் 4300 மைல். மிஸிஸிபியுடன் நூற்றுக் கணக்கான கிளை நதிகள் வந்து சங்கமமாகின்றன.

சேகரித்தவர்;
"சிந்தனைச் செல்வி"
ஏழாலை மேற்கு.

# நிழல்கள்

(10-ம் பக்கத் தொடர்ச்சி)

'ஒண்ணுமில்லை ராஜா!...... இந்தப் பக்கம் ஒரு 'சவாரி' வந்தனுன். அப்படியே உன்னையும் பாத்திட்டுப் போகலாம் எண்டு வந்தன். பாத்தாச்சு!......இனி நான் வரப்போறன்...அதுக்கு முந்தி ஒரு விசயம்......உன்னட்டை கதைக்க வேணும்! எல்லாத்துக்கும் இன்னொரு சமயம் வாறன்...சரி எப்போ ஊருக்குப் போருய் எண்டு சொல்! அண்டைக்கு வந்து உன்னை ஏற்றிச் செல்லுறன்! அப்ப அந்த விசயத்தைச் சொல்லுறன்! அப்ப நான் வரட்டுமா?' என்று சின்னராசவும் விடைபெறுகிறன்.

* *

சின்னராசா சொன்ன மாதிரியே வந்து விட்டான்!

காரில் ராஜாவும் சின்னராசா மட்டுமே இருக்கிறார்கள். கார் வளைந்து வளைந்து மலைப் பாதைகளில் நழுவி ஓடிக்கொண்டிருக்கிறது.

'சின்னராசா! நீ ஏதோ என்னட்ட பேசணுமெண்டாய். பேந்து அதைப் பற்றி ஒரு பேச்சையும் காணேமே!...' என்று காரினுள்ளே நிலவிய அமைதியைக் கலைக்கிறன் ராஜா!...

'ராசா!...இப்ப இருக்கிற நிலையில உன்ர ஆலோசனை தான் எனக்கு மிகவும் வேண்டியது! நீதான் இந்தச் சிக்கலைப் பார்க்கக் கூடியவன்!'

'என்ன சின்னராசா!... விளக்கமாத்தான் சொல்லேன்!'

'கனகத்துக்கு இப்ப எல்லாம் விசித்திரமான ஆசையெல்லாம் தோன்றுது! இப்ப அவளுக்கு அவங்கட அம்மா அப்பாவைப் பாக்கவேணும் போல கிடக்காம்! அங்க போக வேணுமாம்!......சின்னக் குழந்தைக்கு இங்க தனியா இருக்கப் பயமா இருக்காம்! நாங்க எந்த முகத்தோடே அங்க போக முடியும்! சொன்னுக் கேட்டாத்தானே!...'

'ஏன் இப்ப இந்த ஆசையெல்லாம் கனகத்துக்கு வந்திருக்கு!...'

'என்ன ராசா! முந்தி நான் சொன்னதை மறந்து விட்டாய் போலக்கிடக்கு!...அவ இப்ப உண்டாகி இருக்கிறு......!'

ஓ! இன்னொரு புத்தம் புது மலர் புஷ்பிக்கப் போகிறதா?

'அதுசரி!......இதில நான் என்ன உதவி செய்ய முடியும் உனக்கு?'

'கனகம் உண்டாகி இருக்கிறதை அவங்கட அம்மாட்ட சொல்லி, கனகத்தின்ர ஆசையைக் காதில போட்டு விட்டாப் போதும்! அவங்களே எங்களைத் தேடி வரமாட்டீனமா?' —என்று ஆவலுடன் ராஜாவைப் பார்க்கிறன், சின்னராசா!

'சின்னராசா உனக்கு என் நிலையைப் பற்றி ஒன்றுமே தெரியாது! அதனுல்தான் இப்படிப் பேசுருய்! இப்ப நான் புவனத்தின்ர வீட்டு வாசலுக்குக் கூட அடி எடுத்து வைக்க முடியாத பாவி நான்! இந்த உதவியை உனக்கு எப்படிச் செய்ய முடியும்!'—அவன் மனம் பரிதாபகரமாக இளகுகிறது.

'என்ன சின்னராசா! முந்தியைப் போல நீ நினைக்கிருய் என்னை! கனகம் ஓடியதிற்கே காரணம் நான்தான் என்று சுந்தையர் உறுமுகிருர். இப்ப இந்த எண்ணத்தோட நான் அங்க போனு கொலையே வரும்!...'—

கார் திடீரெனக் குலுக்கலுடன் நிற்கிறது.

'ஏன்...என்ன...என்ன நடந்தது?'

'ஒண்டுமில்லை ராசா! நீயே மறுத்தவுடன் எனக்கு கையும் ஓடேல்ல...காலும் ஓடேல்ல! ராசா இந்த நேர ஆசைகளை நிறைவேற்ருட்டா, அதுவே பெரிய குறையாக இருந்து பெரிய ஜீவனையும், சின்ன ஜீவனையும் பாதிக்கும் எண்டு சொல்வார்கள் ......கனகம் இல்லாட்டா நான் என்ன செய்வேன்?' சின்னராசாவின் விழிகளில் நீர் நிறைகிறது.

'என்ன, சின்னராசா இவ்வளவு அன்பு செலுத்துகிறுய் மனைவியிடம்? நான் என்ன அவமானப்பட்டாலும் அவனுக்கு உதவியே தீருவது தான்...இது நிச்சயம்' ராஜாவின் தீர்மானம் உறுதியாகின்றது.

'சின்னராசா! உங்களுக்கு நான் எப்படியும் உதவுகிறேன்! நீ கவலைப்படாதே!' கார் விரைகிறது!

* *

திருகோணமலை வீதியிலுள்ள, தெருக்கரையோரமாகவுள்ள ஒரு வீட்டின் வாசலில் போய், கார் நிற்கிறது.

'இறங்கு ராஜா! கனகத்தைப் பார்த்துவிட்டு நீ ரயிலுக்குப் போகலாம். அதுக்கு நேரமிருக்கிறது!...'

ராஜா இறங்குகிறன். முன்னறையும், இரண்டு அறைகளும் கொண்ட வீடது. எளிமையும், எழிலும் போட்டியிடுகின்றன. வீட்டின் மூலையில் ரேடியோ ஒன்றும் காணப்படுகிறது. தெருஜன்னல்களில் வானத்துணிகள் திரையாகக் கட்டியுள்ளது, அழகான காட்சி தருகிறது.

'கனகம் இங்க வாரும்!...... உமக்கொரு அதிசயம் இங்க இருக்கு!...'—என்று சின்னராசா உள்நோக்கிக் குரல் கொடுக்கிறன்.

'என்ன அது...அப்பேர்ப்பட்ட அதிசயம்!...'—என்றவாறு உள்ளிருந்து வருபவள் தானே—

'கனகமக்கா...'

ராஜாவுக்குத்தான் விழி பிதுங்குமளவிற்கு அதிசயம்!

சுடர்விட்டுத் தெறிக்கும் மோகன அழகு முகத்தில் ஒளிவிடுகிறது. தாய்மையின் சுமை கனக்கக் கனக்க ...கர்வம், ஆணவம், எல்லாம் அடங்கி ஒடுங்கி, சாந்தத்தின் உறைவிடத்தில் மறைவிடம் தேட, அழகு எழிலாட்சி புரிகிறது.

'என்ன ராஜா அப்படிப் பார்க்கிருய்?...கவனம் விழி, தெறித்துவிடப் போகிறது!

'பின்ன உன்னைப் பாத்தா அவன் திகைக்க மாட்டானு? உன்னை முந்திப் பாத்ததுக்கும், இப்ப பாக்கிறதுக்குமுள்ள வித்தியாசம் அவனுக்குத்தானே புரியும்! தினம் தினம் பார்த்துப் பழகும் எங்களால், நிமிடத்துக்கு நிமிடம் மாறும் உருவ வேறுபாட்டை உணர முடியுமா?'

'நீங்க பேசாம இருங்க!... ராஜாவுக்கு மயக்கம்தெளிய கோப்பி கொண்டு வாறன்' என்று உள்ளே செல்கிறுள்.

'ஒருக்கா இஞ்ச வாங்க!... உங்களைத் தானே!...' என்று கனகம் உள்ளிருந்து அழைக்க, சின்னராசா உள்ளேசெல்கிறன், மறுவிநாடி கலகலவென்று சிரித்துக் கொண்டு வெளி வருகிறன்.

'என்ன கூச்சம் கனகம் உனக்கு! நீயே வந்து விசாரியேன்! யாரோ எங்களுக்கு அன்னியமா? உங்கட ராஜா தானே...' என்கிறன்.

'என்னராசா! வீட்டில அம்மா, அப்பா, தங்கச்சி எல்லாம் சுகமா இருக்கினமா?'—தலையசைக்கிறன் ராஜா.

'அது சரி புவனம் என்ன செய்கிறுள்? இப்ப என்ன படிக்கிறுள்? பள்ளிக்கூடத்துக்குப் போறுளா?'

'இப்ப அவ பள்ளிக்கூடத்துக்கு போறதில்லைப்போல இருக்கு!...உங்கட கலைரதத்துக்குப் பிறகு பள்ளிக்குப் போறதை உங்கட அப்பா நிறுத்தி விட்டார்!...'

—கனகத்தின் முகத்தில் கவலையின் ரேகை படருகிறது.

'அப்பாவுக்குத்தான் எவ்வளவு மனத் துன்பம் என்னுல்!...என்னதான் மூர்க்கக் குணமெண்டாலும் என்னை ஒரு நேரமெண்டாலும் கலங்க விட்டிருப்பாரா?'

'இந்தா கனகம் உதுகளை விடு! உன்ர ஆசையை ராசா விட்டயும் சொல்லியிருக்கிறன்! அவன் ஏதாவதுமுயற்சி செய்வான்! சரிசரி ராஜா! உனக்கு ரயிலுக்கு நேரமாகி விட்டது! போகலாமா!'

'எப்படியாவது நீ எங்களை—அம்மா அப்பாவோட இணைத்து வைச்சுடு ராஜா! உன்னை உயிருள்ளளவும் மறக்க மாட்டேன்'—கனகம் வார்த்தைகளில் என்ன கலந்திருக்கின்றது? அவன் இதயம் உருகிவழிய விடைபெறுகிறுன்.

* *

'அட நான் வந்து இரண்டு கிழமைகளாகி விட்டனவா?...புவனத்தைக் காணவே முடியாதா?...கனகத்துக்கு என்ன பதில் சொல்வேன்!...'

'ராஜா...! இந்த உதவியை மட்டும் செய்து விடு!...... உன்னை என் உயிருள்ளவரையும் மறக்க மாட்டேன், என் குழந்தை தன் பாட்டியின் பராமரிப்பில்தான் உதிக்க வேண்டும் ராஜா!...'

அவள் கண்கள் நீரைச் சொரிகின்றன.

கனகத்துக்காகவா?...

தனக்காகவா?...

—(தொடரும்)

# கழகச் செய்திகள்

## திரியாய் மக்களின் அஞ்சலி

திரியாய் பொதுமக்கள் மறைந்த இராஜவரோதயத்திற்குத் தங்கள் அஞ்சலியைச் செலுத்த திரியாய் விநாயகர் ஆலயத்தின் முன்றலில் அநுதாபக் கூட்டம் நடாத்தினர்.

தலைமை வகித்த திரு. வ. பொன்னம்பலம் (கிராம சபையின் உறுப்பினர்) பேசுகையில், இராஜவரோதயம் போன்ற ஒளி விளக்கை இனி மேல் நாம் பெறுவதானல் பல நூற்றுண்டுகள் செல்லலாம், உத்தமர்கள் உலகில் ஒரு முறைதான் பிறக்கிருர்கள் என்று கூறினுர்.

அடுத்துப் பேசிய தமிழரசுக் கட்சியின் திருக்கோணமலைக் கிளைத் தலைவர் திரு. இ. சோமசுந்தரம் (நகராண்மைக் கழக உறுப்பினர், திருமலை) குறிப்பிட்டதாவது: கிழக்காசியா சிறந்த பாராளுமன்ற உறுப்பினரை—இழந்தது. அவரது மனைவி பொட்டிழந்து, பூவிழந்து விதவையானுர். தனயர்களை நல்ல பண்பான தந்தையைப் பறிகொடுத்தனர். தமிழரசுக் கட்சியின் கட்டுப்பாடான உறுப்பினர்களின் வரிசையில் நான்காவது தூண் சரிந்தது. முத்தமிழன்னை தமிழ்ப் பித்தனை இயற்கையிடம் ஒப்படைத்தாள். தமிழ் பேசும் மக்கள் விதி செய்த சதியை எண்ணிக் கண்ணீர் மல்கினர். துன்பத்தைத் துடைத்துவிட்டு அவர் விட்ட பணியினைத் தொடர்வோமாக".

அடுத்து திருவாளர்கள் நடராசா, ஈழத்து நாதன், வீரசுப்பிரமணியம் ஆகியோர் பேசினர். திரு. தா. சி. வில்வராஜ் இரங்கற் பாக்களைப்பாடினுர்.

## மறைந்த தலைவருக்கு அனுதாபம்

மேற்படி ஜன சமூக நிலயத்தில் அதன் தலைவர் திரு. த. இராசரத்தினம் தலைமையில் 15-9-63 நடைபெற்ற கூட்டத்தில் பாராளுமன்ற உறுப்பினர் திரு. இராஜவரோதயத்தின் மறைவு குறித்து இரு நிமிடங்கள் மௌனம் அனுஷ்டிக்கப்பட்டது.

தலைவர் குறிப்பிடுகையில், அன்னுர் ஓர் அரசியல் ஞானி மாத்திரமன்றிச் சமயப்பணிகளிலும் மேம்பட்டவரெனவும், திருக்கோணேஸ்வர ஆலய புனருத்தாரணத்திற்குத் திரு. இராஜவரோதயமே முக்கியஸ்தர் எனவுங் குறிப்பிட்டு, அப்பெரியாரின் குடும்பத்தினர்க்கு அனுதாபச் செய்தி அனுப்பப்பட வேண்டுமெனவும் பிரேரிக்கத் திரு. சி. வயித்திலிங்கம் அனுவதிக்கச் சபையோர் ஏகமனதாக அங்கீகரித்தனர்.

இச் சனசமூக நிலைய இளைஞர் கழகத்தால் நடாத்தப்படும் இரவு நேரப் பயிற்சி மன்றத்தில் இப்பொழுது 63 மாணவ, மாணவிகள் பயிற்சி பெறுகின்றமையால் ஜன சமூக நிலையக் கட்டிடத்தை, விஸ்திரணஞ் செய்து மன்றத்தை நிலையத்தில் நடாத்த வேண்டுமெனத் திரு. சி. பரமநாதன் பிரேரிக்க அதனைத் திரு. வி. சி. குஞ்சிதபாதம் அனுவதிக்கச் சபையோர் ஏகமனதாக அங்கீகரித்தனர்.

தனதிகாரி திரு. இ. செல்வமாணிக்கராசா வரவு செலவுக் கணக்கை வாசித்தார்.

## இளம் எழுத்தாளர் மறுமலர்ச்சி மன்றம்

திருகோணமலை ஜமாலியா ஜன சமூக நிலையத்தில் இளம் எழுத்தாளர் மறுமலர்ச்சி மன்றத்தின் அங்குரார்ப்பணக் கூட்டம் நடைபெற்றது. இக் கூட்டத்தில் திருக்கோணமலை எழுத்தாளர்கள், கவிஞர்கள், கலைஞர்கள் அனைவரும் கலந்து கொண்டனர். மன்றத் தலைவராகத் திரு. மலைமதி அவர்களும், செயலாளராகத் திரு. புரட்சிபாலன் அவர்களும், பொருளாளர் ஜனுப். அப்துல் ஸமது, பிரதம ஆலோசகர்களாக புலவர் வை. சோமாஸ்கந்தர், திரு. கு. செந்திவேல் ஆகியோரும் தெரிவு செய்யப்பட்டனர். கூட்ட இறுதியில் திருக்கோணமலையின் ஜோதி, அமரர் திரு. என். ஆர். இராஜவரோதயம் அவர்களின் மறைவுக்கு அனுதாபம் தெரிவுக்கும் முகமாக இரண்டு நிமிட மௌனம் அனுஷ்டிக்கப்பட்டது.

## ஆண்டு மலர் வெளியீட்டு விழா

திருகோணமலை நாவலர் கல்வி அரங்கில் "கதிரவன் ஆண்டுமலர்" வெளியீட்டு விழா அண்மையில் நடைபெற்ற பொழுது, விழாவில் பல கலைஞர்களும் கவிஞர்களும், எழுத்தாளர்களும் கலந்து கொண்டனர். புலவர் வை. சோமாஸ்கந்தர் தலைமை வகித்து, கதிரவன் ஆண்டு மலரையும் வெளியீடு செய்து வைத்தார்.

'கவியின்பம்' என்னும் பொருள் பற்றி இளம் எழுத்தாளர் மறுமலர்ச்சி மன்றத் தலைவர் திரு. மலைமதி பேசினுர். ஆண்டு மலர் சிறுகதைப் போட்டியில் "பொல்லாப் பசி" என்ற சிறுகதைக்காக முதற்பரிசு பெற்ற திரு. தம்பி சிவனுக்கு பரிசளிக்கப்பட்டது. மற்றும் திருவாளர்கள் தா. சி. வில்வராஜ், ஆ. அசனுர், திருமலை அன்பழகன், தம்பிசிவம், தி. அரியநாயகம் ஆகியோரும் உரை நிகழ்த்தினர். திரு. புரட்சிபாலன் நன்றியுரையுடன் கூட்டம் இனிது முடிந்தது.

## பாரதி விழா

பருத்தித்துறை இன்பத் தமிழ் மன்றத்தின் பாரதி விழா, மேற்படி மன்றமுன்றலில் அண்மையில் நடைபெற்றது. மன்றத் தலைவர் திரு. வ. அருணைநாயகம், ஆசிரியர், தலைமை வகித்துப் பேசுகையில், "வேறு வேறு பாஷைகள் கற்பாய் நீ— வீட்டு வார்த்தை கற்கிலாய் போ போ போ!" என்று பாரதியார் மொழிப் பற்றிலாமல் வாழும் மக்களைக் குறித்துப் பாடியதை, எடுத்து விளக்கிப் பேசினுர்.

மன்ற உபதலைவர் திரு. ஞானம் அல்போன்ஸ் பேசுகையில், பாரதியின் சுதந்திர உணர்ச்சியையும், அவர் பாரத சுதந்திரத்திற்கு ஆற்றிய தொண்டையும் எடுத்துக் கூறினுர்.

மற்றும், திருவாளர்கள் க. சோமசுந்தரம், வ. இராசையா, ஆ. செல்வத்துரை ஆகியோரும் உரை நிகழ்த்தினர். மன்றச் செயலாளர் செல்வன் கே. கணபதிப் பிள்ளையின் நன்றியுரையுடன் விழா இனிது முடிவுற்றது.

## பாரதி நினைவு தின முத்தமிழ் விழா

அராலி முருகன் சனசமூக நிலையத்தாரால் மேற்படி விழாவை முன்விட்டு 15-9-63 ஞாயிற்றுக்கிழமை நிலையத் தலைவர் க. நமசிவாயம் அவர்களின் கீழ் நடந்தேறிய போட்டி முடிவுகள்;

**பேச்சுப் போட்டி**

**ஆண்கள் கீழ்ப் பிரிவு**

(1) க. பாலசுப்பிரமணியம், (2) வி. கனகரெத்தினம்.

**பெண்கள் மேற் பிரிவு**

(1) ந. உருக்குமணிதேவி, (2) தே. சிவனேஸ்வரி.

**பெண்கள் கீழ்ப் பிரிவு**

(1) கு. ஞானேஸ்வரி (2) மா. கோகுலவதி.

**சயிக்கில் ஓட்டப் போட்டி**

(1) செ. தருமராசா, (2) க. நவரத்தினம், (3) வே. பரமநாதன்.

## திருமலைத் தீரர்...

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

தலைவர் ஒருவரை, தமிழ் காக்கத் தலைவர்கள் பலர் தேவைப்படும் இந்த நாளில், திடீரென இழந்து தவிக்கின்ற ஈழம் வாழ் தமிழ் மக்களுக்கு, "சுதந்திரன்" வாயிலாக எமது ஆழ்ந்த அனுதாபத்தினைத் தெரிவித்துக் கொள்ளுகிறேம்.

தங்களன்புள்ள,
எம். ஜி. ராமச்சந்திரன்



இப்பொழுது காண்பிக்கப்படுகிறது!

செல்லமஹால்
(கொட்டாஞ்சேனை)

வின்ஸர்
(யாழ்ப்பாணம்)

இம்பீரியல்
(மட்டக்களப்பு)

நெல்சன்
(திருகோணமலை)

ரீகல்
(கம்பஹா)

*எஸ். எஸ். ராஜேந்திரன் *விஜயகுமாரி
*கல்யாண் குமார் * புஷ்பலதா
*பேபி சாந்தி *வி. கே. ராமசாமி
மற்றும் பலர் நடித்த

UP நீங்காத நினைவு

அக்டோபர் வெளியீடு!

எல்பின்ஸ்டன்
ரெக்ஸி
மற்றும் பல திரைகளில்!

சி. எல். ஆனந்தன், சரஸ்வதி, ஈ. வி. சரோஜா, அசோகன்
மற்றும் பலர் நடித்த

# வீரத் திருமகன்

தீபாவளி இன் விருந்து!

ரீகல் எல்பின்ஸ்டன் ரெக்ஸி

ஜெமினி கணேசன்—சாவித்திரி—கமலா லட்சுமணன்—மனோகர் தோன்றும்

# கொஞ்சும் சலங்கை (டெக்னிக் கலர்)

இலங்கையின் சரித்திரத்திலேயே முதன் முறையாகத் தயாரித்து வெற்றி கண்ட தமிழ் படம்!

நடிகர்கள்:
பி. எஸ். கிருஷ்ணகுமார்
★
ஜெயஸ்ரீ
★
மோகன்ராஜ்
★
வி. தங்கவேல்
★
சாந்தி
★
மாஸ்டர் பிரகாஷ்
முத்துவேலு

பின்னணி:
கேஎன் ரீஸ்வரி,
ஹருன் லந்தரா,
ஜீ. வாதராஜா,
குமாரவேல்,
ஜீ. எஸ். பீ. ராணி

இசையமைப்பு:
சவாஹிர்

இப்பொழுது காண்பிக்கப்படுகிறது!




கிங்ஸ்லி
(கொழும்பு)
பிளாஸா
(வெள்ளவத்தை)
வெலிங்டன்
(யாழ்ப்பாணம்)
மொடர்ன்
(பதுளை)
லக்ஷ்மி
(இரத்தினபுரி)
கல்யாணி
(நாவலப்பிட்டி)
விஜிதா
(ஹட்டன்)
சந்தியா
(கம்பளை)
ஜெமினி
(ராகலை)

# அக்டோபர் 3-ம் திகதி முதல் ஆரம்பம்!

சென்ட்ரல் [மருதானை] ராணி [யாழ்ப்பாணம்] ராஜேஸ்வரா [மட்டக்களப்பு]
லிபர்ட்டி [பதுளை] ஜோதி [திருகோணமலை] சென்ட்ரல் [நாவலப்பிட்டி]
நியூஜோதி [இரத்தினபுரி] ஓடியன் [கண்டி] லவினியா [நுகேகொடை]

புரட்சி நடிகர் வேங்கை வரிப் புலியுடன் பொருதும் காட்சி புதுமையாகப் படமாக்கப்பட்டுள்ளது.

எம். ஜி. ராமச்சந்திரன், பி. சரோஜாதேவி,
எம். ஆர். ராதா, எம். ஆர். ஆர். வாசு,
அசோகன், பி. கண்ணாம்பா, சின்னப்பதேவர்
மற்றும் பலர் நடித்த

# தாயைக் காத்த தனயன்

இசையமைப்பு: கே. வி. மஹாதேவன்
பாடல்கள்: கவிஞர் கண்ணதாசன்
டைரக்ஷன்: எம். ஏ. திருமுகம்



இப் பத்திரிகை சிலோன் நியூஸ் பேப்பர்ஸ் லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் கொழும்பு, பண்டாரநாயக்க வீதி, 194 ஏ, இலக்கத்தில் 1963-ம் வருடம் செப்டம்பர் மாதம் 29ம் திகதி ஞாயிற்றுக்கிழமை அச்சிட்டு பிரசுரிக்கப்பட்டது.